அமெரிக்காவைத் தாக்குவோம்
வீடியோவை வெளியிட்டது வடகொரியா
பக். 14-15

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

35°c - 25°c
தெளிவான வானிலை

சுடர் 31 | கதிர் 123 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 15, திங்கட்கிழமை 28.03.2016

முச்சந்தி முரளி



இதுக்குத் தானோ கப்ப லிலை வந்தவையள்....

## இலங்கை அகதி கழுத்தை அறுத்து தற்கொலை முயற்சி

சென்னை, மார்ச் 28
தமிழகத்தின் சேலம் பகுதியில் கழுத்தை அறுத்துக் கொண்ட இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.
திருவண்ணாமலை, இலங்கைத் தமிழ் அகதிகள் முகாமைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் சசிகுமார் என்பவரே இவ்வாறு தனது கழுத்தை அறுத்துக்கொண்டுள்ளார்.
இவர் கோவையில் பெயின்டராக வேலை செய்து பக். 24

# வடக்கு- கிழக்கு மக்களின் பிரச்சினைக்கு முன்னுரிமை

## புதிய அரசமைப்பு ஊடாகத் தீர்க்கப்படுமென்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, மார்ச் 28
வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் தீராது இருக்கும் முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும். அவ்வாறு அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்காத போது, எதிர்காலத்தில் மீண்டும் அந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவே செய்வார்கள். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.
எனவே, இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசு என்ற வகையில் முன்னுரிமையை நாம் வழங்கியிருக்கின்றோம். புதிய அரசமைப்பின் மூலம் அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதே எமது அரசின் நோக்கமாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
மக்கள் கருத்தறியும் நிகழ்விலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறியுள்ளார். இதன்போது அவர் தெரிவித்துள்ளதாவது:-
1948 ஆம் ஆண்டு முதல் இது வரை நமது நாட்டை ஆட்சிபுரிந்த அரசுகளினால் இதுவரை தீர்த்து வைக்கப்படாத பிரச்சினைகள் உள்ளதா? அப்படியிருப்பின் அதற்கான தீர்வுகள் என்ன என்பதே உங்களது கேள்வி.
நாம் 26வருடங்களுக்கும் அதிகமாக போருக்கு முகம் பக். 23

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் கோத்தாவுக்கு முக்கிய பதவி

### சிரேஷ்ட உறுப்பினர்கள் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 28
முன்னாள் பாதுகாப்புச் செயலாளரான கோத்தபாய ராஜபக்சவுக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் முக்கியமான பதவியொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு கட்சியின் சிரேஷ்ட தரப்பொன்று யோசனை முன்வைத்துள்ளது.
இந்தத் தீர்மானம் இன்னும் ஓரிரு தினங்களில் கட்சியின் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முன்வைக்கப்படவுள்ளது.
ராஜபக்ச என்ற பெயர் இந்த நாட்டின் அரசியலில் பிரபலமான சாதகமொன்றாகி யிருப்பதால், பக். 24

## ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வில் முல்லைத்தீவில் 366 பேர் சாட்சியம்

முல்லைத்தீவு, மார்ச் 28
காணாமற்போனவர்களைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக் குழு, முல்லைத்தீவில் நடத்திய அமர்வில் 366 பேர் தங்களுடைய சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளனர்.
காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவினால் இரண்டாவது கட்டமாக மேற்கொள்ளப்படும் சாட்சியப் பதிவுகளுக்கான அமர்வு கடந்த மூன்றுநாள்களாக முல்லைத்தீவு மாவட்டச்செயலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சாட்சியப் பதிவுகளின் போதே மாவட்டத்தைச் சேர்ந்த 366 பேர் தங்களுடைய சாட்சியங்களைப்பதிவுசெய்துள்ளனர்.
ஆணைக்குழுவின் முதல் நாள் அமர்வுக்கு சாட்சியங்களை பதிவு பக். 23

## திருமலைக் கடற்படை முகாமில் அமெ. கடற்படை அதிகாரி ஆய்வு

### கடற்புலிகள் தயாரித்த ஆயுதங்களையும் பார்வையிட்டார்



கொழும்பு, மார்ச் 28
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்கக் கடற்படையின் ஏழாவது கப்பற்படையணியின் கட்டளைத் தளபதியான வைஸ் அட்மிரல் ஜோசப் ஓகொயின், நேற்று கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்று ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.
கொழும்புத் துறைமுகம் வந்த யு.எஸ். எஸ். புளூ ரிட்ஜ் போர்க் கப்பலில் வந்த வைஸ்அட்மிரல் ஜோசப் ஓகொயின் நேற்று திருகோணமலையில் உள்ள கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தலைமை யகத்துக்குப் பயணம் மேற்கொண்டார்.
இதன்போது இலங்கைப் படை அதிகாரிகளுடன் ஆலோசனைகளை நடத்திய பக். 25

## சிறுவிளானில் நேற்று விபத்து தந்தை சாவு; மகள் படுகாயம்

அளவெட்டி, மார்ச் 28
சிறுவிளான் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில், தந்தை சம்பவ இடத்திலேயே சாவடைந்ததுடன், மகள் படுகாயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவத்தில் இளவாலை - பெரியவிளானைச் சேர்ந்த திரவியம் அகிலேஸ்வரன்(வயது - 38) என்பவர் சம்பவ இடத்தில் சாவடைந்ததுடன், அவரது மகளான அகிலேஸ்வரன் அகிலா (வயது - 15) படுகாயங்களுடன் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில், மகளுக்கு ஏற்பட்ட நெஞ்சுவலி காரணமாக, இளவாலை-விளான் பகுதியில் இருந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளில் செல்லும் போது, சிறுவிளான் பக். 25

சந்தர்ப்பங்கள் இருந்தும் விடுதலை கிட்டாதுள்ள 60 அரசியல் கைதிகள் பக். 06

## லாகூர் தாக்குதலில் 50 பேர் சாவு

லாகூர், மார்ச் 28
பாகிஸ்தானில், லாகூர் நகரிலுள்ள பூங்கா ஒன்றில் நேற்றிரவு இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் குறைந்தது 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.
இதில் சிறார்கள் பலரும் உயிரிழந்திருக்கலாம் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
சிறார்கள் விளையாடிக் கொண்டிருந்த இந்தப் பூங்காவுக்கு அருகில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (வ)

## காணாமற்போனோர் குறித்து பதிவு மேற்கொள்ளாமல் பல குடும்பங்கள்

### முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ளதாக ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

முல்லைத்தீவு, மார்ச் 28
போரின்போது காணாமற்போனவர்கள் தொடர்பில், கிராம சேவகர்கள், பிரதேச செயலகங்கள் முழுமையான பதிவுகளை மேற்கொள்ளவில்லை எனவும், இதனால் 50இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் எந்தவித பதிவுகளும் செய்யப்படாமல் இன்னமும் முல்லைத்தீவில் உள்ளன.
இவ்வாறு ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் முறையிட்டனர் துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த காணாமற்போனவர்களின் உறவினர்கள்.
முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று மூன்றாவது நாளாக இடம்பெற்ற காணாமற்போனவர்கள் தொடர்பில் விசாரணைகளை பக். 06

## நெருக்கடியிலிருந்து விடுபட ஒரு மணி நேரம் மின்வெட்டு

### அரசிடம் மின்சார சபை கோரிக்கை



கொழும்பு, மார்ச் 28
நாட்டில் மின்சாரம் தொடர்பாக ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக, நாளொன்றுக்கு ஒரு மணித்தியால மின்சாரத் தடையை நடைமுறைப்படுத்த வேண்டும் என இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள், அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.
மின் நெருக்கடி நிலைமை குறித்து மக்களுக்கு உண்மையை எடுத்துரைக்கும் நோக்கிலேயே இதை நடைமுறைப் படுத்தவேண்டும் என்று பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் தாண்ட வேண்டிய தடைகள், இலக்குகள் அதிகம்

## 'உதயன்' குழும பிரதம நிறைவேற்று அதிகாரி யசோதை சரவணபவன்

யாழ்ப்பாணம். மார்ச் 28

வேலை பார்க்கின்ற பெண்களைத் தான் இன்றைய சமூகம் உயர்வாக மதிக்கின்றது. இதற்குப் பெண்கள் தாண்ட வேண்டிய தடைகளும், அடைய வேண்டிய இலக்குகளும் அதிகமாக உள்ளன - இவ்வாறு உதயன் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி யசோதை சரவணபவன் தெரிவித்தார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச பெண்கள் தின நிகழ்வில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

'அடுப்பு ஊதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு? பெண்களைப் பூட்டி வைப்போம்' என்றொரு நிலை உருவாகியது. சென்ற நூற்றாண்டுவரை அந்த நிலை நீடித்துக் கொண்டே இருந்தது. அடிமைத் தளையைத் தகர்த்தெறிந்து ஆணுக்குப் பெண் சமம் என அறைகூவல் விடுத்தார் பாரதியார்.

அதன்பின் பெண் உரிமை மலரத் தொடங்கியது. இன்று பெண்கள் சகல துறைகளிலும் ஆண்களோடு சரி நிகராகப் பணி புரிகின்றனர். இது காலத்தின் கட்டாயமாகும்.

கடந்த இரண்டு தசாப்த காலங்களில் பெண்கள் தொடர்பாக எமது சமூகத்தில் ஏற்பட்டுள்ள சிந்தனை மாற்றத்தைப் பெண்கள் வாழ்வில் அதன் தாக்கத்தை நினைத்துப் பார்க்கும்போது பிரமிப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது.

கல்வி எந்த ஒரு சமுதாயத்திலும் மாற்றத்தை உண்டாக்கும் ஒரு சக்தியாகும். பெண்கள் கல்வி கற்கலாம் என அதற்குரிய தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் சுதந்திரப் பறவைகளாகச் சிறகடிக்கத் தொடங்கினார்கள். வேலை பார்க்கின்ற பெண்களைத்தான் இன்றைய சமூகம் உயர்வாக மதிக்கின்றது. இதற்குப் பெண்கள் தாண்ட வேண்டிய தடைகளும், அடைய வேண்டிய இலக்குகளும் இன்னும் எத்தனையோ உள்ளன.

சில ஊடகங்கள் பெண்களை விளம்பரப் பொருளாக இன்னமும் பார்க்கின்றன. இது கவலை தரும் விடயமாகும், அத்துடன் சீதனக் கொடுமை, ஆண்களின் வன் முறைகளும், வக்கிரங்களும் பெண்களைத் தினமும் பழியாக்கும் நிலைமையும் இன்று காணப்படுகின்றது. இது மாற வேண்டும். இந்த நிலை மாற வேண்டுமா னால் சமூகம் விழிப்படைய வேண்டும் என்றார். (ற-ஐ-21)

# மாவட்டக் கிளைக்குழுவுக்கு அறிவிக்காமல் கிளைக்குழுத் தேர்வுகள் இடம்பெறக்கூடாது

## தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ். மாவட்ட கிளைக்குழுவுக்குத் தெரியப்படுத்தாது, இடம்பெறும் கிளைக்குழுத் தேர்வுகள் இடம்பெறக்கூடாது எனவும் உள்ள நடை முறையைப் பின்பற்றாது, இடம்பெற்ற வட்டுக்கோட்டைத் தொகுதித் தேர்வு செல்லு படியற்றது எனவும் யாழ். மாவட்ட தமிழரசுக் கட்சிக் கிளைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட கட்சிக் கூட்டம் நேற்றைய தினம் மாட்டீன் வீதியில் உள்ள கட்சித் தலைமையகத்தில் ,மாவட்டக் கிளைத் தலைவர் பெ.கனகசபாபதி தலமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில், கட்சியை மாவட்ட ரீதியில் பலப்படுத்துவது , கட்சிக் கிளைத் தேர்வுகள் , கட்சியின் கடந்த காலத் தேர்வுகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

சகல தொகுதிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட குறித்த கூட்டத்தில், தொகுதிக் கிளைகளின் விடயங்கள் பற்றிய ஆராய்வின் போது, வட்டுக்கோட்டைத் தொகுதியைச் சேர்ந்த கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தமது தொகுதியில் இரு கிளைகள் தேர்வு செய்தமை தொடர்பில் மாவட்டக் கிளைக் குழுவுக்குக் கடிதம் அனுப்பியிருந்தார். இருப்பினும் அதற்கு உரிய பதில் கிடைக்கவில்லை. எனவே அந்தக் கடிதத்தை வாசித்து பதில் வழங்க வேண்டும் எனக் கோரினார்.

இதன்போது மாவட்டக் கிளைக் குழு, பேராசிரியர் சிற்றம்பலம் எழுதிய கடிதங்களைக் கூட்டத்தில் வாசித்துக் காட்டியதோடு, கட்சியின் யாப்பு மற்றும் கடந்த காலத் தீர்மானங்களையும் வாசித்துக் காட்டியது.

இறுதியில் மாவட்டக் கிளைக் குழுவுக்குத் தெரியபடுத்தாது இடம்பெறும் கிளைக்குழுத் தேர்வுகள் இடம்பெறக்கூடாது. குறித்த தேர்வுகளுக்கு முன்பே உள்ள நடைமுறையைப் பின்பற்றாது இடம்பெற்ற வட்டுக்கோட்டைத் தொகுதித் தேர்வு செல்லுபடியற்றது என இலங்கை தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (வ-101)

# மிரட்டியவர் பொலிஸ் காவலில்

ஐஸ்கிறீம் உள்ளிட்ட பொருள்களைச் சுகாதாரச் சீர்கேடாக வைத்திருந்தமை, விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டில் வழக்குத் தொடர முற்பட்ட போது, பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்து கொண்டார் என்று குற்றஞ் சாட்டப்படும் ஒருவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். ஊர்காவற்றுறையில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வாகனத்தில் குறித்த ஐஸ்கிறீம் பொருள்களை விற்பனைக்குக் கொண்டு சென்ற போது, அதனைப் பொதுச் சுகாதார பரிசோதகர் பார்வையிட்டுள்ளார். இதன்போது அவை சுகாதார சீர்கேடாக இருந்தமை கண்டறியப்பட்டது என்று பொதுச் சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் தெரிவித்தார்.

அதன்படி அந்த வாகனத்தை ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றுவிட்டு அதிலிருந்த சான்றுப் பொருள்களை எடுத்துச் சென்றிருந்தார்.

இவ்வாறு வாகனத்தைப் பொலிஸ் நிலையத்தில் நிறுத்தியபோது வெளியே இருந்து வந்திருந்த சிலரில் ஒருவர் தன்னை அச்சுறுத்தும் விதமாக நடந்து கொண்டார் என்றும் அது குறித்து ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் சஞ்சீவன் தெரிவித்தார்.

அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்து கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்படும் நபரை அங்கு நின்ற பொலிஸார் பிடித்துப் பொலிஸ் காவலில் வைத்துள்ளனர். இந்த விவகாரம் நீதிமன்றுக்குக் கொண்டு செல்லப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# பெண்கள் வலையமைப்பின் சர்வதேச மகளிர் தினவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அனுசரணையில் வட்டுக்கோட்டை பெண்கள் வலையமைப்பால் 'வன்முறையற்ற ஆற்றல் மிகு சமுதாயத்தை நோக்கி' எனும் தொனிப்பொருளில் நடத்தப்பட்ட சர்வதேச மகளிர் தினவிழா நேற்று நடைபெற்றது.

வலி.மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நேற்று காலை 9 மணியளவில் ஆரம்பமான இந்த நிகழ்வு உதயன் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி யசோதை சரவணபவன் தலைமையில் நடைபெற்றது.

பெண்களின் உரிமை பற்றி அதிகம் பேசிய மகாகவி பாரதியாருடைய, பெண்கள் எழுச்சி பாடலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், வட்டுக்கோட்டைப் பிரதேசத்தை சேர்ந்த பாடசாலை மணவர்களான பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மாணவர்களுடைய குழு நடனம், தேசிய ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்ட காரைநகர் யாழ்ரன் கல்லூரி மாணவர்களுடைய குழு நடனம் மற்றும் கும்பி நடனம் என்பன நடைபெற்றன.

அத்துடன் இந்த சர்வதேச பெண்கள் தினத்தில் மூத்த கலைஞர்கள், சாதனையாளர்களும் வட்டுகோட்டை பெண்கள் அமைப்பால் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட பார்வையாளர்களைக் கௌரவிக்கும் முகமாக மகிழ்வூட்டும் நிகழ்வு, பரிசளிப்பு வைபவம், பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன.





நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் இரஞ்சிதமலர் மோகனேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனும், கௌரவ விருந்தினர்களாக கோட்டைக்காடு கிராமிய வைத்தியசாலை பொறுப்பதிகாரி மருத்துவர் ரதினி காந்தநேசன், சுட்ட தரணி நாகேஸ்வரி சிவபாதம், வலி. மேற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், வலி.மேற்கு பிரதேசசபை செயலாளர் குணவதி சண்முகலிங்கம், மூளாய் சைவப்பிரகாச பாடசாலை அதிபர் சிவமலர் சுந்தரபாரதி, ஆயுள் வேத வைத்தியர் வரதராஜா விக்கினேஸ்வரி, சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி அதிபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வட்டுக்கோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்கள் அமைப்பினர், மாதர் சங்கப் பெண்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-ஐ-21)

# சுகாதாரச் சீர்கேடான 'யூஸ்' என சுகாதாரப் பரிசோதகர்கள் வழக்கு

## பொய்யான குற்றச்சாட்டு என உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாண நகரில் உள்ள பாடசாலைகளை அண்மித்துள்ள இடத்தில் உற்பத்தி செய்து விற்கப்படும் யூஸ் உற்பத்திகளில் சுகாதாரச் சீர்கேடு உள்ளது என்று அரச பகுப்பாய்வு ஆய்வு அறிக்கையின்படி பொதுச் சுகாதார பரிசோதகர்கள் வழக்குத் தொடர்ந்துள்ளனர். அதேவேளை திட்டமிட்டே குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குற்றஞ் சாட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு, நீதிமன்ற வழக்கும் தொடர்கிறது.

யாழ்.நகரில் வேம்படி மகளிர் கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடைப்பட்ட வீதியில் குறித்த யூஸ் (சுவையூட்டிய பனிக்கட்டி) உற்பத்தி நிலையம் இயங்கி வருகிறது.

அங்கு உற்பத்தி செய்யப்படும் யூஸ் உள்ளிட்ட உற்பத்திகளில் சுகாதாரத் தொற்று உள்ளது என்று அரச பகுப்பாய்வு நிறுவன ஆய்வில் குறிப்பிடப்பட்டதை அடுத்து, குறித்த உற்பத்திக்கு எதிராகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

அங்கு சென்று பார்வையிட்ட போது உற்பத்தி செய்யும் இடத்தில் காற்றோட்ட வசதி இல்லை, உற்பத்திக் கழிவுகள் கழிவு வாய்க்காலில் கொட்டக்கூடாது. ஆனால் அந்தக் கழிவுகள் கழிவு வாய்க்காலில் கொட்டப்படுகின்றன. மலசலகூடத்துக்கும் கிணற்றுக்கும் இடையே போதிய இடவசதி இல்லை உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் குறித்த உற்பத்திதாரருக்கு எதிராகச் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அது பற்றிய ஆய்வின் போதே குறித்த உற்பத்தியில் சுகாதாரச் சீர்கேடு நிலவுகின்றது என்று அரச பகுப்பாய்வு அறிக்கை கூறுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் குறித்த குற்றச்சாட்டு பொய்யானது என்று குற்றஞ்சுமத்தியுள்ள அந்த யூஸ் உற்பத்தியாளரால் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு எதிராக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி பொதுச் சுகாதார பரிசோதகர்களும், பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்திய விடயத்தைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உறுதிப்படுத்தினர்.

குறித்த உற்பத்திகள் ஏனைய நீதிமன்றங்களின் எல்லைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் விற்பனை செய்யப்பட்டபோது சுகாதார சீர்கேடான உற்பத்திகளை விற்பனை செய்த குற்றத்துக்காக நீதிமன்றில் அபராதம் செலுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த உற்பத்திக்குக் கடந்த வருடமும் யாழ்.மாநகர சபையால் அனுமதி வழங்கப்படவில்லை. இந்த நிலையில் அதனை மீளத் திறக்க அதனை உற்பத்தி செய்பவர் முற்பட்டுள்ள நிலையில் வழக்கை எதிர்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணப் பெண்களுக்கு தற்காப்புக் கலை அவசியம்

## வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி ரதினி காந்தநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். மார்ச் 28

வடக்கு மாகாணத்தில் உள்ள பெண்கள் அனைவருக்கும் தற்காப்புக் கலைப் பயிற்சிகள் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். பாடசாலைகளில் பெண்பிள்ளைகளுக்கு கராத்தேயை கற்றுக் கொடுக்க வேண்டும். அரசு இதனை ஒரு சட்டமாகக் கொண்டு வரவேண்டும் - இவ்வாறு தெரிவித்தார் வட்டுக்கோட்டை பிரதேச வைத்திய சாலை பொறுப்பதிகாரி ரதினி காந்தநேசன்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச பெண்கள் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

பெண்களுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது. அவர்கள் எப்போதோ விடுதலை அடைந்து விட்டார்கள். ஆனாலும் எமது பிரதேசங்களிலே எங்கோ ஒரு மூலையில் இன்றும் பாலியல் வன்கொடுமைகளும், பெண்களுக்கெதிரான துஷ்பிரயோகங்களும் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

பெண்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களிடத்தில் துணிவு வர வேண்டும். இதற்கு அவர்கள் தற்காப்புக் கலையைக் கற்றுக் கொள்ள வேண்டும். வடக்கு மாகாணத்தில் உள்ளபெண்கள் அனைவருக்கும் தற்காப்புக் கலை கட்டாயம் கற்று கொடுக்கப்பட வேண்டும். இதை பாடசாலை மட்டத்திலேயே ஆரம்பிக்க வேண்டும்.

பாடசாலைகளில் பெண் பிள்ளைகளுக்கு தற்காப்புக் கலை என்று சொல்லப்படுகின்ற கராத்தே கலையை கட்டாயமாக கற்றுக் கொடுக்க வேண்டும். அப்போது தான் பெண்கள் தங்களிடத்திலே துணிவை வரவழைத்து தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வார்கள். பாடசாலைகளிலே தற்காப்புக் கலையை கற்பிப்பது சட்டமாக்கப்பட வேண்டும்.

அதே போல் ஆண்களுக்கு யோகா கலையைக் கற்பிக்க வேண்டும். எவன் ஒருவனுக்கு இறை நம்பிக்கை அற்றுப் போகின்றதோ, அல்லது இறைவனிடத்தில் பக்தி இல்லாமல் போகின்றதோ அப்போது தான் அவன் தீய பழக்க வழக்கங்களுக்கு ஆளாகின்றான்.

அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு சம்பவம் மாணவர்களால் பாடசாலை ஆசிரியர் தாக்கப்பட்டது. இதுவும் அந்த மாணவர்களுக்கு இறைவனிடத்திலே பக்தி இல்லை என்பதைத் தான் வெளிக்காட்டுகின்றது.

எனவே ஆண்களுக்கு யோகாவை கற்றுக் கொடுக்கும் போது அவர்களுடைய மனம் ஆன்மிகத்தின் மீது பக்தி கொள்ளச் செய்கின்றது. இதனால் அவர்கள் தீய பழக்கங்களுக்கு ஆளாகமாட்டார்கள். எனவே இதனால் பெண்களும் பாதுகாக்கப்படுவார்கள்– என்றார். (ற–ஐ–21)

பாராட்டி வாழ்த்துகிறோம்



ஆனந்தவேல்
செந்தூரன்
(யா/ ஹாட்லிக் கல்லூரி மாணவர்)

ஆனந்தவேல் அமிர்தகலா தம்பதிகளின் முத்த மகன் செந்தூரன் கடந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரணதரம் பரீட்சையில் 8A C பெறுபேறுகளைப் பெற்று சித்தி அடைந்ததோடு சதாபொன்ஸ் கல்வி நிறுவனத்தில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார். இவர் மேலும் உயர்தரம் பரீட்சையில் உயர் சித்திகளைப் பெற்று பல பட்டங்கள் பதவிகள் பெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

Best Wishes

பாராட்டி வாழ்த்துவோர்
மாமன்மார், சித்தப்பா, அன்ரி,
அபிக்குட்டி, அம்மம்மா

லக்கின
இம்முறை
தனயோகம்
உங்களுடையதா?
27.03.2016 | 1960 | ஊதா
கும்பம்
வெற்றி இலக்கங்கள்
01 38 43 51
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 20,00,000 /-

Galaxy Star
வெற்றி வாரம் 046
திகதி 27.03.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 13 14 54 55
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 24,84,200/-




## ரஹ்மானின் நிகழ்வுக்கு சென்னையில் எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 28

ஏ.ஆர்.ரஹ்மானின் கொழும்பு இசை நிகழ்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் முருகசேனை எனும் அமைப்பு சுவரொட்டிகளை ஒட்டியுள்ளது.

இசைப் புயல் ஏ.ஆர்.ரஹ்மானின் இசை நிகழ்வு கொழும்பில் ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கான விளம்பரப்படுத்தல்கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

தற்போது இந்த நிகழ்வுக்கு சென்னையில் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது. ஏ.ஆர்.ரஹ்மான் இலங்கைக்குச் செல்லக் கூடாது என்பதை வலியுறுத்தி சென்னையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் 'உலகத் தமிழினம் போற்றும் இசைமேதையே லட்சக் கணக்கான ஈழத் தமிழர்களை இனப் படுகொலை செய்த குருதிக் கறை படிந்த சிங்கள அரசோடு கை கோர்ப்பது நியாயமா ?' என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (ற–ஐ–5)

## அரசுக்கு எதிராகப் போராட வெளிநாட்டு நிதியுதவிகள்

### கோருவதற்கு கூட்டு எதிர்க்கட்சி முடிவு

கொழும்பு, மார்ச் 28

அரசுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுக்க வெளிநாட்டு நிதியுதவிகளைக் கோருவதற்கு கூட்டு எதிர்க்கட்சி தீர்மானம் எடுத்துள்ளது.

அதன் ஒருகட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்ச மற்றும் ரோஹித அபேகுணவர்த்தன ஆகியோர் கடந்த 20 ஆம் திகதி ஜப்பானுக்குச் சென்று நிதியுதவிகளைப் பெற்றனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் அவர்கள் எதிர்பார்த்த நிதியுதவிகள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் குறித்த இருவரும் சுமார் ஆயிரம் இலங்கையர்களை அழைத்து கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்யத் திட்டமிட்டனர். எனினும் 100 பேரே இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்தனர்.

ஜப்பானில் உள்ள பௌத்த பிக்குவை இந்தக் கூட்டத்துக்கு அழைத்த போதும், அவர் இலங்கையின் அரசியலில் தாம் தொடர்பு பட முடியாது என்று கூறிவிட்டார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவிருந்த போதும் இறுதி நேரத்தில் அவர் ஸ்கைப் மூலம் கூட்டத்தினர் மத்தியில் உரையாற்றியிருந்தார்.**

(ற–ஊ–9)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஆறுகால் மடம் அரசடி ஞான வைரவர் சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு நடைபெறும் பரிசளிப்பு விழாவும், கலை விழாவும் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன. அறிவொளி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.க.தம்பிராசா தலைமையில், சனசமூக நிலையத்தின் அறிவொளி கலையரங்கத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொள்ளவுள்ளார் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ற–ரி5)

வகுப்புக்கள்
ம் 4, 5 மாணவர்களிற்கான வகுப்புக்கள் வீட்டில் வந்து
ற்பிக்கப்படும். புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகூடிய
ள்ளிகளைப் பெறக்கூடிய வகையில் சிறந்த முறையில்
கற்பிக்கப்படும்.
77 711 2406, 077 465 2832

டு வாடகைக்குத் தேவை
ாழ்.நகருக்கு அருகில் (3km)
சிறிய குடும்பத்துக்கு வீடு
தேவை. வாகன இடவசதி
விரும்பத்தக்கது.
077 4?? 6?62, 071 04? 8?0?

மு/ மல்லாவி மத்திய கல்லூரி பெண் மாணவர் விடுதி பெண் பராமரிப்பாளர் தேவை

கீழ்வரும் தகைமை உடையவர்களின் விண்ணப்பம் மற்றும் கீழே கேட்கப்பட்ட ஆவணங்களுடன் 07.04.2016 ஆம் திகதி மு ப 10.00 மணிக்கு மு/மல்லாவி மத்திய கல்லூரிக்கு சமுகம் கொடுக்கவும். தகுதியுடையவர்கள் தங்கள் வரவை 05.04.2016 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் தொலைபேசி மூலம் உறுதிப்படுத்தவும்.

**தகைமைகள்:-**
1) க.பொ.த உயர்தரம் 3 பாடம் சித்தி
2) ஆங்கில மொழியில் சிறப்புத் தேர்ச்சி (எழுத.பேச.வாசிக்க)
3) கணினி சிறப்புத் தேர்ச்சி
4) ஏனைய தகைமைகள்

**எதிர்பார்ப்புக்கள் :-**
1) தங்கி நின்று சேவையாற்றக் கூடியவராக இருத்தல்
2) 3 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றக் கூடியவராக இருத்தல்
3) வயதெல்லை 30-50 இடையில் இருத்தல்.
4) நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல்
5)சேவை மனப்பாங்குடையவராக இருத்தல்
6) தலைமைத்துவ பண்புகள் உடையவராக இருத்தல்

**பொருத்தமானவர்களுக்கு 3 நேர உணவு, தங்குமிடம், மாதாந்த கொடுப்பனவு 40,000 ரூபா வழங்கப்படும்.**

தொடர்பு :- 021 206 0735 விடுதி நிர்வாகம்
077 368 3144 மு/ மல்லாவி மத்திய கல்லூரி

கண்ணீர் அஞ்சலி



எமது கழக முன்னாள் தலைவரும் கழக அங்கத்தவருமான **வை . சிவநேசன்** மற்றும் கழக ஆர்வலர்களான **சிவகுமார், சிவசங்கர்** ஆகியோரின் அன்புத் தாயார் **திருமதி மகேஸ்வரி வைத்தியநாதர்** அவர்கள் 25.03.2016 காலமான செய்தி அறிந்து துயரடைவதுடன் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறை வனைப் பிரார்த்திக்கிறோம்.

**வளர்மதி முன்னேற்ற கழகமும்**
**வளர்மதி நிறை வாழ்வகமும்**
**சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் - மணற்காடு

# கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்

## ஆறாம் திருவிழா சிறப்பிதழ் 29.03.2016

**அம்பிகை அடியவர்களே!**

நிகழும் மங்களமிகு மன்மத வருடம் பங்குனித் திங்கள் 16ஆம் நாள் 29.03.2016 செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு அம்பாளுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளும் தொடர்ந்து அம்பாள் அதி விஷேட சாத்துப்படியுடன் குருந்தமர நிழலில் வீதியுலா வரும் அலங்கார காட்சி யும், இரவு 7.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், அம்பாள், விநாயகப் பெருமான், முருகப் பெருமான் சகிதம் மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகிய முத்துச்சப்பரத்தில் வீதியுலா வரும் அலங்காரக்காட்சியும் இடம்பெறும்.

## விஷேட நாதஸ்வர தவில் கச்சேரிகள்

தவில் மேதை தெட்சணாமூர்த்தி உதயசங்கர் குழுவினர்
நாதஸ்வர தென்றல் பாலமுருகன் குழுவினர்
நாதஸ்வர வித்துவான் கோவிந்தசாமி மாக்கையா குழுவினர்
நாதஸ்வர இளவரசன் நாகதீபன் குழுவினர்
நாதஸ்வர வித்துவான் சிவகுமார், சித்தங்கேணி
தவில் வித்துவான் வட்டூர் ராமநாதன் புதல்வர்கள்

## பிரமாண்ட இசை நிகழ்ச்சி




டீப்தி சுரேஸ் சௌந்தர்யா அரவிந்த் திவாகரன்

### சூப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பாடகர்கள்

### ஆகியோருடன் யாழ் பிரபல சாந்தன் இசைக்குழுவினர்

| முத்துச்சப்பரம் | மேடை அலங்காரம் | விஷேட ஒளி அமைப்பு |
|---|---|---|
| பஞ்சாட்சரம், இணுவில். | சந்திரன், கொக்குவில் | மேகவண்ணன், நாச்சிமார் கோயிலடி. |

அம்பிகை அடியவர்கள் யாபேரும் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து அம்பாளின் திருவருட் கடாட்சத்தைப் பெற்றுய்வீர்களாக.

- பஸ் போக்குவரத்து ஒழுங்குகள் பொலிஸ் பாதுகாப்பு ஒழுங்குகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- தயவு செய்து இரவு நிகழ்வுக்கு தங்களின் பாதுகாப்பு கருதி தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக் கொள்ளவும்.
- திருவிழா நிகழ்வுகள் யாவும் காலை 8 மணி முதல் karainagar.co இணையத் தளத்தின் ஊடாக நேரலையாக ஒளிபரப்பாகும்.

பெறுநர்,
வே.நடராசா
28.03.2016

**பகல் மகேஸ்வர பூஜை இடம்பெறும்**

குறிப்பு:- குறிப்பிட்ட நேரத்திற்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்

சுப்பிரமணியம் கதிர்காமநாதன் குடும்பம்
கணேசபிள்ளை பாலச்சந்திரன் குடும்பம்
ஆறாம் திருவிழா உபயகாரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வாதிகாரியாக மாறி விட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

## சாடுகின்றார் டிலான் பெரேரா



கொழும்பு, மார்ச் 28
இதுவரை காலமும் நாடாளுமன்றத்தில் சிறந்த ஜனநாயகவாதியாக இருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தற்போது சர்வாதிகாரியாக மாறி விட்டார். இவ்வாறு இரா ஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறந்த ஜனநாயகவாதி. நாடாளுமன்றத்தில் இதுவரை காலமும் அவர் அவ்வாறே செயற்பட்டு வந்தார். தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களை அவர் கேட்பதில்லை. தான்தோன்றித்தனமாகச் செயற்படுகின்றார். இந்த நிலைமை தொடர்ந்தால், நாம் தேசிய அரசில் இருப்பதைப் பரிசீலிக்க வேண்டிய நிலை ஏற்படும். ரணில் விக்கிரமசிங்க தனது அடையாளத்தை இழந்து இன்று வீரவன்சவாக மாறிக் கொண்டிருக்கின்றார்.
நாட்டின் பிரதான இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்துள்ளன. தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை நோக்காகக் கொண்டே இரண்டு கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைத்துள்ளன. இந்தச் சந்தர்ப்பம் நல்லதொரு சந்தர்ப்பம். இதனை வீணடித்து விடக் கூடாது – என்றார். (ற-ஐ-5)

# செல்வாக்கானோர் பட்டியலில் முதலிடம் பிடித்தார் பாப்பரசர்

கொழும்பு, மார்ச் 28
உலகில் செல்வாக்கு மிக்க பிரபலங்களின் பட்டியலில் பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் முன்னிலை பெற்றுள்ளார் என்று ஆய்வொன்றின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சுவிற்ஸர்லாந்தின் பிரபல ஆய்வு நிறுவனமொன்றால் நடத்தப்பட்ட ஆய்விலேயே உலகின் செல்வாக்கு மிகுந்தவர்களின் பட்டியலில் பாப்பரசர் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளார்.
இது 64 நாடுகளில் நடத்தப்பட்டது என்றும் இந்த ஆய்வில் பரிசுத்த பாப்பரசர் முதலிடத்திலும், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா 2 ஆம் இடத்திலும், ஜேர்மன் அதிபர் 3 ஆம் இடத்திலும் உள்ளனர் எனவும் அந்த ஆய்வின் முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை உலகின் செல்வாக்குள்ள பிரபலங்களின் உத்தேச பட்டியலை அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'டைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.
இந்த ஆய்வின் முடிவில் இந்தியப் பிரதமர் மோடி, ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, பொலிவூட் நடிகை பிரியங்கா சோப்ரா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ற-ஐ-109)

# அனல் மின் நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் போராட்டம்

மூதூர், மார்ச் 28
மூதூர் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சம்பூர் பகுதியில் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ள அனல் மின்சார நிலையத்துக்கு அமைதியான எதிர்ப்புப் போராட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.
இதன் போது அனல் மின் சாரத்திட்டத்தை கைவிடுமாறு ஜனாதிபதியைக் கோரும் மனு ஒன்று கையளிக்கப்படவுள்ளது என்றும் நிகழ்வை ஏற்பாடு செய்துள்ள மூதூர் பசுமைக் குழு அமைப்பு தெரிவித்துள்ளது. (ற-ஐ-40)

**GENERATOR**

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட
5 முதல் 1000 KVA சக்தியுள்ள
**Kirloskar and Ashok Leyland**
டீசல் என்ஜின்களை கொண்ட
ஜெனரேட்டர்கள் விற்பனைக்குண்டு.
2 வாரங்களுக்குள் இறக்குமதி
செய்துகொள்ளலாம்.
விசேட விலையில் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு :
077-725 6982 / 0091 994 100 5202
E-mail ID : arun@dnmexports.com

**60 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
28.03.2016



முதல்தர வங்கியாம் இலங்கை வங்கியதில்
முப்பத்தைந்து ஆண்டுகள் செப்பிடும் வகையினில்
அரும்பணியாற்றி அகமகிழ்ந்து இளைப்பாறும்
கனிஷ்ட நிறைவேற்று உத்தியோகத்தர்
**உயர்திரு இராசக்கோன் புண்ணியராசா**
அவர்களின் ஓய்வுக்காலம் சிறப்புற பாராட்டி
வாழ்த்துவதுடன் இன்றைய தினத்தில் அவரது
60 ஆவது பிறந்ததின வாழ்த்துக்களையும்
தெரிவித்துக் கொள்கின்றோம்
முகாமையாளரும் ஊழியர்களும்
இலங்கை வங்கி
காங்கேசன்துறை, அளவெட்டி,
இளவாலை.
BANK OF CEYLON BOC

**ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் பணியாற்ற கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியானவர்கள் தேவை**

ஓம் சக்தி



**ஆலய சிவாச்சாரியார்கள்**

**தகைமைகள்:-** விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.
**கடமைகள் :-** ஆகம விதிப்படி ஆயைத்தில் பூசைகள் செய்தல்.
**வேதனம் :-** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளைக் கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.

**நாதஸ்வர, தவில் கலைஞர்கள் தேவை**

**தகைமைகள்:-** நாதஸ்வர தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்க வேண்டும்.
**கடமைகள் :-** ஆலய பூசைக்காலங்களில் மாங்கள இசை இசைத்தல்.
**வேதனம் :-** பிரித்தானிய வேதன முறைமைகளுக்கு அமைவானது.

விண்ணப்ப முடிவு திகதி
11.04.2016

விண்ணப்பங்களை கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்:
SHRI KANAGA THURRKAI AMMAN TEMPLE TRUST
No.5, Chapel Road, London, W13 9AE.
Email: info@ammancaring.com

**ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் அறக்கட்டளையின் பொங்கல் விழா நலத்திட்ட உதவிகள் 15.01.2016**



வன்னியில் வாழும் சிறார்களுக்கு காலணிகள் மற்றும் பாதணிகள், பாடசாலை பைகள் ஆகியன வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம்.

SHRI KANAGA THURRKAI AMMAN
TEMPLE TRUST
(Founded 10.08.1991)
Charity Number : 1014409

ஈழ மக்களின் வாழ்வை மீண்டும் கட்டி எழுப்ப
உங்கள் ஆதரவை அள்ளி வழங்குங்கள்.

BANK DETAILS NAME:
SKTA TEMPLE TRUST
LLOYDS BANK
SORT CODE : 30.98.91
Account No : 027 17 646

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயோதிப மாதுவை துஷ்பிரயோகம் செய்த விமானப் படைச் சிப்பாய் கைது

79 வயதுடைய வயோதிப பெண்ணொருவரை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் விமானப் படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் மாத்தறையில் இடம்பெற்றுள்ளது. குறித்த வயோதிபப் பெண் வீட்டில் தனியாக இருந்த போது, மோட்டார் சைக்கிளில் வீட்டுக்கு சென்ற குறித்த சந்தேக நபர் குறித்த பெண்மணியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இளைஞன் மாத்தறை குமாரதாச மாவத்தையைச் சேர்ந்தவர் எனவும் அவர் இரத்மலானை விமானப்படை முகாமில் பணியாற்றி வருபவர் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ஐ-4)

## சந்தர்ப்பங்கள் இருந்தும் விடுதலை கிட்டாதுள்ள 60 அரசியல் கைதிகள்

அரசியல் கைதிகளாக 146 பேர் உள்ள நிலையில் அவர்களில் 60 கைதிகளை விடுவிப்பதற்கு சந்தர்ப்பம் இருந்தும் அவர்கள் இதுவரை விடுதலை செய்யப்படாதுள்ளனர் என்று மீள் குடியேற்ற அமைச்சரும், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு இந்து கலாசார அமைச்சருமான சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட அமைச்சர், திருக்கோயில் பிரதேச செயலகத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

அரசியல் கைதிகள் விடயம் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனுடனும், மாவை சேனாதிராசாவுடனும், சுமந்திரனுடனும் நான் கதைத்துள்ளேன். 40 கைதிகள் விடுதலை செய்யப்பட்ட போதும் ஏனைய கைதிகளின் சாட்சியத்தைக் குறைத்து புனர்வாழ்வு அளித்து விடுதலை செய்யச் சட்டத்தில் இடமில்லை என்று சட்டத்தரணிகள் கூறுகின்றார்கள்.

இவ்வாறு சட்டத்தரணிகளே கூறினால் நாம் என்ன செய்வது. சட்டத்துக்கு மாறாக நான் எதனையும் செய்யமுடியாது. சட்டம் சட்டமாக இருக்கவேண்டும். சட்டத்தின் முன் யார் தவறு செய்தாலும் தண்டிக்கப்பட வேண்டும்.

மீள்குடியமர்வு சம்பந்தமாகவும், வீடுகள் கையளிப்பது சம்பந்தமாகவும் நாளுக்கு நாள் ஊடகங்களில் தவறான செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. பிரச்சினைகள் தெரியாமல் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்த்து சரியான விடயங்களை வெளியிடவேண்டும் – என்றார். (ற-ஐ-ரி)

## காணாமற்

நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வில், சாட்சியம் அளிக்கும் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்ட னர்.

இதன்போது, காணமற்போனோரின் உறவினர்கள் தமது முறைப்பாட்டில்:–

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இருந்து நாங்கள் இருக்கும் இடம் கிட்டத்தட்ட 100 கிலோ மீற்றருக்கு மேற்பட்ட பிரதேசம். இந்த விசாரணை என்று நாங்கள் பத்திரிகை வாயிலாகத் தான் அறிகின்றோம். அல்லது போனால் இங்கு இடம் பெறும் பதிவுகள் எமக்குத் தெரியாமல் போய்விடும். எங்களுடைய பகுதிகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்கள் காணமற்போனவர்கள் தொடர்பாக இன்னும் எந்தப் பதிவுகளும் இல்லாமல் இருக்கின்றார்கள். கிராம சேவையாளர்களோ, உதவி அரச அதிபர்களோ, காணாமற்போனவர்களின் பதிவுகளை ஒழுங்காக மேற்கொள்வதில்லை.

காணாமற்போனவர்களைக் கண்டறிவதற்குத் தான் காலதாமதம் என்றால், காணமற்போனவர்கள் எத்தனை பேர் என்ற உண்மையையாவது கண்டறிவது கட்டயாமானது. இதற்கு கிராமசேவையாளர், உதவி அரச அதிபர், மாவட்ட செயலகம் ஊடாக பதிவை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரை செய்ய வேண்டும்.

எமது பிரதேசத்திலிருந்து முல்லைத் தீவுக்கு வருவதென்பது பிரச்சினையாக உள்ளது. போக்குவரத்து உட்பட பல பிரச்சினைகள் உள்ளன. இன்றைக்கு (நேற்று) மாத்திரம் தான் எங்களுக்கு வாகன ஒழுங்கு செய்யப்பட்டது. ஏற்கனவே பதிவுகள் எடுத்த நிறுவனங்களும் முல்லைத் தீவை அண்டிய பகுதிகளிலேயேதான் கூடுதலான பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

தூர இடங்களிலும் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டால், ஏராளமான பதிவுகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் காணாமற்போனவர்களுடைய உறவினர்கள் தெரிவித்தனர். (து-வ-ரி7)


நெஞ்சை விட்டகலாத

7ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அமரர் கனகரத்தினம்
சுரேஸ்குமார் (சுரேஸ்)
(பணியாளர் -புதுக்குடியிருப்பு வைத்தியசாலை)
மலர்வு 16.08.1976 உதிர்வு 28.03.2009

என் குடும்ப கோபுரமே!
அற்புதமான வாழ்வில் இடி வீழ்ந்தது
அடைக்கலமான குருவியொன்று
அந்தரத்தில் கதறுது
தனிமைக்கு உறவாக இப் பூமி தனியே
வாழும் காலம் வரை உம் நினைவாய்
ஏங்கித் தவிக்கின்றேன் ஐயா

உங்கள் நீங்கா நினைவுகளுடன்
சு.பரிமளம் (மதி- மனைவி)
தாவளை, இயற்றாலை, வரணி.

அமரர் கந்தையா
ஜெயக்குமார் (ஜெயம்)
மலர்வு 17.05.1984 உதிர்வு 13.03.2009

அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் அணைத்த
எம் உடன்பிறப்பே எடுப்பான அழகும்
மிடுக்கான ஆளுமையும்
உன் இயல்பாகக் கொண்டவனே
ஆண்டுகள் ஏழு ஆனபோதும்
உன் நாமம் வரலாறாய் ஒலித்திடும்

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.
அப்பா, அம்மா, உடன்பிறப்புக்கள்,
அத்தான்மார், அண்ணிமார்.

(80777) (11,18)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் கஜந்தன் சந்தோஷி

திதி : அபரபட்ச பஞ்சமி (28.03.2016)



அமரர்
ஐயம்பிள்ளை நடராசா
(உரிமையாளர்-நியூமைதிலி ஜுவலர்ஸ், யாழ்ப்பாணம்)

வையத்துள் அறிமுகம் 06.07.2005

தெய்வத்துள் சங்கமம் 21.03.2014



அமரர்
பாலசிங்கம் உருத்திரசிங்கம்
(உரிமையாளர்-முருகன் ஸ்ரோர்ஸ்
112, நீர்கொழும்பு வீதி,
நாரம்பல, குருநாகல்.



கைதனில் ஏந்தி உன்னைக் கருத்துற வளர்த்த நெஞ்சம்
வெய்யவோர் கவலை கொண்டு வேதனை கொள்ளுதம்மா
பொய்யில்லா உந்தன் கண்கள் பொலிவற்று போனதென்று
பொய்யில்லா உறவோர் நாங்கள் பேதலித்து நிற்கின்றோம்
எம் இனிய தெய்வமே எம்மை விட்டு பிரிந்து
இருவருடங்கள் ஆனாலும் எங்களுடன் என்றும் இருக்கின்றாய்
எங்கள் குடும்பத்தில் நீ ஏற்றி வைத்த தீபம்
என்றும் பிரகாசமாக ஒளி வீசிக்கொண்டிருக்கும் அம்மா..



எமது குழந்தை தெய்வத்தின் இரண்டாம் ஆண்டு நினைவையொட்டி
இன்று (28.03.2016) திங்கட்கிழமை
சுன்னாகம் வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லத்தில்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

குடும்பத்தினர்
கஜந்தன்-துஷ்யந்தி
தம்பி: பிரவினாஷ், தங்கை: டினோஷி
நியூமைதிலி ஜுவலர்ஸ்
இல.38, 40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போயாவில் கள் உற்பத்தி தடைப்படுவதால் சிரமம்

## உற்பத்தியாளர்கள் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 28
உற்பத்தியாகும் கள்ளைத் தினமும் எடுக்காது விட்டாலோ அல்லது அவற்றைச் சுத்தம் செய்யாது விட்டாலோ உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும். போயா தினத்தில் உற்பத்தியாகும் கள்ளை சேமித்து வைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது. இதுகுறித்து மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று கள் உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

போயா தினத்தன்று கள் உற்பத்தியில் ஈடுபடுகின்றோம் என்று தெரிவித்து மதுவரித் திணைக்கள அதிகாரிகள் வழக்குகளைத் தாக்கல் செய்கின்றனர். எனினும் அவ்வாறான தினங்களில் உற்பத்தியாகும் கள்ளை என்ன செய்வது என்பது தொடர்பில் குறித்த அதிகாரிகள் எதுவும் கூறவில்லை என்றும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

போயா தினத்தன்று மேலதிக கள் வைத்திருந்தனர் என்று தெரிவித்து சாவகச்சேரி நீதிமன்றில் இருவருக்கு எதிராக அதிகாரிகள் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். குறித்த இருவருக்கும் நீதிமன்றால் அபராதம் விதிக்கப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

> போயா தினத்தன்று கள் உற்பத்தியை என்ன செய்வது தொடர்பான பிரச்சினை நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாக காணப்படுகிறது. பனை தென்னை மரங்களில் தினமும் காலை மாலை கள் உற்பத்தி செய்யும் பாளையைச் சீவித் துப்புரவு செய்யாவிடின், மறுநாள் கள் உற்பத்தியாகாது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். எனவே உற்பத்தியாகும் கள்ளைத் தினமும் அகற்றிச் சேமிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

போயா தினத்தன்று கள் உற்பத்தியை என்ன செய்வது தொடர்பான பிரச்சினை நீண்ட காலமாக தீர்க்கப்படாத பிரச்சினையாக காணப்படுகிறது. பனை தென்னை மரங்களில் தினமும் காலை மாலை கள் உற்பத்தி செய்யும் பாளையைச் சீவித் துப்பரவு செய்யாவிடின், மறுநாள் கள் உற்பத்தியாகாது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். எனவே உற்பத்தியாகும் கள்ளைத் தினமும் அகற்றிச் சேமிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது.

போயா தினத்தில் மது வகைகள் விற்பனை செய்யக்கூடாது என அரசால் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அன்று உற்பத்தி செய்யக்கூடாது என குறிப்பிடப்படவில்லை. தென்னை பனை மரங்களில் ஒரு நேரம் பாளை சீவி துப்புரவு செய்யாவிடின் மறுநாள் பாளையிலிருந்து கள் ஊறுவது நின்றுவிடும். ஏனைய மதுபான உற்பத்திகளில் அவ்வாறில்லை.

தன்பாட்டில் உற்பத்தியாகும் திரவமே கள். கசிப்பு போன்றோ சாராயம் போன்றோ கள்ளை மனித வலு மூலமாக உற்பத்தி செய்யப்படுவதில்லை. கசிப்பு, சாராயம் என்பனவற்றை ஒரு நாளோ, பல நாளோ உற்பத்தி செய்யாது விடலாம். கள் அப்படியில்லை என்று அனைவருக்கும் தெரியும். அதிகாரிகளுக்கும் தெரியும்.

இந்த நிலையில் போயா தினத்தன்று உற்பத்தியாகும் கள்ளை நாம் ஊற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.ஏனெனில் அவற்றை மரங்களில் இருந்து இறக்கிக் கொண்டு செல்லும்போது அதிகாரிகள் எம்மீது வழக்கு களைப் பதிவு செய்கின்றனர். அவ்வாறான தினங்களில் உற்பத்தியாகும் கள்ளை என்ன செய்வது என்பது குறித்து அதிகாரிகள் எமக்குத் தெளிவுபடுத்த வேண்டும். தெளிவுபடுத்தும் பட்சத்தில் நாம் இவ்வாறான பிரச்சினைகளில் சிக்கிக்கொள்ள நேரிடாது. இந்தப் பிரச்சினை நீண்டகாலமாகத் தொடர்ந்த வண்ணமுள்ளது. இது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சுக்களோ அல்லது சங்கங்களோ எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காதுள்ளமை கவலையளிக்கின்றது.

நாளாந்த வருமானத்தை நம்பியுள்ள கள் உற்பத்தியாளர்கள் இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எமது குடும்பங்களின் வாழ்வாதாரம், பிள்ளைகளின் கல்வி என்பனவும் பாதிக்கப்படுகின்றன.

குறித்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெளிவுபடுத்துவதன் மூலம் குறித்த தினங்களில் உற்பத்தியாகும் கள்ளை எவ்வாறு சேமித்துக் கொள்வது என்பது தொடர்பில் அறிந்து கொள்ள முடியும். இதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்று தெரிவித்தனர். (ற-ஐ-4,9)

## கைதிகளுக்கு பனம் கைப்பணிப் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 27
பனை அபிவிருத்திச் சபை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக் கைதிகளுக்குப் பனம் கைப்பணிப் பயிற்சி நெறி ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளது.

சிறைச்சாலையில் 20 வரையிலான கைதிகளுக்கு இந்தப் பயிற்சி வழங்கப்படும். பயிற்சி தொடர்ந்து மூன்று மாதகாலத்துக்கு நடத்தப்படும்.

பனம் கைப்பணியில் ஓலைச் சார்வு, தும்பு, ஈர்க்கில் போன்றவற்றில் இருந்து பொருள்களை எவ்வாறு வடிவமைப்பது குறித்த பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சியின் நிறைவில் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் உதவிகள் வழங்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-17)

## ஆசிரிய கலாசாலையின் இறுதிப் பரீட்சை இன்று

அச்சுவேலி, மார்ச் 28
ஆசிரிய கலாசாலைகளில் இரண்டு வருட ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் ஆசிரியர்களுக் கான இறுதிப்பரீட்சைகள் இன்று 28 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஏப்ரல் 2 ஆம் திகதி சனிக்கிழமை வரை ஆறு தினங்களுக்கு நடைபெறவுள்ளன.

இலங்கை பரீட்சைத்திணைக்களத்தால் நடத்தப்படும் ஆசிரிய கலாசாலை இறுதிப் பரீட்சை நாடளாவிய ரீதியில் எட்டு ஆசிரிய கலாசாலைகளிலும் நடைபெறவுள்ளன. பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்களுக் கான பரீட்சை அனுமதி அட்டைகள் சம்பந்தப்பட்ட ஆசிரிய கலாசாலை அதிபர்கள் ஊடாக பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மார்ச் 31 ஆம் திகதியுடன் இரண்டு வருட ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்த நிலையில் ஆசி ரிய கலாசாலை இறுதிப் பரீட்சை ஏப்ரல் 2 ஆம் திகதி வரை நடை பெறுவதால் ஏப்ரல் 4ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் புதிய பாடசாலை களில் கடமை யேற்றுக் கொள்வர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-11)



கல்வியங்காடு கட்டைப்பிராயை அண்மித்து கடந்த வியாழக்கிழமை மோட்டார் சைக்கிள் ஒன்று ஒட்டோவுக்குள் புகுந்து விபத்துக்குள்ளானது. இதே போன்ற விபத்து சில வாரங்களுக்கு முன்னர் வடமராட்சியிலும் நடந்திருந்தது. (ற-4,109)

## சுகாதாரச் சீர்கேட்டுடன் பாண் விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 28
உணவு அதிகாரியின் அனுமதி இன்றியும், சுகாதாரச் சீர்கேடாகவும் வெதுப்பக உற்பத்திப் பொருளான பாணை விற்பனைக்குக் கொண்டு சென்றவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் குறித்த நபர் சுகாதார சீர்கேடான முறையில் பாணைக் கொண்டு சென்றுள்ளார். மருத்துவ அறிக்கை வைத்திருக்காமை, பாண் வைக்கும் தட்டில் நச்சுப் பொருளான எரி பொருள் இருந்தமை, அச்சிடப்பட்ட தாளில் அவை வைக்கப்பட்டிருந்தமை, அதனைப்பாதுகாப்பான முறையில் கையாளாமை உள்ளிட்ட குற்றச் சாட்டுக்கள் குறித்த நபர் மீது சுமத்தப்பட்டுள்ளன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தெரிவித்தார். (ஐ-4)

## கிணற்றில் தவறி விழுந்த யுவதி நீரில் மூழ்கிச் சாவு

### இரவு குளிக்கச் சென்ற போது பரிதாபம்

வவுனியா, மார்ச் 28
இரவுநேரம் குளிப்பதற்குக் கிணற்றடிக்குச் சென்ற யுவதி தவறிக் கிணற்றுக்குள் விழுந்து நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் வவுனியா கோவில் புதுக்குளம், ஆலடி வீதியில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரன் சங்கீதா (வயது 23) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

நேற்றுமுன்தினமிரவு உறவினரின் திருமண வீட்டுக்குச் சென்றுவிட்டு இரவு 8 மணியளவில் வீட்டுக்குத் திரும்பியுள்ளார். வந்து அருகிலிருக்கும் வளவிலிருந்த தோட்டக்கிணற்றுக்கு குளிப்பதற்காகத் தாயுடன் அந்த யுவதி சென்றுள்ளார்.

அதன்போது கால் தடக்கி யுவதி கிணற்றுக்குள் தவறி விழுந்துவிட்டார். மகள் கிணற்றுக்குள் வீழ்ந்ததையடுத்து அருகிலிருந்த தாயின் அவலக் குரலைக் கேட்டு, இளைஞர்கள் உடனடியாகக் கிணற்றுக்குள் குதித்துபெண்ணை மீட்டு வவு னியா பொது வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் யுவதி உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அந்தக் கிணறு பாதுகாப்பான தாக இருக்கவில்லை என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரி விக்கப்பட்டுள்ளது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரிசிவநாதன்கிஷோர் இறப்பு விசாரணைமேற்கொண்டார். பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஐ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 65 ஆயிரம் வீட்டுத் திட்டம் தொடர்பில் தூரநோக்குடன் நாம் ஆராய வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடமாகாணத்தில் 21 இலட்சம் செலவுடன் பொருத்தப்படவுள்ள வீடுகள் தொடர்பில் எம்முடைய நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் தூர நோக்குடன் பார்க்க வேண்டும். முன்னர் இவ்வாறான கட்டடங்கள் இந்த நாட்டில் கட்டப்பட்டு அவை வரவேற்கத்தக்க முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதா?, அவற்றில் காணப்பட்ட நிறைகள், குறைபாடுகள் எவை என ஆராய வேண்டும். அண்மையில் ஜனாதிபதியிடம் கேட்டேன் இவ்வாறான பொருத்தப்படும் வீடுகள் இலங்கையில் வேறெங்காவது கட்டப்பட்டுள்ளதா? என்று. அவர் சிரித்துக் கொண்டு இல்லை என்றார். இந்த நடவடிக்கைகள் வடமாகாண சபையை எந்த விதத்திலும் கலந்தாலோசிக்காமல் எமது கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் எம் மக்களுக்கு, தான்தோன்றித்தனமாக உதவிகள் அளிக்க முன்வருவதே எமக்கு அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது - இவ்வாறு வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். இந்துக்கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நேற்று மு.ப. 10 மணிக்கு நடைபெற்ற 'காலத்தின் விளிம்பு' நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடமாகாண வீதி அகலிப்பு மற்றும் வீதிப் புனரமைப்பு தொடர்பாக நான் கடந்த காலங்களில் பல வெளிநாட்டு இராஜதந்திரிகளிடமும் பேசியிருக்கின்றேன். வீதி அகலிப்பு மற்றும் வீதிப் புனரமைப்பு என்பன மத்திய அரசு ஏதோ தமிழ் மக்களுக்கு உதவி புரிவது போன்ற வெளிப்பாட்டை ஏற்படுத்தியிருந்தாலும் உண்மை அதுவல்ல.

இவ்வாறான பெரும் செயற்றிட்டங்களை மத்திய அரசாங்கம் தன்கைவசம் வைத்து நடைமுறைப்படுத்தி வந்தது என்பதை விட, இராணுவத்தினர் சுலபமாக எம்மைக் கடுமையான கண்காணிப்புக்கு உட்படுத்தவே இந்த அபிவிருத்திகள் நடந்தன. வடபகுதி மக்களுக்கு உதவி புரிகின்றது என்ற மாயத் தோற்றத்தை உருவாக்கி தென் பகுதி மக்களுக்கும், அங்குள்ள வர்த்தகர்களுக்கும், இங்கிருக்கும் வளங்களைச் சூறையாடிச் செல்பவர்களுக்கும் உதவி செய்யவே இந்த வீதிகள் அமைக்கப்பட்டன. அண்மையில் மத்திய அரசின் அனுசரணையுடன் 37 மாடிக் கட்டடம் ஒன்றைத் தீவு ஒன்றில் சுற்றுச் சூழல் பற்றிய தகைமை அறிக்கை எடுக்காமல் கட்ட முனைந்தார்கள். எமது நில அமைப்பின் அடிப்படையில் ஒரு சிறிய தீவில் அப்பேர்ப்பட்ட கட்டடங்கள் உகந்ததாக அமையாததால், நாங்கள் அதனைத் தடுத்தோம். எமது படித்த இளைஞர், யுவதிகள் எம்மைச் சுற்றி நடப்பவை பற்றி விழிப்பாக இருக்க வேண்டும்.

> அண்மையில் மத்திய அரசின் அனுசரணையுடன் 37 மாடிக் கட்டடம் ஒன்றைத் தீவு ஒன்றில் சுற்றுச் சூழல் பற்றிய தகைமை அறிக்கை எடுக்காமல் கட்ட முனைந்தார்கள். எமது நில அமைப்பின் அடிப்படையில் ஒரு சிறிய தீவில் அப்பேர்ப்பட்ட கட்டடங்கள் உகந்ததாக அமையாததால் நாங்கள் அதனைத் தடுத்தோம். எமது படித்த இளைஞர் யுவதிகள் எம்மைச் சுற்றி நடப்பவை பற்றி விழிப்பாக இருக்க வேண்டும்.

வீடற்றவர்களுக்குப் புதிய வீடுகள் வழங்கும் நடவடிக்கைகளில் ஏதோ ஒரு நாட்டின் தேவைக்காக முன்னரே தயாரிக்கப்பட்ட வீட்டு அமைப்புகளை இங்கே எடுத்து வந்து எமது தட்ப வெப்ப நிலைகளுக்கு சற்றுமே பொருத்தமற்ற வகையில் அமைப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொள்கின்றனர். வீடுகளை அமைத்துக் கொடுப்பது வரவேற்கக் கூடியது. இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சுமார் ஐந்தரை இலட்சம் ரூபா செலவில் பயனாளிகளின் பங்களிப்புடன் ஒரு தொகுதி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இந்த வீட்டுத் திட்டங்களைப் பெற்ற சிலரே முழுமையாக அவற்றைக் கட்டி முடித்தனர். அவர்களில் பலர் கடனாளிகளாகவே மாறியுள்ளனர். வீடுகளை அமைப்பதற்கு சுமார் 8 இலட்சம் ரூபா வரையில் தேவைப்படுகின்றது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எனினும் இந்திய வீடுகள் இலவசமாகக் கொடுக்கப்பட்டன.

ஆனால் தற்போது பொருத்தப்படும் வீடுகளுக்கு சுமார் 21 இலட்சம் ரூபா வரையில் பெறுமதி வரையறுக்கப்பட்டுள்ளது. இது கடனாகப் பெற்றுக் கட்டப்படுவது. குறை வட்டியுடன் திருப்பிக் கட்ட வேண்டியது. அந்த வீடுகளின் அமைப்பு முறைகள் சூழலுக்குப் பொருந்தாமலும், மாரி காலத்தில் வீட்டினுள் நீர் புகுவதற்கும், வெயில் காலங்களில் அதி கூடிய வெப்பத்தை உணர வைப்பதற்கும், இலகுவில் தீப்பற்றக் கூடிய அல்லது எரிந்து போய்விடக்கூடிய தன்மைகளைக் கொண்டதாகவும், அதன் பெறுமதி சீமெந்தால் அமைக்கக் கூடிய இரண்டு வீடுகளை அமைக்கத் தேவைப்படும் செலவை விட அதிகரித்தும் காணப்படுவதாலேயே நாம் விமர்சிக்கின்றோம்.

தற்போது இவ் வீடுகளை அமைக்கின்ற நிறுவனம், அரச அதிபர், பிரதேச செயலர்கள் ஊடாக பயனாளிகளைப் பொறியில் விழுத்தக்கூடிய வகையில் ஒரு படிவத்தைத் தயாரித்து அதன் மூலமாக அவர்களின் விருப்பை வலிந்து பெற முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர். வட மாகாண சபையை எந்த விதத்திலும் கலந்தாலோசிக்காமல் எமது கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் எம் மக்களுக்கு, தான்தோன்றித்தனமாக உதவிகள் அளிக்க முன்வருவதே எமக்கு அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இன்று வடபகுதியில் பல்லாயிரக் கணக்கானவர்கள் வீடுகளை இழந்து சிறிய தகரக் கொட்டில்களிலும், ஓலைக் கீற்றுகளுக்குக் கீழும் வாழ்கின்றனர். இவ்வாறான குடும்பங்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டிகள் தருகின்றோம், சூரிய சக்தி மின்சாரம் தருகின்றோம், சமையல் வாயு சிலிண்டர்களுடன் கூடிய அடுப்புக்களைத் தருகின்றோம், மேசை, கதிரை, கட்டில், மெத்தை அனைத்தும் தருகின்றோம் என குறிப்பிடும் போது, எந்தவொரு குடும்பத்தவரும் அந்த வீட்டை ஏற்றுக்கொள்ளவே முன்வருவர். இதே செலவில் இரண்டு வீடுகள் அழகாக உள்ளூர் பாணியில் கட்டமுடியுமென்றால், சிங்கப்பூர் பாணி எதற்கு? ஒரு வீட்டுப் பணத்தில் இரு குடும்பங்களுக்கு வீடுகள் கிடைக்குமென்றால் ஒருவருக்கு ஏன் தொலைக் காட்சிப் பெட்டி பொருத்தப்பட்ட வீடு, மற்றவருக்குத் தொலை நோக்கி வீட்டுக்காகத் தவமிருக்கும் பாடு? இவ்வீடுகளை அறிமுகப்படுத்த இன்னொரு காரணமும் கூறப்படுகின்றது.

சமூகம் முன்னிலை அடைவதற்கு ஏற்ற வகையில் சமயல் வாயு அடுப்புக்களைப் பயன்படுத்துவதைத் தாம் அறிமுகம் செய்கின்றோம் என்று கூறப்பட்டுள்ளது. சிலிண்டர் முடிந்ததும் புதிய சிலிண்டர்களை எம்மக்களே வாங்க வேண்டியிருக்கும். விறகு அடுப்புக்கள் பாவித்தால் நெருப்புப் பற்றிக்கொள்வது உறுதி. ஒரு பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது - வெளிநாடுகளில் கழிக்கப்பட்ட இரும்புக் குவியல்களைக் கொண்டுவந்து கொட்டுவதற்கு இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன என்று. ஆகவே எம் கண்ணெதிரே எமது வாழ்க்கை முறை மாற்றப்படுகின்றது. இவற்றை மக்களாகிய நாங்கள் கருத்துக்கு எடுக்க வேண்டும்.

எமது மக்களுக்கு வீடுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு மத்திய அரசை விட மாகாண அரசு கடும் பிரயத்தனங்களில் ஈடுபட்டு வருகின்றது. 21 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படக் கூடிய இந்தப் பொருத்து வீடுகளை அமைப்பதற்கு பதிலாக சீமெந்திலான உறுதியான, வீடுகளை அமைக்க இந்த நிதி பயன்படுத்தப்பட்டால் 65 ஆயிரத்திற்குப் பதிலாக 150 ஆயிரம் பேருக்கு வீடுகளை வழங்க முடியும் என்ற கருத்தையே நாம் வலியுறுத்தி வருகின்றோம்.

உலக வங்கி போன்ற நாடுகளில் இருந்து வரும் நிபுணர்கள் நாங்கள் சிறிய மத்தியரக தொழில் முயற்சிகளை ஊக்குவிப்பதைப் பாராட்டுகின்றார்கள். எம்மவரில் சிலர் எம்மைச் சாடுகின்றார்கள். - என்று அவர் குறிப்பிட்டார்.

இன்றைய இந்த 'காலத்தின் விளிம்பு' புத்தக வெளியீடானது எமது மக்களின் அறிவுக் கண்ணைத் திறந்துவிடக்கூடிய ஓர் ஆரம்ப நிகழ்வாக அமையட்டும். இது போன்ற படைப்புக்கள் இன்னும் பல வெளிவர வேண்டும். அவற்றின் தாக்கத்தின் மூலம் எமது கலாசார அடையாளங்கள், வாழ்வியல் முறைமைகள், பழக்கவழக் கங்கள் ஆகியன பாதுகாக்கப்பட வேண்டும். அதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து கொண்டு பாடுபட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-ரி5)

# மக்களது உரிமைகளைப் பாதுகாக்கவே நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்டுள்ளது

## அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28

நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி மக்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே இந்த நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். சர்வதேச ரீதியிலும் எமது நாட்டுக்கு இருந்து வந்த அபகீர்த்தியும் இன்று நீங்கியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு சகலரது ஒத்துழைப்புக்களுடன் நாட்டை அபிவிருத்தி செய்யவுள்ளோம் - இவ்வாறு காணி சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

வடமாகாண மக்களது காணிப் பிரச்சினை குறித்து கருத்துக் கேட்ட போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடமாகாண மக்கள் எதிர்நோக்கி வரும் காணிப் பிரச்சினை தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி அது தொடர்பில் ஆராய்ந்து மக்களுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுக்கொடுப்போம். வடமாகாண மக்களது காணிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அது குறித்து நாம் ஆராய்ந்து உரிய தீர்வை வழங்குவோம். அவர்களது காணியில் அவர்கள் குடியமர்வது அவர்களது உரிமை. அதனைப் பறிக்க வேண்டியதேவைஎமக்கில்லை. எனவே இந்தப் பிரச்சினையில் காணப்படும் உண்மைத் தன்மையை ஆராய்ந்து முடிவெடுக்கப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தெற்கு என இன, மத பேதமின்றி சகலருக்கும் சம உரிமையை வழங்கி நாட்டில் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதே எமது நோக்கம். இதனைக் குழப்பி நாட்டில் மீண்டும் பிரிவினைவாதத்தை ஏற்படுத்துவதற்கு சில தரப்பினர் முயன்று வருகின்றனர். அதற்காக இனவாதம் என்ற ஆயுதத்தை கையில் எடுத்துள்ளனர் -என்றார். (ற-ரி)

# புதிய அரசமைப்புத் தொடர்பில் ஐயாயிரம் பேர் கருத்துப்பதிவு

யாழ்ப்பாணம், மார்ச் 28

புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசமைப்பு தொடர்பில் மக்களின் கருத்துக்களை அறியும் நடவடிக்கையில் இதுவரை ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் தமது கருத்துக்களை பதிவு செய்துள்ளனர் என்றும், அவற்றில் நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் பிரதானமாக முன்வைக்கப்பட்டுள்ளன என்றும் மக்கள் கருத்துக்களை பதிவு செய்யும் விசேட குழுவின் தலைவர் லால் விஜேயநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு அரசியல் தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்கி தமது கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர் என்றும் இந்த நடவடிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியல் அமைப்பு நடவடிக்கைகள் கடந்த சில மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்த நடவடிக்கையில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், இரண்டு மாகாணங்களைச் சேர்ந்த முதலமைச்சர்கள், மதத் தலைவர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டன.

அத்துடன் சிவில் அமைப்புகள் அரசியல் தலைவர்களிடம் இருந்து கருத்துக்களைப் பெறும் இறுதிக் நட்வடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதன் மூலம் தயாரிக்கப்படும் இறுதி அறிக்கை நாடாளுமன்றத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த அறிக்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படவேண்டுமென்ற கருத்து பிரதானமாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

(ற-ஜ-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழிப் பிரதேச சபையின் மலசலகூடம் இடியும் நிலையில்

சாவகச்சேரி மார்ச் 28
சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உபஅலுவலகத்தில் காணப்படும் மலசலகூடம் எந்நேரத்திலும் இடிந்து விழும் அபாய நிலையில் காணப்படுகின்றது. அதனால் பொதுமக்கள் அதனை உபயோகிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நாவற்குழி உப அலுவலக வளாகத்தில் உள்ள கலையரங்கில் அடிக்கடி கலை நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. கலையரங்கு அமைந்துள்ள பகுதியில் மலசலகூட வசதி இல்லாததால் உப அலுவலக மலசலகூடத்தையே உபயோகிக்க வேண்டியுள்ளது.

இந்த மலகூடம் நாவற்குழி கிராம சபை இயங்கிய காலத்தில் சுமார் 75 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டது.

அதன் கூரைப் பகுதி எந்நேரமும் இடிந்து விழும் அபாய நிலையில் காணப்படுகிறது.

இதன் கதவும் பழுதடைந்து காணப்படுகிறது. இதனைப் உபயோகிக்க முடியாத நிலையில் இயற்கை உபாதையைக் கழிப்போர் அயலில் உள்ள குடியிருப்புக்களை நாடிச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. உப அலுவலகத்துடன் பொதுநூலகம் காணப்படுவதால் தினமும் பெருமளவு வாசகர்கள் வந்து செல்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது

இந்த விடயம் தொடர்பாக உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது புதிய மலசல கூடம் அமைக்க கடந்த வருடம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் விரைவில் அமைக்கப்படும் என்றும் தெரிவித்த னர். (ற-ஐ-9)

# சாவகச்சேரியில் நான்கு நாள்கள் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடு

சாவகச்சேரி,மார்ச் 28
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நாளை தொடக்கம் ஏப்ரல் முதலாம் திகதி வரையான நான்கு நாள்களும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகர்பிரிவிலும், நாளை மறுதினம் சுகாதார பரிசோதகர் பிரிவிலும், எதிர்வரும் 31 ஆம் திகதி சாவகச்சேரி நகர் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவிலும், ஏப்ரல் முதலாம் திகதி மந்துவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெறவுள்ளன.

சுகாதார அமைச்சால் யாழ். மாவட்டத்தில் உள்ள 12 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில், கடந்த ஐந்து வருட பூச்சியியல் ஆய்வுகளின்படி யாழ்.மாவட்டத்தில் யாழ்.மாநகரசபை உள்ளடங்கிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மிக அதிக ஆபத்தான பிரதேசமாகவும், 8 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் அதிக ஆபத்துள்ள பிரதேசங்களாகவும், மூன்று பிரிவுகள் குறைந்த ஆபத்துள்ள பிரதேசங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அதிக ஆபத்தான பிர தேசமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அதையடுத்து நாளை தொடக்கம் நடைபெறும் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான நிலையில் காணப்படும் குடியிருப்புக்கள் மற்றும் காணிகள் என்பவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சால் அனுப் பப்பட்ட அறிவித்தல் பிரகாரம் யாழ். மாநகர சபை உள்ளடங்கிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மிக அதிக ஆபத்தான பிரதேசமாகவும், சாவகச்சேரி கோப்பாய், நல்லூர், கரவெட்டி, உடுவில், சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, பருத்தித்துறை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் அதிக ஆபத்தானபிரிதேசங்களாகவும், ஊர்காவற்றுறை வேலணை சங்கானை ஆகிய பிரிவுகள் குறைந்த ஆபத்தான பிரதேசங்களாவும் அறிவிக்கப்பட்டுள்ளன. (ற-ஐ-9)

## கணக்காய்வு விளக்கக் கூட்டம்

அச்சுவேலி, மார்ச் 28
கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்களுக்கான கணக்காய்வு விளக்கக் கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கங்கங்களின் தலைவர், பொருளாளர், செயலாளர்களைத்தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-11)



யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையம், குற்றப்பதிவுத் திணைக்களப் புகைப்படக் கூடம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பொலிஸ் நெத கண்காட்சி நேற்று முன்தினமும், நேற்றும் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. குறித்த கண்காட்சியில் பொலிஸ் திணைக்கள முன்னாள் பொலிஸ் மா அதிபர்கள் , பொலிஸ் திணைக்கள வரலாறு மற்றும் இலங்கையில் இடம்பெற்ற மோசமான குற்றச்செயல்கள், குண்டு வெடிப்புக்கள் இடர்கள் உட்பட பல விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (ற-ஐ-109)

## யாழ்ப்பாணத்தை சேர்ந்தவருக்கு ரூ.27 லட்சம் சுப்பர் பரிசு

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு நீரோஜா ரிக்கற்றின் மூலம் 27 லட்சம் ரூபா சுப்பர் பரிசு வெல்லப்பட்டுள்ளது.

10, 46, 56, 59 வெற்றி இலக்கம் லக் கினம் தனுசு கொண்ட சுப்பர் பரிசு 26 லட் சத்து 97ஆயிரத்து 310 ரூபா 50 சதம். யாழ்ப்பாண முகவர் எஸ். கனகலிங்கம் ஊடாக இந்தப் பரிசுத்தொகை வெல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல் யாதிக சம்பத் ரிக்கட் ஊடாகவும், இருபது லட்சம் ரூபாவை அண்மையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் வென்றுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-ரி)

## சுண்டிக்குளம் நீரேரியில் இறால் பிடிப்பு குறைவு

யாழ்ப்பாணம்,மார்ச் 28
வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் நீர் ஏரியில் இறால் பிடிப்புத் தற்போது குறைந்துள்ளது.

இந்த நீர் ஏரியில் இறால் அதிக அளவில் பிடிக்கப்பட்டதால் அதன் பெருக்கம் தற்போது குறைந்து செல்கின்றது. இந்த மாதம் வரைக்கும் இந்தப் பகுதியில் இறால் ஓரளவு பிடிக்கப்படலாம். அதற்குப் பின்னர் அவற்றின் பெருக்கம் முழுமையாகக் குறைந்து விடும் என்று கடற்றொழில் நீரியில் வள திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுண்டிக்குளம் கடலில் இருந்து ஆனையிறவு வரையான ஏரியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் இந்த இறால் பிடிப்பில் ஈடுபட்டு வந்தனர். தற்போதைய கடும் வறட்சி மற்றும் வெப்பத்தால் இந்த ஏரியில் கடல் நீரின் மட்டமும் வெகுவாகக் குறைந்து செல்கின்றது. (ற-ஐ-17)

## அதிக விலையில் பாண் விற்பனை



சாவகச்சேரி, மார்ச் 28
பாணின் விலை அரசினால் 4 ரூபா அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் வர்த்தகர்கள் மேலும் 2 ரூபா அதிகரித்துப் பாண் விற்பனை செய்கின்றனர் என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் பாணின் விலை 58 ரூபாவென அறிவிக்கப்பட்ட போதிலும், வர்த்தக நிலையங்களில் 60 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

வர்த்தக நிலையங்களில் மிகுதிப் பணம் கொடுப்பதற்கு இரண்டு ரூபா இல்லை என்று தெரிவித்து ஒரு இறாத்தல் பாணை 60 ரூபாவாக விற்பனை செய்கின்றனர் எனவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ற-ஐ-9)

## ரயிலுடன் மோதுண்டவர் சிகிச்சை பயனின்றி சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 28
அலைபேசியில் கதைத்துக் கொண்டு ரயில் தண்டவாளத்தைக் கடந்த போது ரயிலில் மோதுண்டு காயமடைந்தார் என்று கூறப்பட்ட இளைஞன் சிகிச்சை பயனளிக்காது நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

யாழ்.மானிப்பாய் வீதியைச் சேர்ந்த துரைசிங்கம் ஐங்கரன் (வயது 25) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார். மீசாலையில் இரவு நேரம் கடந்த 15 ஆம் திகதி குறித்த விபத்து இடம்பெற்றிருந்தது. அதன் போது கை முறிந்ததோடு இளைஞனும் மோசமாகக் காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மாற்றப் பட்டிருந்தார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்றுமுன்தினம் அவர் உயிரிழந்தார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-ஐ-4)

# நீர்வேலி - கரந்தன் வீதி விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 28
மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு பெரும் சேதப்பட்டு இருக்கும் நீர்வேலி கரந்தன் வீதி விரைவில் புனரமைக்கப்படும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
கடந்த பல வருடங்களாக புனரமைப்பு இன்றி சேதப்பட்ட நிலையில் உள்ள இந்த வீதியை ஆறு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாகாண சபையால் எனக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு இந்த வீதியின் புனரமைப்பு விரைவில் ஆரம்பிக்கப்படும். இந்தப் புனரமைப்புப் பணிகள் பெரும்பாலும் மே மாத அளவில் ஆரம்பிக்கப்படலாம் என்றும் கூறினார்.

கரந்தன் சந்தியில் இருந்து ஊரெழு சந்தி வரையான இந்த வீதி பெரும் சேதப்பட்டு குண்டும், குழியுமாகக் காணப்படுகின்றது. வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு படு மோசமாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளதால் அவை இந்த வீதியைத் தவிர்த்து ஏனைய வீதிகள் ஊடாகப் பயணித்து வருகின்றன. அதனைவிட பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், பொதுமக்கள் போன்றோரும் இந்த வீதியால் சிரமப்பட்டே பயணித்து வருகின்றனர். (ற-ஐ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தபாலகங்களில் வியாபாரத்தை ஊக்குவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28
குடாநாட்டில் உள்ள தபாலகங்களில் வியாபார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தபாலகங்களில் தற்போது முத்திரையின் விற்பனை குறைவடைந்துள்ளது. முத்திரை விற்பனை குறைவடைந்துள்ளதை அடுத்து தபாலகங்களில் மேற்கொள்ளப்படும், ஏனைய சேவைகளை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக மக்கள் மத்தியில் வியாபார ஊக்குவிப்பு செயற்பாடுகளில் தபாலகங்கள் ஈடுபட்டு வருகின்றன. மக்கள் வீட்டில் இருந்தவாறே மின்சாரக் கட்டணங்களைச் செலுத்தவும், தேசிய சேமிப்பு வங்கிச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய சேவைகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ற-ஐ-17)

# ஊடகத்துறை அமைச்சரும் குழுவினரும் நேற்று 'உதயனை' பார்வையிட்டனர்



யாழ்ப்பாணம், மார்ச் 28
ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தலைமையிலான குழுவினர், உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு நேற்றுக் காலை வந்திருந்தனர். அதன் போது உதயன் மீது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பான விடயங்களை அவர்கள் பார்வையிட்டனர்.

ஊடகத்துறை அமைச்சர் தலைமையில் தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் சுமார் நூறு பேர் வரையில் மூன்று நாள் பயணமாக வடபகுதிக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வந்திருந்தனர். இந்தக் குழுவினர் நேற்று ஊடக நிறுவனங்களுக்குப் பயணம் மேற்கொண்டனர்.

அதனடிப்படையில் உதயன் பணிமனைக்கு நேற்றுக் காலை வந்தனர். ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக மற்றும் பிரதி அமைச்சர் கரு பரணவிதான ஆகியோரை உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய ஈ.சரவணபவன் மற்றும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியோர் வரவேற்றனர்.

கடந்த காலங்களில் உதயன் ஊடகவியலாளர்கள், உதயன் ஊடகப் பணியாளர்கள் மற்றும் உதயன் பணிமனை மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் குறித்து ஒளிப்படங்களுடன் அமைச்சர் குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டது. அத்துடன் உதயன் பத்திரிகை நிறுவனத்துக்குக் கடந்த காலங்களில் கிடைத்த விருதுகள் மற்றும் உதயன் பணிமனைக்கு வருகை தந்த சர்வதேசத் தலைவர்கள் தொடர்பான ஒளிப்படங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் திகதி, உதயன் பணிமனைக்குள் அத்துமீறிப் பிரவேசித்த ஆயுததாரிகள் உதயனின் இயந்திரப் பகுதியைத் தீயிட்டு எரித்திருந்தனர்.

இதன் போது சேதமடைந்த இயந்திரத்தையும் அமைச்சர் குழுவினர் பார்வையிட்டனர்.

அத்துடன் நேற்றைய உதயனில் வெளியாகியிருந்த, 'ஊடகப் படுகொலைகளுக்கு நீதி விசாரணை நடக்குமென உறுதி கூறட்டும் அமைச்சர்' என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியையும் அமைச்சர் பார்வையிட்டார். இது தொடர்பில் ஜனாதிபதி - பிரதமர் ஆகியோருடன் பேசப்படும் என்று குறிப்பிட்டார்.

இதேவேளை அமைச்சருடன் வருகை தந்த தென்னிலங்கை ஊடகவியலாளர்களும், உதயன் மீதான கடந்த கால தாக்குதல்களைப் பார்வையிட்டனர். (ற-ஐ-5)






நேற்று வடக்குக்கு வருகை தந்த ஊடகத்துறை அமைச்சரும் குழுவினரும் உதயன் பணிமனையைப் பார்வையிட்டனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க கட்டளைக் கப்பல் கொழும்பை வந்தடைந்தது

கொழும்பு, மார்ச் 28
அமெரிக்க கடற்படையின் ஏழாவது கப்பல் படையணியைச் சேர்ந்த கட்டளைக் கப்பலான, யு.எஸ்.எஸ். புளூ ரிட்ஜ் ஆறுநாள் பயணமாக நேற்றுமுன்தினம் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.
கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த அமெரிக்கப் போர்க்கப்பலை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப், கடற்படைத் தளபதி, விமானப்படைத் தளபதி, இராணுவத் தளபதி, கூட்டுப்படைகளின் தளபதி மற்றும் அதிகாரிகள் வரவேற்றனர்.
அமெரிக்கப் போர்க்கப்பலுக்கு கடற்படையினர்பாரம்பரியமுறைப்படி வரவேற்பு அளித்தனர்.
இலங்கையுடனான அமெரிக்காவின் கூட்டை வலுப்படுத்தும் வகையில், யு.எஸ்.எஸ். புளூ ரிட்ஜ்ஜின் இந்தப் பயணம் அமைந்துள்ளது என்று அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்தார். (ந-ஐ-5)

# கிராம எழுச்சி திட்டத்தை மீளவும் ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 28
முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவினால் ஆரம்பிக்கப் பட்ட கிராம எழுச்சி (கம் உதாவ) நிகழ்ச்சித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
இதனடிப்படையில் சில தேர்தல் தொகுதிகளில் கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டம் மீண்டும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
1980 ஆம் ஆண்டுகளில் ஆட்சியிலிருந்த அரசு நாட்டின் நாலாபுறமும் வாழும் மக்களை நெருங்கும் பொருட்டு கிராம எழுச்சி நிகழ் சித்திட்டத்தை ஆரம்பித்து நடத்திச் சென்றது.
குறிப்பாக வறிய மற்றும் குறைந்த சிறப்புரிமைகளைக் கொண்டுள்ள மக்களை நெருங்கி அவர்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான புதிய உபாய முறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு இந்தத் திட்டத்தினூடாக நிறைவேற்றப்படுவதே இதன் பிரதான குறிக்கோளாக இருந்தது. அதேவேளை, தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தை அடிப்படையாக வைத்து கிராம எழுச்சி கண்காட்சியும் நடத்தப்பட்டது. எவ்வாறாயினும் 1990 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்த நவீன மயப்படுத்தும் உபாய முறை மற்றும் மேற்படி உபாய முறையின் அத்தியாவசிய கூறின் ஒன்றாகக் காணப்பட்ட கிராம எழுச்சி கண்காட்சி கைவிடப்பட்டது.
மனிதக் குடியிருத்தி அபிவிருத்தியை மையமாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட கிராம எழுச்சி எனும் இணைந்த அபிவிருத்தி முயற்சி மற்றும் அதனுடன் இணைந்ததாக நடத்தப்பட்ட கிராம எழுச்சி கண்காட்சியை இந்த வருடத்தில் இருந்து சில தேர்தல் தொகுதிகளை உள்ளடக்கும் வகையில் மீண்டும் ஆரம்பிக்க வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாசவினால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (த-5)

> 1980 ஆம் ஆண்டுகளில் ஆட்சியிலிருந்த அரசு நாட்டின் நாலாபுறமும் வாழும் மக்களை நெருங்கும் பொருட்டு கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து நடத்திச் சென்றது.

# பிரதமர் ரணிலின் சீனப் பயண முன்னேற்பாடுகள் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 28
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவுக்கு மேற்கொள்ளவிருக்கும் அதிகாரபூர்வ பயணம் தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் பீஜிங்குக்கு அனுப்பப்பட்டுள்ளார்.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏப்ரல் 6 ஆம் திகதி சீனாவுக்கான அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். இந்தப் பயணத்தின்போது பல்வேறு முக்கிய உடன்பாடுகள் குறித்து பேச்சு நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
பிரதமரின் இந்தப் பயணத்தை, இரண்டு நாடுகளும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கும் நிலையில், பயண ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் சீனாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.
இந்த அதிகாரி வெளிவிவகார அமைச்சில் பதவியேற்க முன்னதாக சீனாவில் தூதுவராகப் பணியாற்றியவர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.
(ந-ஐ-5)

# 12 வயதுச் சிறுமியின் மீது துஷ்பிரயோக முயற்சி

## குடும்பஸ்தர் ஒருவர் கைது

கொழும்பு, மார்ச் 28
பொகவந்தலாவ கிவ் கிழ்பிரிவு தோட்டத்தில் 12 வயதுச் சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்த 35 வயது குடும்பஸ்த்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.
பெற்றோர்கள் வீட்டில் இல்லாத போது வீட்டில் தனித்திருந்த சிறுமியிடம், அயலில் வசிக்கும் குறித்த நபர் பாலியல் துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்துள்ளார் என்றும், சிறுமி அவரிடமிருந்து தப்பித்து வந்து தனக்கு ஏற்பட்ட நிலையை ஏனையோரிடம் விவரித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
சம்பவம் தொடர்பில் முறைபாட்டைப் பதிவு செய்து கொண்ட பொலிஸார் கீழ்ப் பிரிவு தோட்டத்தில் வைத்து குறித்த நபரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
குறித்த சிறுமி பொகவந்தலாவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளதுடன், சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நாவலபிட்டி மாவட்ட வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார் என்று வைத்தியசாலையின் வட்டாரங்கள் தெரி வித்துள்ளன. (ந-ஐ)

# ஆறு அமைச்சர்கள் மீது விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, மார்ச் 28
ஆறு அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக, விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளார்.
வெளிநாட்டுப் பயணங்களின்போது, அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் ஆறு அமைச்சர்கள் தொடர்பாகவே குறித்த விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளன என்று ஜனாதிபதி செயலகத் தகவல்கள் கூறுகின்றன.
அதிகாரபூர்வ வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்ட இந்த அமைச்சர்கள், தமது பயண நோக்கத்தை மறந்து விட்டு, களியாட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டனர் என்று எழுந்த குற்றச்சாட்டை அடுத்தே, ஜனாதிபதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.
அரச பணத்தில் வெளிநாடு செல்லும் அமைச்சர்களுக்கு விதிமுறைகளை அறிமுகப்படுத்தவும், ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-ஐ-5)

## வாகனத்தை திருத்துவதில் அதிகாரிகள் பின்னடிப்பு

### குற்றஞ்சாட்டுகின்றார் மகிந்த

தமக்கு வழங்கப்பட்டிருந்த குண்டு துளைக்காத வாகனம் பழுதடைந்துள்ளது என்றும் அதனைத் திருத்துவதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக னத்தை பழுதுபார்த்துக் கொடுக்குமாறு பணிப்புரை விடுத்துள்ள நிலையில், ஜனாதிபதியின் செயலாளரும், ஏனைய அதிகாரிகளும் வாகனத்தை பழுதுபார்க்க ஆர்வம் காட்டவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அதேவேளை தனக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோக பூர்வ இல்லமும் இது வரை புனரமைக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-ஐ-5)

# கட்சி தாவவுள்ளார் சிறிபால டி சில்வா!

## கசிகின்றன தகவல்கள்

கொழும்பு, மார்ச் 28
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வது தொடர்பில் சில கருத்துகளும் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது என்று அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இது கொழும்பு அரசியல் மட்டத்தில் அதிகம் பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.
அமைச்சர் சிறிபால டி சில்வாவை இலக்கு வைத்து தாக்குதல் மேற்கொள்ள வேண்டாம் என்று, பதுளை மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ ஆலோசனை வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.
தொடர்ந்தும் தான் அரசியலில் ஈடுபடப்போவதில்லை எனவும், தனக்கு அரசியல் வெறுத்து போயுள்ளது என்றும் அமைச்சர் நிமல் சில மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.
அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் நிமல் சிறிபால டி சில்வா தகவல் வெளியிட்டிருந்தார். (ந-ஐ-5)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் திருமதி ரஞ்சிதபூஷணி அம்மா
பாலசுப்பிரமணியம்
(புங்குடுதீவு முதலாம் வட்டாரம்)
தோற்றம் 15.06.1946
மறைவு 02.03.2016

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடன் எமை வளர்த்து பார்புகழ வைத்து
இன்பமுடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
ஈசன் கழல் சேர்ந்தனையோ!
நெஞ்சிருக்கும் வரைக்கும் நாம் மறவோம்
உங்கள் நினைவால் என்றென்றும் வாழ்ந்திருப்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கடந்த 02.03.2016 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.03.2016) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலய புனித சமுத்திரக் கரையிலும். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் 31.03.2016 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
[இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தரவும்]

குடும்பத்தினர்.
இல.448, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
077 467 5096
021 320 0520

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஊடகவியலாளர் கோரிக்கைகளை நிறைவேற்றுவாரா அமைச்சர் கஜந்த?

தகவல் அறியும் சட்ட வரைவு நீண்ட இழுபறிகளுக்குப் பின்னர் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் தாக்கலாகி உள்ளது. கடந்த வியாழனன்று இந்தச் சட்ட வரைவை சபையில் தாக்கல் செய்தவரான ஆளுந்தரப்பு கொறடாவும் ஊடகத்துறை மற்றும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான அமைச்சருமான கயந்த கருணா திலக்க, ஊடகப்பிரதி அமைச்சர் கரு பரணகம மற்றும் சுமார் 100 தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் புடைசூழ யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டு இங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கடந்த கால நிலவரங்கள் குறித்து ஆராய்ந்து அறிந்து வருகின்றார்.

தகவலறியும் சட்டவரைபு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிறந்த தினமான கடந்த 24 ஆம் திகதி சபையில் தாக்கல் செய்யப்பட்டமை குறித்து மகிழ்ச்சி வெளியிட்டிருந்த அமைச்சர், நல்லாட்சிக்கு இந்தச் சட்டம் மிக அவசியமான ஒன்று என்றும் குறிப்பிட்டிருந்தார்.

தகவல்களைப் பெற்றுக் கொள்ள இருக்கும் உரிமைக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கவும், தகவல்களுக்கான உரிமை ஆணைக்குழுவை நிறுவவும், தகவலை பெறுவதற்கான நடவடிக்கைகளை வழங்கவும் அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளவும் குறித்த சட்டவரைவு தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தியா உட்பட பல நாடுகளில் நடைமுறையில் இருக்கும் சட்டங்களுக்கு ஒப்பு சட்டம் கொண்டுவரப் படுவது எம்நாட்டிலும் அவசியம் என்ற வகையில் முன்னைய ராஜபக்ச ஆட்சிக்காலத்திலேயே ஐ.தே.கவினரால் முன்மொழியப்பட்டிருந்தது அது கை கூடவில்லை. இப்போது ஐ.தே.க மற்றும் சிறிலங்கா சுதந்திரக்கட்சிகளின் நல்லாட்சியின் போதாகிலும் நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகம் எழுந்திருந்த சூழ்நிலையில் தான் அது நாடாளுமன்றத்துக்கு வந்திருப்பது பலராலும் வரவேற்கப்பட்டுள்ளது.

எனினும் பொதுமக்களுக்கு நன்மை புரிவதாகக் காணப்படும் இந்தச் சட்டமானது ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது எந்த வகையிலும் கட்டுப் பாடுகளைத் திணிக்கும் நோக்கத்தை கொண்டிருக்கலாகாது. இதையே ஜனதா விமுக்தி பெரமுனவும் வலியுறுத்தியிருக்கின்றது.

மொத்தத்தில் மக்களுக்கும் நாட்டுக்கும் மட்டுமன்றி ஜனநாயகம் மீண்டும் முகிழ்ப்பதற்கும் அவசரமான ஒரு சட்டத்தை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த கையோடு ஊடகத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் வடக்குக்கு வருகை தந்து ஊடக நிறுவனங்களோடும் ஊடகவியலாளர்களோடும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருப்பது அரசின் நல்லிணக்கச் செயற்பாடுகளில் மேலும் ஒன்றாகக் கருதத்தக்க ஒன்று .

இந்தப் பயணத்தின்போது கடந்த காலங்களையும் வடபகுதியில் செயற்படுகின்ற ஊடகவியலாளர்களும் ஊடகநிறுவனங்களும் அனுபவித்துள்ள அடக்குமுறை கொடுமைகளையும் அமைச்சரும் மற்றவர்களும் விரிவாகப்புரிந்து கொள்ளக்கூடியதாய் இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

முன்னைய ஆட்சிக்காலத்தில் தென்னிலங்கை ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் அனுபவித்த அதே முறையிலான கடத்தல்கள், தாக்குதல்கள் மற்றும் கொலைகள் வடக்கிலும் ஊடகவியலாளர்கள் மீது கட்ட விழ்த்து விடப்பட்டிருந்தது மட்டுமன்றி ஊடகநிறுவனங்களும் தாக்குதல்களுக்கு உள்ளாகி இருந்தன.

குறிப்பாக வடக்குத் தமிழ் மக்களின் உரிமைக்குரலாக வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் நிறுவனமும் ஊடகவியலாளர்கள் மற்றும் பணியாளர்களும் அனுபவித்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சம் அன்று. உதயன் குரலை நசுக்கிவிட்டால் தமிழ்மக்களின் குரல்வளையையும் நசுக்கியதற்கு ஒப்பாகும் என்று அரச தரப்பினரும் அவர்களின் ஆதரவில் குளிர் காய்பவர்களும் மனப்பால் குடித்ததும் ஏமாந்து போனதும் சரித்திரம். அவ்வாறான சம்பவங்கள் நிகழ்ந்த போதெல்லாம் கண்துடைப்புக்காக அதிகாரிகளும், பொலிஸாரும் விசாரணைகள் என்ற போர்வையில் வந்து போனார்கள். முறையான விசாரணைகள் நடைபெறவும் இல்லை குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவும் இல்லை.

ஆகையால் இப்பொழுதாகிலும் கடந்த காலத்தில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள், படுகொலைகள், ஊடக நிறுவனங்கள் மீதான வன்செயல் ஆகியவை தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். சூத்திரதாரிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களின் முகமூடிகள் கிழிக்கப்பட வேண்டும். அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க வேண்டும் என்று, வடக்கு ஊடகவியலாளர்கள் அமைச்சரைக் கேட்டிருப்பது மிகவும் நியாயமான ஒரு கோரிக்கையாகும்.

அமைச்சர் கொழும்பு திரும்பியதன்பின்னர், இது தொடர்பாக நல்ல முடிவொன்றை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கலாமா? இன்றே செய்யின், அதனை நன்றே செய்மின்!

# வெற்றியை நோக்கி இணக்கப்பாட்டு அரசியல்

எம்.ஐ.முபாறக்

மகிந்த அரசைக் கவிழ்த்து புதிய அரசை உருவாக்குவதற்கு முழுமையான பங்களிப்பு வழங்கிய தமிழர்கள், புதிய அரசுடன் இணங்கிப் போகும் நிலைப்பாட்டை எடுத்தனர். இந்த இணக்கப்பாட்டு அரசியலை சில கடும்போக்குவாதம்கொண்ட தமிழர்கள் எதிர்த்தபோதிலும் - அது அரசுக்கு அடிபணியும் அடிமைத்தனம் என விமர்சித்தபோதிலும், தமது நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற இதுதான் சிறந்த வழி எனக் கருதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்கப்பாட்டு அரசியலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. இதற்கு அடிமைத்தனம் என்றோ - தமிழர்களின் மானம் அடகு வைப்பு என்றோ தமிழ் கடும்போக்குவாதிகள் அர்த்தம் கொடுக்கலாம். ஆனால், இன்று தமிழர்களின் வெற்றியை நோக்கிய போராட்டமாக இப்போதைய அரசியல் போராட்டமே சென்றுகொண்டிருக்கின்றது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

> போர் முடிவடைந்து ஏழு வருடங்கள் நெருங்குகின்ற போதிலும் துப்பாக்கிச் சத்தம் மாத்திரம் ஓய்ந்திருக்கின்றதே தவிர போரால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மாறவில்லை. ஆனால், மக்கள் அந்தப் போர் காலத்தில் இருந்ததைப் போன்றே இப்போதும் வாழ்கின்றனர்.

### தமிழர்களின் பிரச்சினைகள்

இந்த நாட்டில் வாழும் ஏனைய இனங்களை விட தமிழினம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அதிகம் என்றால் அதை எவராலும் மறுக்க முடியாது. 30 வருடங்களாக இந்த நாட்டில் நீடித்த போர் வடக்கு - கிழக்கு மக்களை வெகுவாகப் பாதித்தது. உயிர்களை இழந்து - உடைமைகளை இழந்து அவர்கள் இன்னும் துன்பத்தில் தான் மூழ்கி இருக்கின்றனர்.

போர் முடிவடைந்து ஏழு வருடங்கள் நெருங்குகின்ற போதிலும், துப்பாக்கிச் சத்தம் மாத்திரம் ஓய்ந்திருக்கின்றதே தவிர போரால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் மாறவில்லை. ஆனால், மக்கள் அந்தப் போர் காலத்தில் இருந்ததைப் போன்றே இப்போதும் வாழ்கின்றனர். களத்தில் நின்று ஆய்வு செய்தால் பல உண்மைகள் புரியும்.

வீடுகளை இழந்து நிற்பவர்கள், கணவன்மார்களை இழந்து நிற்பவர்கள், உடல் உறுப்புகளை இழந்து நிற்பவர்கள், உறவுகளை இழந்து நிற்பவர்கள் என இவர்கள் அனைவரும் வாழ வழியின்றித் தவிக்கின்றனர். இந்த மக்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கு அரசியல் தீர்வு விரைவில் வழங்கப்பட வேண்டும் என்பதையே இவை அனைத்தும் எமக்கு உணர்த்துகின்றன. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டுதான் தமிழர்கள் அரசியல் தீர்வை நோக்கி ஓடுகின்றனர். போர் முடிந்த பின் அந்த ஓட்டம் தீவிரமாக்கப்பட்ட போதும் அப்போதைய ஆட்சியாளரான மகிந்த அதைக் கணக்கில் எடுக்கவில்லை. அந்த மக்களின் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து அரசியல் செய்வதிலேயே அவர் குறியாக இருந்தார்.

### புதிய அரசுக்கான பங்களிப்பு

இதனால், அந்த அரசை மாற்றித் தமது தேவைகளை நிறைவேற்றக்கூடிய புதிய அரசொன்று உருவாவதற்கு தமிழர்கள் பெரிய பங்களிப்புச் செய்தனர். இதன் விளைவாக உருவான புதிய அரசு இதுவரை தமிழர்களின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வை முன்வைத்துள்ளது. தமிழர்களின் ஒட்டுமொத்த பிரச்சினைகளையும் தீர்க்கக் கூடியவாறு அரசியல் தீர்வை வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளபோதிலும், அதுவரை அரசு பார்த்துக் கொண்டு இருக்கவில்லை. தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான பணி ஒருபுறம் இருக்க, மறுபுறம் தமிழர்களின் பல பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டு செல்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. அவர்களின் முக்கிய பிரச்சினைகளான அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் காணிகள் விடுவிப்பு போன்ற பிரச்சினைகள் தொடர்பில் அரசு ஆரம் பம் முதலே கவனம் செலுத்தி வரு வதோடு அவற்றுக்கான தீர்வை கட்டம்கட்டமாக, வட்டமாக வழங்கியும் வருகின்றது.

அரசியல் கைதிகளின் பிரச்சினைக்கு விடுதலை, விசாரணைகளைத் துரிதப்படுத்துதல் மற்றும் புனர்வாழ்வு எனத் தீர்வுகளை வழங்கியுள்ளது. அதேபோல், காணிப் பிரச்சினைகளும் அவ்வாறே கட்டம்கட்டமாக தீர்க்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசு உதயமானது முதல் வடக்கில் சிறுது சிறுதாக காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன. அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் சம்பூர் காணிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளன. தமிழர்களின் தற்போதைய அரசியல் நிலைப்பாட்டுக்குக் கிடைத்த வெற்றி என்றே இதைச் சொல்ல வேண்டும்.

மகிந்த அரசில் தமிழர்கள் மகிந்தவுடன் இணங்கிப் போக மறுத்தனர். கடும் போக்கு அரசியல் நிலைப் பாட்டை ஏற்றிருந்தனர். சர்வ தேசத்தோடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"30 வருட ஆயுதப் போராட்டத்துக்கும் அதன் பின்னரான கடும்போக்கு அரசியல் போராட்டத்துக்கும் மசியாத சிங்கள அரசு இன்று இணக்கப்பாட்டு அரசியலுக்கு அடி பணிந்திருக்கின்றது; தமிழர்களின் பிரச்சினைகள் அனைத்தையும் உணர்ந்திருக்கின்றது"

கைகோர்த்துக் கொண்டு மகிந்தவை எதிர்த் துப் போராடினர். ஆனால், மகிந்த எதற்கும் மசியவில்லை. இதனால் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி தமது அரசியல் நிலைப் பாட்டையும் மாற்றும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டனர்.

மகிந்த அரசைக் கவிழ்த்து புதிய அரசை உருவாக்குவதற்கு முழுமையான பங்களிப்பு வழங்கிய தமிழர்கள், புதிய அரசுடன் இணங்கிப் போகும் நிலைப் பாட்டை எடுத்தனர். இந்த இணக்கப்பாட்டு அரசியலை சில கடும்போக்குவாதம் கொண்ட தமிழர்கள் எதிர்த்தபோதிலும் – அது அரசுக்கு அடிபணியும் அடிமைத் தனம் என விமர்சித்தபோதிலும், தமது நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வைப் பெற இதுதான் சிறந்த வழி எனக் கருதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக் கப்பாட்டு அரசியலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது.

இந்த நிலைப்பாடுதான் சரியானது – இதுதான் தமிழர்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு நிலையான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பலமான ஆயுதம் என்பதை நாம் தினம் தினம் காண் கின்றோம்.

### வெற்றியை நோக்கிய பயணம்

இதற்கு அடிமைத்தனம் என்றோ – தமிழர்களின் மானம் அடகு வைப்பு என்றோ தமிழ் கடும்போக்குவாதிகள் அர்த்தம் கொடுக்கலாம். ஆனால், இன்று தமிழர்களின் வெற்றியை நோக்கிய போராட்டமாக இப்போதைய அரசியல் போராட்டமே சென்று கொண் டிருக்கின்றது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

30 வருட ஆயுதப் போராட்டத்துக்கும் அதன் பின்னரான கடும்போக்கு அர சியல் போராட்டத்துக்கும் மசியாத சிங் கள அரசு இன்று இணக்கப்பாட்டு அரசியலுக்கு அடிபணிந்திருக்கின்றது; தமிழர்களின் பிரச்சினைகள் அனைத் தையும் உணர்ந்திருக்கின்றது; ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒரு வருடம் கடந்துவிட்டது. இந்த ஒரு வருடத்துக் குள் தமிழர்கள் அடைந்த நன்மை களை – பெறப்பட்ட தீர்வுகளை எடுத்துப் பார்த்தால் ஒப்பீட்டளவில் மிகப் பெரியவை. சுமார் 25 வருடங்களாக விடுவிக்கப்படாத காணிகள் விடுவிக் கப்பட்டன; பல வருடங்களாக சிறை களில் வாடிய தமிழ் அரசியல் கைதி களுக்குத் தீர்வு வழங்கப்பட்டது. அரசியல் தீர்வை நோக்கி காத்திரமான நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவை அனைத்தும் தமிழர்களின் இணக்கப்பாட்டு அரசியலால் ஏற்பட்ட மாற்றமே அன்றி வேறில்லை. ஆகவே, தமிழர்களின் தற்போதைய அரசியல் நிலைப்பாடுதான் சரியான நிலைப்பாடு என்பதிலும் இது தமிழர்களை வெற் றியை நோக்கி அழைத்துச்செல்கின்றது என்பதிலும் சந்தேகமில்லை.

## எமது கனவு நனவு ஆகட்டும்

1948 ஆண்டுக்குப் பின்பு நாம் பார்த்த இதய தெய்வம் எமது வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்கேஸ்வரன்தான். அவர் பல நூற்றாண்டு காலம் நிலம்,பலம்,வளம் பெற்று வாழ்க என எல்லாம் வல்ல இயேசு பிரானிடம் வேண்டுகின்றோம். இவர்கள் வழியில் சென்றால் தமிழ் இனம் இனியாவது வளமாக வாழும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு

இயக்கம் தேவையில்லைகட்சி தேவையில்லை எமது தமிழ் இனம், விழிப்புணர்வு பெற்றுவிட்டால் எல்லாம் தீர்ந்துவிடும்.

இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைகளில் சிங்களம் தமிழ் ஆகியன கட்டாய பாடங்கள் ஆக்கப்பட வேண்டும்.

அரச பணியாளர்கள் அனைவரும் சிங்களம், தமிழ் பேச எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக வருவோர் படித்தவர்களாக பொலிஸ், நீதி மன்றம், சிறைச்சாலை போகாதவர்களாக இருக்க வேண்டும் சிறுவயதில் இருந்து மக்கள் தொண்டு செய்தவர்களாக இருக்க வேண்டும்.

எமது நாடு ஆசியாவில் மட்டும் அல்ல உலகத்திலே முதன்மை நாடாகத் திகழ முடியும்.

புனிதமான ஐக்கிய இலங்கையை உருவாக்க முடியும்.

இலங்கை ஜனாதிபதியாக மீண்டும் மைத்திரி வர வேண்டும்.

ஐக்கிய இலங்கை உருவாகி நாம் தமிழர், சிங்களவர், முஸ்லிம் ஒரே தாய் பிள்ளை என வாழ வேண்டும்.

எமது கனவு நனவு ஆகட்டும்.

வாழ்க வளம்பெறுக.

வே.சிங்கம்

## வைத்தியர்களின் மகத்தான சேவையும் அர்ப்பணிப்பும்

காலில் ஏற்பட்ட காயத்துக்கு (Varicase ) எனக்கூறி (S.P.L) என்ற சத்திர சிகிச்சை செய்தார்கள். பின் நான்கு தடவைகள் எனது தொடையில் இருந்து தோல் எடுத்து காயத்துக்குப் பொருத்தி னார்கள். தோல் பொருந்தாமையால் ஒவ்வொரு செவ்வாயும் சத்திரசிகிச்சைக்கூடத்தில் (Fourlayer bandage) போடுகின்றார்கள் இற்றைவரைக்கும் 122 தடவைகள் இந்த (Bandage) போடப்பட்டுள்ளன.


இந்த (Bandage) போடுவதற்கு (Surline, Vetadin, Vaselinegauze, Gauze Pieces, Gauze Towelselasto Plaster) போன்ற பொருள்கள் பாவிக்கப்படுகின்றன. இந்தப் பொருள்களின் பெறுமதி ரூபா 1,500 வரையில் ஆகலாம். இந்த (Bandage) ஐப் போடுவதற்கு ஆண், பெண் நோயாளிகளை முப்பதுபேர்வரையில் வருகின்றார்கள்.

வவுனியாவில் இருந்தும் அங்குள்ள வைத்தியசாலையில் இந்த (Bandage) ஐப் போட இயலாது எனக் கருதி ஒரு நோயாளர் தனது பணத்தையும் நேரத்தையும் விரயம் செய்து இங்கு வருகின்றார்.

இவருடன் ஒப்பிடுகின்றபோது, யாழ்.போதனா வைத்திய சாலையும் அதில் கடமையாற்றுகின்ற ஊழியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். எமது வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற ஊழியர்களின் அயராத உழைப்பும் சேவை மனப்பான்மையும் வளர எனது ஆசிகள்

இ.இராஜேந்திரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உலகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்தவர்கள் நேற்றைய தினம் கிறிஸ்து உயிர்ப்பு பண்டிகையைக் கொண்டாடினார்கள். கடந்த 40 தவக்கால நாள்க
பல்வேறு பகுதிகளில் உள்ள கிறிஸ்தவர்கள் அந்நாள்களை அனுசரித்தனர்.

# ஈராக்கில் தாக்குதல்; 41 பேர் சாவு

பக்தாத், மார்ச் 28
ஈராக்கில் கால்பந்துப் போட்டியின் போது, ஐ.எஸ். அமைப்பு கடந்த சனிக்கிழமை தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலில் 41 பேர் கொல்லப்பட்டதுடன், 105 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.



உள்ளூர் கால்பந்துப் போட்டியைக் காண்பதற்காக பலர் குழுமி இருந்த வேளையில் இந்தத் திடீர்த் தாக்குதல் நிகழ்ந்துள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ். பொறுப்பேற்றுள்ளது. ஈராக்கில் உள்ள ஐ.நாவின் பிரதி நிதி ஜான் குபிஸ் தாக்குதலுக்கு தனது கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
மேலும். ஐ.எஸ். அமைப்பினர் தமது கோபத்தை அப்பாவி பொதுமக்களிடம் காட்டியுள்ளனர். இந்தத் தாக்குதல் வன்மையான கண்டனத்துக்கு உரியது எனவும் தெரிவித்துள்ளார்.

(ஐ-ரி4)

# பால்மைரா நகரம்

டமாஸ்கஸ், மார்ச் 28
சிரியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க புராதான நகரமான பால்மைராவை ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் இருந்து சிரியா படைகள் கைப்பற்றியுள்ளன. இங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க பல பழங்கால நினைவுத் தூண்களையும், நினைவுச் சின்னங்களையும் ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த சில மாதங்களாக அழித்தொழித்து நாசப்படுத்தி வந்தனர்.
எஞ்சியிருக்கும் சில கலைப் பொக்கிசங்களையாவது காப்பாற்றும் நோக்கத்தில், அரசுக்கு ஆதரவான போராளிக் குழுக்களுடன் ஒன்றிணைந்து இங்கு ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் சிரியா இராணுவத்தினர் மூர்க்கமாக போரிட்டு வந்தனர்.
இந்த நிலையில் நேற்று அதிகாலை பால்மைரா நகரின் கிழக்கு நுழைவாயில் வழியாக முன்னேறிச் சென்ற அரச படைகள், அங்கிருந்த தீவிரவாதிகளை புறமுதுகிட்டு ஓடவைத்து பால்மைரா நகரை முழுமையாகக் கைப்பற்றியுள்ளதாக அரசு



ஊடகங்கள் தெரிவித்துள்ள
சிரியாவில் உள்ள மனித உ
அவதானிகர் தெரிவிக்கை



# அமெரிக்காவைத் தாக்குவோம்

## வீடியோவை வெளியிட்டது வடகொரியா

பியாங்யாங், மார்ச் 28
வடகொரியா அமெரிக்காவுக்கு வீடியோ மூலம் பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது. கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட லாஸ்ட் சான்ஸ் எனப்படும் இந்த வீடியோவில் லிங்கன் ஞபகார்த்த சதுக்கத்துக்கு அண்மையில் அணு ஆயுதம் மூலம் தாக்குவதாக உருவாக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில் தங்கள் நாட்டின் அணு ஆயுத தாக்குதல் இலக்கின் கீழ் வொசிங்டன் இருப்பதாக அந்த வீடியோவில் வடகொரியா தெரிவித்துள்ளது.
அமெரிக்கா நம்மை நோக்கி ஒரு அங்குலம் நகர்ந்தாலும் உடனடியாக அவர்களை அணுஆயுதம் மூலம் தாக்குவோம் எனவும் அதில் கூறப்பட்டுள்ளது. மேலும், அமெரிக்க கொடிகள் எரிவதும் காண்பிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரி4)

# பக்ரீரியா தாக்கத்தால் 18 பேர் சாவு

வொசிங்டன், மார்ச் 28
அமெரிக்காவில் அரியவகை பக்ரீரியாவால் நோய் தொற்று ஏற்பட்டுள்ளது. இது வரை இரு மாநிலங்களில் 18 பேர் உயிரிழந்துள்ளதுடன், 50 பேருக்கு நோய் தொற்று ஏற்பட்டுள்ளது என அமெரிக்காவின் மத்தியநோய்த்தடுப்புதிணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.
மேலும், இரு நோயாளர்களின் நிலை கவலைக்குள்ளாகியுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.
பக்ரீரியல் மேதை எலிச பேத்கிங்கியாவை நினைவு கூரும் வகையில், எலிசபேத் கிங் என பெயரிடப்பட்டுள்ளது.
2011 ஆம் ஆண்டு இந்த பக்ரீரியா முதன்முதலாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்த பக்ரீரியாவின் தொற்றுக்கான காரணம் இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை. குறித்த பக்ரீரியால் நீர், நிலம், பூச்சிகள் என்பவற்றில் காணப்படுகின்றது.
சுத்தமாக, ஆரோக்கியமாக இருப்பவர்கள் இந்த நோய் தொற்றிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ளலாம் என சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர். நோய் எதிர்ப்புச் சக்தியில் குறைபாடு உடையவர்களை இந்த நோய் உடனடியாக தாக்கும்.
உயிரிழந்தவர்களில் பெரும்பான்மையானோர், 65 வயதுக்கு மேற்பட்டோரும், வேறு நோயினால் பாதிப்படைந்தவர்களும் ஆவர்.
நோயின் அறிகுறிகளாக தோல் அழுகல் நிலை, முச்சு விடச் சிரமம், கடிசொறி, கொப்பளங்கள் என்பன காணப்படுகின்றன.
குறித்த பக்ரீரியா மருந்துகளுக்கு எதிர்த்து போராடும் குணம் உடையது. இதன் திறனை அறிந்து மருத்துவர்கள் இதற்கு எதிரான மருந்து தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

(ஐ-ரி4)

# லண்ட
# பூரி

லண்டன், ம
உலகில் வா
விழாவை 
லிலும், லண்
ளுடன் சிறு
வலம் வந்த
இவர்கள் வி
மிட்டுக் கொ
களையும் ப
யூதக்கலண்
அனுஷ்டிக்க
ஆம் நூற்ற
செய்ய திட்ட
எஸ்தர் எனு
தடுக்கப்பட்
வகையில் மீ
லண்டன் ம
மண்ட அள
டது. இராட்சத
பட்டன. அந்த
களின் உரு
யான பண்டி
தானதாகக் 
விழா ஏற்பா
விழாவில் இ
தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ல், கடந்த வாரம் முழுவதும் புனித நாள்கள் அனுஷ்டிக்கப்பட்டன. உலகின் (ஐ-ரி4)

# பெல்ஜியக் குண்டு வெடிப்பு 40 நாடுகளுக்குப் பாதிப்பு

பிரசல்ஸ், மார்ச் 28
பெல்ஜியத்தில் கடந்த வாரம் ஐ.எஸ். தீவிரவாதிகள் தற்கொலை தாக்குதலும், வெடி குண்டுத் தாக்குதலும் நடத்தினார்கள். அதில் 31 பேர் உயிரிழந்துள்ளதுடன், 316 பேர் காயம் அடைந்தனர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட 7 தீவிரவாதிகள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.
தீவிரவாதிகள் நடத்திய இந்தத் தாக்குதலில் 40 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கிடையே குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டுள்ள 40 நாட்டவர்களில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி, இந்தியா, சீனா, பெரு, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் அடங்குவர். இந்த நாடுகளைச் சேர்ந்தவர்களில் பலர் காயம் அடைந்ததுடன் உயிரிழப்பும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# இராணுவ வசம்



ன.
ரிமைகள் ஆணைக்குழுவின்
பில்; 2014 ஆம் ஆண்டில்

“எஞ்சியிருக்கும் சில கலைப் பொக்கிசங்களையாவது காப்பாற்றும் நோக்கத்தில், அரசுக்கு ஆதரவான போராளிக் குழுக்களுடன் ஒன்றிணைந்து இங்கு ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் சிரியா இராணுவத்தினர் மூர்க்கமாக போரிட்டு வந்தனர்.”

இருந்து இடம்பெற்ற வந்த தாக்குதலில் தற்போது பல்மைரா நகரை மீண்டும் கைப்பற்றப்பட்டுள்ளது. பல ஐ.எஸ். போராளிகள் பல்மைரா நகரைவிட்டு தப்பியோடியுள்ளனர். இடம்பெற்ற போரில் ஐ.எஸுக்கு எதிரான பெரிய தோல்விகளுள் ஒன்று எனத் தெரிவித்தார்.
அவதானக்குழுவின் பணிப்பாளர் தெரிவிக்கையில்; போரின் பின்னர் 400 இற்கும் மேற்பட்ட ஐ.எஸ். அமைப்பினரின் கொல்லப்பட்ட உடல்கள் காணப்பட்டது எனத் தெரிவித்தார். (ஐ-ரி4)

# ஜப்பானில் திமிங்கில வேட்டை



டோக்கியோ, மார்ச் 28
ஜப்பான் 200 கருவுற்ற திமிங்கிலங்களை வேட்டையாடியுள்ளன என அறிக்கை வெளியிட்டுள்ளது. ஜப்பான் சட்ட விரோத திமிங்கில வேட்டையில் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் ஈடுபட்டிருந்தது. அதன் வேட்டை தற்போது நிறைவடைந் துள்ள நிலையில் குறித்த அறிக்கை வெளியிட்டுள்ளது.
சட்ட விரோத வேட்டை என சர்வதேச நீதி மன்றம் எச்சரித்து பொழுதும், ஆய்வுக்கான வேட்டையாடுகிறோம் எனும் போர்வையில் இந்த வேட்டை இடம்பெற்றுள்ளது.
ஜப்பான் ஆராய்ச்சி நிறுவன அறிக்கையில், 333 திமிங்கிலங்கள் வேட்டையாடப்பட்டன எனவும், இவற்றில் 200 திமிங்கிலங்கள் குட்டிகளை சுமந்தள்ளன எனவும் தெரிவித்துள்ளன.
1986 ஆம் ஆண்டிலிருந்து வர்த்தக நோக்கத்துக்கான திமிங்கில வேட்டை தடைசெய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிக்கு இவற்றை வேட்டையாட முடியும் என சர்வதேச திமிங்கில திணைக்களம் குறிப்பிட்டிருந்தது. சில வருடங்களாக ஜப்பானிய திமிங்கில வேட்டை நிறுத்தப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டு மீண்டும் அதன் வேட்டையை ஆரம்பித்தது. உணவுச் சங்கிலியில் திமிங்கிலம் முக்கிய இடத்தை வகிப்பதுடன், உயிரியல் உலகின் ஆதாரமான உயிரினமாக திமிங்கிலம் இருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

# னில் களைகட்டிய ம் பண்டிகை

ர்ச் 28
ழும் ஆச்சாரமான யூதர்கள் பூரிம் காண்டாடினர். சிறப்பாக இஸ்ரே டனிலும் வர்ணமயமான ஆடைக ர்களும், பெரியவர்களும் நகரில் னர்.
நம்பிய வேடங்களில் தம்மை வேட ண்டதுடன், கலாசார உணவு வகை கிர்ந்து உட்கொண்டனர். புராதன ரில் புனித நாள்களாக கடந்தவாரம் ப்பட்டது. கிறிஸ்துவுக்கு முன்னர் 5 ாண்டில் யூதர்களைக் கொலை டப்பட்டது. ஆனால், இந்தத் திட்டம் ம் யூதப் பெண், ராணி ஆகியதால் டது. இதனை நினைவு கூரும் ட்பின் நாளாக அனுஷ்டிக்கின்றனர். ற்றும் இஸ்ரேல் பகுதியின் பிரம் ல் இந்த நாள் நினைவு கூரப்பட் பலூன்கள் இஸ்ரேலில் பறக்க விடப் பலூன்கள் கார்ட்டூன் கதாபாத்திரங் வ அமைப்பில் இருந்தன. மகிழ்ச்சி டிகையாக சிறுவர்களுக்கு உரித் கொண்டாடப்பட்டது. இதனால் இந்த ாட்டில் மது, புகைப் பொருள்கள் இருக்கவில்லை என்பது குறிப்பிடத் (ஐ-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது
## பெயர்ச்சிப் பலன்கள்



*(ராகு கேது பெயர்ச்சிப் பலன்கள் வரிசையில் கும்ப ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிய விவரங்கள்)*

அடுத்தவர்களின் நிறை, குறைகளை இங்கிதமாக எடுத்துரைப்பதில் வல்லவர்களே! அப்படிப்பட்ட உங்களுக்கு 08.01.2016 முதல் 25.07.2017 வரை உள்ள காலகட்டத்தில் இந்த ராகுவும், கேதுவும் என்ன செய்யப் போகிறார்கள் என்று பார்ப்போம்.

### கும்பம்

**இராகுவின் பலன்கள்:**
இதுவரை உங்கள் ராசிக்கு எட்டாம் வீட்டில் அமர்ந்து கொண்டு உங்களை படாதபாடு படுத்தியெடுத்திக் கொண்டிருந்த ராகு பகவான் இப்போது ராசிக்கு ஏழாம் வீட்டில் வந்து அமருவதால் திக்குத் திசையறிவீர்கள். உங்களின் அறிவாற்றலை மழுங்க வைத்த ராகுபகவான் இப்பொழுது உங்களுக்கே தெரியாமல் உங்களிடம் மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொண்டு வரப்போகிறார். சோம்பல் நீங்கி உற்சாகமடைவீர்கள்.
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். கணவன்–மனைவிக்குள் சந்தோசம் நிலைக்கும். என்றாலும் களத்திர ஸ்தானமான ஏழாம் வீட்டில் ராகு அமர்வதால் கணவன்–மனைவிக்குள் வீண் சந்தேகம், சச்சரவுகள் வரும். பிரிவு ஏற்படக்கூடும். முடிந்த வரை சகிப்புத்தன்மையுடனும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடனும் நடந்து கொண்டால் நல்லது.
மனைவி ஏதேனும் குறை கூறினாலும் அதை அப்படியே மறந்து விடுவது நல்லது. அவருடன் எதிர்வாதம் செய்து கொண்டிருக்க வேண்டாம். மனைவிக்கு கர்ப்பப்பை கோளாறு, தைரொய்டு பிரச்சினை, முதுகுத்தண்டில் வலி, குருதி அழுத்தம் வந்துப் போகும். எந்த விடயமாக இருந்தாலும் மற்றவர்களின் ஆலோசனையின்றி சுயமாக சிந்தித்து முடிவெடுங்கள். முன் பின் தெரியாதவர்களிடம் குடும்ப அந்தரங்க விடயங்களைப் பகிர்ந்துக் கொள்ள வேண்டாம்.
யாரையும் யாருக்கும் பரிந்துரை செய்யாதீர்கள். மறதியல் விலை உயர்ந்த கைபேசி, நகைகளை இழக்க நேரிடும். முக்கிய ஆவணங்களில் கையெழுத்திடும் முன்பாக சட்ட நிபுணர்களை கலந்தாலோசிப்பது நல்லது. ஒரு சொத்தை விற்று மறு சொத்து வாங்கும் யோகம் உண்டாகும். அவ்வப்போது ஆழ்ந்த உறக்கமில்லாமல் போகும். திருமணம் தள்ளிப் போய் முடியும். உத்தியோகம், வியாபாரத்தின் பொருட்டு குடும்பத்தை பிரிய வேண்டி வரும். வாகனத்தில் செல்லும் போதும், சாலைகளை கடக்கும் போதும் நிதானம் அவசியம்.

**இராகுபகவானின் நட்சத்திர சஞ்சாரம்:**
உங்களின் சப்தமாதிபதியான சூரியனின் உத்திரம் நட்சத்திரம் முதல் பாதத்தில் 08.01.2016 முதல் 10.03.2016 வரை ராகுபகவான் செல்வதால் இக்கால கட்டத்தில் தடைப்பட்ட சுப காரியங்கள் நடக்கும். அரசு விவகாரங்களில் இருந்த அலட்சியப் போக்கு மாறும். என்றாலும், உடல் உஷ்ணம், அடிவயிற்றில் வந்துபோகும். மனைவிக்கும் மருத்துவச் செலவுகள் ஏற்படக்கூடும்.
ராகுபகவான் உங்கள் யோகாதிபதியான சுக்ரனின் பூரம் நட்சத்திரத்தில் 11.03.2016 முதல் 15.11.2016 வரை செல்வதால் பணம் வரும். உங்கள் ரசனைக்கேற்ப வீடு, வாகனம் அமையும். சிலர் வீட்டை விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். பெற்றோரின் உடல் நிலை சீராகும். கல்யாணம், கிரகப் பிரவேசம், சீமந்தம் என வீடு களைகட்டும். உறவினர்கள் மதிப்பார்கள். பிதுர்வழி சொத்து கைக்கு வரும்.
கேதுவின் மகம் நட்சத்திரத்தில் 16.11.2016 முதல் 25.7.2017 வரை ராகுபகவான் செல்வதால் இக்காலகட்டத்தில் வீண் சந்தேகத்தால் குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். கனவுத் தொல்லை வந்து போகும். தாழ்வுமனப்பான்மை மற்றும் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கப்பாருங்கள். வேற்று மொழிக்காரார்கள், வெளிநாட்டில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு.


(தொடரும்)

# நுகர்வோரின் மகிழ்ச்சியே இறைவனுக்கு அபிஷேகம்

கே.எஸ்.சிவஞானராஜா

பொருளை வாங்குவோர் நுகர்வோர் என அழைக்கப்படுவர். சந்தையிலும் சரி, வர்த்தக நிலையங்களிலும் சரி, உணவகங்களிலும் சரி, சில்லறைப் பெட்டிக்கடைகளிலும் சரி, நடைவியாபாரிகளிடமும் சரி நம்பிக்கையோடு பண்டங்களை வாங்கி அனுபவிப்போர் எவராக இருந்தாலும் சரி அவர்களை நுகர்வோர் என்றும் பாவனையாளர் என்றும் அழைப்பர்.
உற்பத்தியாளர்கள், தரகர்கள், நுகர்வோர் எனச் சமூகமானது அன்றிலிருந்து இன்றுவரை இணைபிரியாத கூட்டாளிகளாக வாழ்ந்து வருகின்றது. இந்த மூவகைப் பிரிவிலுள்ளோரில் உற்பத்தியாளர்களும், பாவனையாளர்களும் அனுபவிக்கும் கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதிலும் நுகர்வோரின் துன்பங்களைச் சொல்லியோ எழுதியோ தீரப் போவதில்லை. நுகர்வோரைப் பயனாளிகளாக அடையாளப்படுத்துவதே நுகர்வோர் பாதுகாப்பு வாரத்தின் நோக்கமாகும். நுகர்வோர்களின் இதயங்களிலே தான் இறைவன் விரும்பியுறைகின்றான். நுகர்வோர்களின் மகிழ்ச்சியே இறைவனுக்கு அபிசேகமாகிறது.
1967 இலும், 1986 இலும் நுகர்வோர் மத்தியில் ஏற்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளின் பலனாக நுகர்வோர் அதிகார சபை நுகர்வோர் நலனோம்பு நிலையங்கள் உருவாகின. இதன் பேறாகப் பாவனையாளர்களின் பக்கம் நியாயங்கள் ஓரளவு வெல்லப்பட்டு வருகின்றன.

**தர்மம்**
நுகர்வோர்களை மட்டும் பாதுகாக்கும் போது உற்பத்தியாளர்கள் பக்கமும் தர்மத்தை நாம் பங்கிட்டேயாக வேண்டும். விவசாயம் செய்வோன் பட்டினி கிடந்து, வெயிலில் காய்ந்து, வியர்வை சிந்தி, கடன்பட்டு, அடகு வைத்து, வட்டி கட்டி, இரவும் பகலுமாய் நிலத்தையே பண்படுத்தி பயிர் செய்து, நீர் இறைத்து, பூவாக்கி காயாக்கி, கனியாக்கி, அறுவடையாக்கி, சந்தையில் ஒரு கிலோ ஐம்பது ரூபாவாக மொத்தம் அறுபது கிலோ தக்காளிப்பழத்தை மூவாயிரம் ரூபாவ[illegible]. இதனை நுகர்வோர் 250 கிராம் (1/4 கிலோ) இருபத்தைந்து ரூபாவுக்குக் கொள்முதல் செய்கின்றனர். ஐம்பது ரூபாவாக விவசாயியிடம் இருந்து பெற்று விற்கும் போது நூறு ரூபாவாக அதி கலாபம் ஈட்ட வழிசமைக்கப்படுகிறது. இது ஓர் உதாரணமாகக் காட்டப்பட்டாலும், மிகவும் பாரதூரமாகப் பாதிக்கப்படுவது நுகர்வோரும், உற்பத்தியாளர்களுமே யாவர். விவசாயியின் நிலையோ அந்தோ பரிதாபம். அவனுக்குக் கிடைக்க வேண்டிய ஊதியம் இன்றுவரை பெறுமதியாக்கப்படவில்லை. யாருமே இரக்கப்பட்டதாகத் தெரியவில்லை. விவசாயிகளோடு நுகர்வோர்களும் சமூகத்தில் தோற்றுப் போனவர் களாக(வே) இறைவனால் படைக்கப் பட்டார்களோ என ஐயுற வேண்டியுள்ளது. உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் இடையில் உள்ளவர்களின் பரிமாற்றத்தால் பெரும் விலைமாற்றம் ஏற்படுகிறது. நுகர் வோர் வாரத்தில் மட்டும் பாவனையாளர்களுக்குச் சலுகையளிப்பதனால் நுகர்வோர்களை வென்று விட முடியாது. வாழ்நாள் முழுவதுமாக அவர்கள் வயிறு வாழ்த்த வேண்டும். அதையே இறைவன் எதிர்பார்க்கிறான். அதுவே இறைவனுக்குச் செய்யும் அபிசேகமாகும். அதை விடுத்து கோபுரம் கட்டுவதும் பொன்னால் பெயர்கள் பொறிக்கப்படுவதும் ஆராயப்படவேண்டியவை. பக்தர்கள் எல்லோரும் கோடீஸ்வரர்களல்லர், ஏழைகளே.



மூர்த்தி சிறிது கீர்த்தி பெரிது. இதுதான் ஆலயத்தின் அற்புதங்களை மென்மேலும் வசீகரிக்கும். மூர்த்தி எளிமையாகவும், எளிதாகவும், கருங்கல்லில் இருக்கும் போதுதான் மகிமையும், கீர்த்தியும் பெரிதாகும். நுகர்வோருக்காகவும், அடியார்களுக்காகவும் இறைவன் தன்னால் இயன்ற அனுக்கிரகத்தை அருள் பாலிக்கவே காத்திருக்கிறான். எனவே இருபாலாருக்கும் வசதிகள் செய்யப்பட்டேயாக வேண்டும். அதுவே இறைபணியாகும். அடியார்களும் இறையின்பத்தை நுகர்பவர்கள் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று முன்தினம் வெளிவந்ததன் தொடர்ச்சி....

# கேடில் விழுச் செல்வம் கல்வி யொருவர்க்கு மாடல்ல மற்றையவை

செ.உமாசுதன்

ஆசிரியர் ஒருவர் தெரிவிக்கையில், நான் முதன் முதல் கல்வி கற்பித்த பாடசாலையில் 569 மாணவர்கள் இருந்தனர்.நியமனத்தைப் பெற்று அங்கு சென்றபோது அப் பாடசாலையில் அழகியல் பாட ஆசிரியருக்கான வெற்றிடம் ஒன்று தான் உள்ளெதனச் சொல்லப்பட்டது.இடமாற்றம் மீண்டும் வழங்கப்பட்டது.ஆனால் தற்போது நான் கல்வி கற்பிக்கின்ற பாடசாலையில் மாகாண கல்விப் பணிப்பாளரிடம் மேன் முறையீடு செய்ததன் பிரகாரம் வழங்கப்பட்ட பாடசாலையில் மூன்றாவது சித்திர ஆசிரியராகக் கடமையாற்றுகின்றேன். இங்குள்ள மாணவர்களின் எண்ணிக்கை 109. இது தவிர ஐந்து அழகியல் பாட ஆசிரியர்கள் இருக்கின் றனர். இவ்வாறு திட்டமிட்ட முறையிலே இடமாற்றங்களைப் பொருத்தமின்றி வழங்கி ஆசிரியர்களின் வினைத்திற னான கல்வி வழங்கல் செயற்பாடு களில் இடையூறுகளை ஏற்படுத்துகின் றார். இதே போன்று குழந்தைகிடைத்த பெண் ஆசிரியை ஒருவருக்கு இரண்டு வருடங்களுக்கு அவரது வீட்டிற்கு அருகாமையில் உள்ள பாடசாலையில் கடமையாற்ற அனுமதியை வழங்க முடியும்.ஆனால் ஓர் ஆசிரியை இடமாற்றம் கேட்டதற்கு அதே பாடசாலையில் தான் கடமையாற்ற வேண்டும் என்று கண்டிப்பாகத் தெரிவித்ததுடன் 25 கிலோமீற்றர்கள் அப்பால் உள்ள பாடசாலைக்கு இடமாற்றம் கொடுத்துவிட்டனர். இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் போராடி நியாயம் பெற்றுத் தந்த போதும் அந்த ஆசிரியையைப் பழிவாங்கும் முகமாக ஒருமாதகால சம்பளத்தை கொடுக்காமல் தாமதப்படுத்தினர்.

இவ்வாறான பல பிரச்சினைகள் அங்கே இருந்துவருகின்றன.

ஆசிரியர்களாகிய நாங்கள் சுதந்திரமான அமைதியான மன நிலையில் மாணவர்களுக்கு நல்ல கல்வி அறிவூட்டலை வழங்கமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.எங்கள் பாடத் துறை சார்ந்த பாடத் தெரிவைத் தவிர்த்து வேறு பாடங்களைக் கற்பிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம்.வரலாற்றுப் பாடம் என்பது முக்கியத்துவமானது அதனைக் கற்பிப்பதற்குப் பொருத்தமானவர் அத்துறை சார்ந்தவரே.ஆனால் அழகியல்பாடத்துறை சார்ந்தவர்களை வரலாற்றுப் பாடத்தைக் கற்பிக்க வேண்டும் என நிர்ப்பந்திப்பதும் அந்தப் பாடத்துறையில் பெறுபேறுகள் குறைந்தால் முழுப் பொறுப்பையும் நீங்கள் தான் ஏற்கவேண்டும் என அதிபரும் அதனை வழிமொழிந்து வலயக் கல்விப் பணிப்பாளரும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதும் ஆசிரியர்களிடையே மன உழைச்சலை ஏற்படுத்துகின்றது என்கிறார்.

ஆசிரியர்களைப் பழிவாங்கிக் கொண்டு. என்ன நடைபெறுகிறது என்பது வெளியே தெரியக்கூடாது என்பதற்காக உன்னை மாற்றுவேன், உன்னைப் பழிவாங்குவேன் என்ற ரீதியிலே கொள்ளை அடிக்கின்றனர்.2013 ஆம் ஆண்டிலிருந்து மாணவர்களிடம் சேர்க்கப்பட்ட இலட்சக்கணக்கான ரூபா காசு தேவையற்ற விதத்திலே செலவழிக்கப்பட்டிருக்கின்றது.உண்மையில் போரால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர் சிறுகச் சிறுகச் சேகரித்த பணத்தை வலய ரீதியிலே நடாத்தப்படுகின்ற பரீட்சைக்குரிய பரீட்சைப் வினாப்பத்திரத்திற்காக வேண்டிக் கொண்டு முழு எழுத்துப் பிழைகளோடு வினாப்பத்திரம் அடிக்கின்றனர். வாணி விழா,வாகன சேவிஸ்,மன்னாருக்கான சுற்றுலா,வலயத்துக்கான குத்துவிளக்குக்கொள்வனவுஎனசெய்து முடித்து அதற்குக் கணக்கைக் காட்டியுள்ளனர். பெருந்தொகைப் பணத்துக்கு கணக்குக் காட்டப்படவில்லை. கணக்காய்வுத் திணைக்களம் அதனை நிரூபித்துள்ளது.ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதுதவிர ஒரு முன்பள்ளிப் பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு 100 நாள் வேலைத்திட்டத் தின் கீழ் நிதி வழங்கப்பட்டது.அதனைப் பிரதேச செயலகம் செய்து முடித்துவிட்டது.

ஆனால் வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்தவர்கள் தாங்களும் செய்து முடித்ததாகக் கணக்குக்காட்டி அந்த பணத்தைப் பெற்றுள்ளனர். வேறொரு இடத்தில் பாடசாலையின் அதிபர் ஒருவர் பாடசாலைக்குச் சொந்தமான காணியை விற்றுள்ளார்.இதற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் துணையாக இருந்துள்ளார். ஆனால் அவர் புரிந்த ஊழல்கள் தொடர்பில் ஆதாரங்கள் இருந்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது ஏன்? அதைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

வலயக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்களும் வருகின்ற நிதியை வைத்துக் கொண்டு பேரம்பேசலில் ஈடுபடுகின்றனர்.தனக்குப் 10 வீதம் தர வேண்டும் 15 வீதம் தரவேண்டும் என அடிபடுகின்றனர்.பின்னர் அந்த மனஸ்தாபங்களை ஆசிரியர்கள் மீது திணிக்கின்றனர். நாங்கள் மன அழுத்தத்தில் இருக்கிறோம்.பிள்ளைகள் என்ன இதுவரை நாளும் கதைத்தவர் இப்ப கதைக்கிறார் இல்லையென மன வருத்தப்படுகின்றனர் என்கிறார் மாங்குளம் மகா வித்தியாலய ஆசிரியர் செல்வநாயகம்...

ஆக இந்த வகையான செயற்பாடுகள் கல்விச் சேவைகளிலும் அதனை வழிநடத்துகின்ற கல்வி நிர்வாக சேவைகளிலும் இருந்து முற்றாகக் களையப்படவேண் டும். தவறிழைப்பவர்கள் உடனடியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் வேண்டுதல் இதுவாகத்தான் இருக்கிறது. இந்தச் சம்பவங்கள் அனைத்து வலயங்களுக்கும் ஒரு பாடமாக இருக்க வேண்டுமெனில் அந்த வலயத்திற்குப் பொறுப்பான அதிகாரி உடனடியாக பணி மாற்றம் செய்யப்பட வேண்டும். மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வி ஆதாரமானது. ஆணி வேர் போன்றது. தமிழ்ச் சமுதாய விடுதலைக்கு இதுவே மூலாதாரம். ஆசிரியப் பணிகளில் தம்மை அர்ப்பணிக்கும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களின் கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைத் தோற்றுவிக்கக் கூடாது.கல்வி நிர்வாகத்தினர் கல்வி நடவடிக்கைகளில் சுமுகத்தன்மையையும் சுதந்திரத்தன்மைகளையும் ஆக்கபூர்வமாக இடைநிலைப்படுத்த வேண்டும்.எப்போதும் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடாது. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு எமது வரலாற்றுத் தேவையாக இருந்து வந்தது.போராட்டம் கல்விக்குக் கவசமாக இருந்தது.கல்வியும் போராட்டத்திற்கு காவலரணாய் இருந்தது.இந்த நிலைகள் இன நிலைத்திருப்பில் காத்திரமான பங்கைத் தந்தன.இனியும் தர வேண்டும்.இல்லாது போனால் கல்வியில் வீழ்ச்சியும் இனத்துவ அடையாளமும் அழிழ்ந்து போகும்.எம் இனத்தின் தனித்துவம் அற்றுப் போகும்.

இந்த விடயங்களைக் கருத்திலெடுத்து கல்வி அமைச்சும் அவர்களின் கீழ் நிலைப்படுத்தப்பட்டுள்ள கல்வி நிர்வாக அதிகாரிகளும் ஒருமுகமாக ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். கல்வியை உயர்நிலைப்படுத்த வேண்டும்.ஒரு நாட்டின் எதிர்காலம் அந்த நாட்டின் இளைய தலை முறையினரின் கைகளிலேயே தங்கியுள்ளது. இளைய தலைமுறையினர் அறிவுள்ளவர்களாக, ஆற்றல் மிகுந்தவர்களாக, பொறுப்புணர்வு கொண்டவர்களாக வளர்க்கப்பட வேண்டியது ஒரு கட்டாயத் தேவை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதற்கேற்ற வகையில் இளஞ் சிறார்களுக்குக் கல்வி ஊட்டப்பட வேண்டியதும் மிக முக்கியமானதொன்றாகிறது. புரிந்து கொள்ளுங்கள் அதிகாரிகளே.! விழியுங்கள்.!

இல்லாது போனால் சீரழிவுகளைச் சீர்ப்படுத்த மீண்டும் மாணவர் அமைப்புக்கள் தோற்றம் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# முயற்சி திருவினையாக்கும்

ஓர் ஊரிலே ஓர் ஏழைக் கணவனும் மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு வறுமை விடவில்லை. வறுமையால் துடித்த மனைவி கணவனைப் பார்த்து எவரிடமாவது வேலை செய்து பணம் பெற்று வருமாறு கெஞ்சி னாள். அவனும் பல இடங்களில் வேலை அல்லது உதவி கேட்டுக் களைத்துவிட்டான். இறுதியாக அவள் கணவனைப் பார்த்து அரசனிடம் போய் உதவி கேட்கும்படி கூறி அனுப்பினாள். அவனும் அரசனிடம் போய் தங்களது வறுமையைப் போக்குவதற்கு உதவி செய்யுமாறு மன்றாடினான். இவனது சோம்பல் தனத்தைக் கண்டதும் அரசன் உனது காணியில் புதையல் உள்ளது. அதனைத் தோண்டி எடுத்து நன்றாக வாழ்வாயாக என்று கூறி அனுப்பினார். அவன் அப்படியே சென்று மனைவியிடம் கூறி னான். மனைவியும் உடனே தனது கணவனைப் பார்த்து மண் வெட்டியுடன் சென்று காணி யில் புதையல் உள்ள இடத் தைத் தேடி வெட்டி எடுப்போம்- என்றாள். கணவரும் சம்மதித்து காணியை மண்வெட்டியால் வெட்டிக் கொண்டு இருந்தான். புதையலோ கிடைக்க வில்லை. இதனால் சோர்வடைந் தான்.- இவனது சோம்பேறித்த னத்தை உணர்ந்த மனைவி மீதிக் காணியையும் வெட்டிப்பார்ப் போம் என்று கூற மீதி நிலத் தையும் வெட்டி முடித்தான் கணவன். ஆனால் புதை யல் கிடைக்கவில்லை.



மனைவி கூறினாள். இப்பொழுது புதையல் தான் கிடைக்கவில்லை. ஆனால் முழு நிலமும் நன்றாகக் கொத்தப்பட்டுள்ளது. இதில் நாங் கள் விதை விதைப்போம் எனக்கூறி அந்த நிலத்தில் பயிர் செய்துநல்ல விளைச்சலைப் பெற்றார்கள். அந்த விளைச் சலை விற்றுப் பணமாக்கி சந்தோசமாக வாழ்ந் தார்கள். முயற்சி திருவினையாக்கும்...

# வரலாற்றில் இன்றைய தினம்

1959 – சீன மக்கள் குடியரசுக் கவுன்சில் திபெத் அரசைக் கலைத்தது.

1970 – 7.2 மக்னிசியூட் அளவிலான நிலநடுக்கம் மேற்குத் துருக்கியில் ஏற்பட்டத்தில் 1086 பேர் சாவு.

1988 – மாத்தறை நகர சபைக் கூட்டத்தில் குண்டுகள் வீசப்பட்டதில் 7 உறுப்பினர்களுக்குக் காயம்.

1988 – பங்களாதேஷ் ஜனாதிபதி எர்ஷாத் பதவி விலக 15 நாள்கள் எதிர்க்கட்சிகளால் காலக்கெடு.

2002 – சுயாட்சி முறைத் தீர்வைக் காண பொது ஜனநாயக முன்னணி ஆதரவு .

2009– இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல் லப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு கர்நாடகத்தில் இரத்தக் கையெழுத்து.

2009 – பாதுகாப்பு வலய பகுதியில் இடம்பெற்ற தாக்குதலில் 51 பேர் சாவடைந்தனர்.

2009 – மனிதாபிமானப் போர் நிறுத்தம் உடனடி அவசியம் என மன்னிப்புச் சபைவலியுறுத்து.

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# எங்கள் குடும்பம்

அரியாலையூர்
செ.செல்வதாஸன்



**அம்மா**
அம்மா அம்மா
அம்மா.....
அன்பான அம்மா
பொம்மை வாங்கித்
தந்து படிக்கச்
சொல்லும் அம்மா



**அக்கா**
அக்கா அக்கா
அக்கா
அழகான அக்கா
அக்கம் பக்கம்
பார்த்து
அழைத்துச்
செல்லும் அக்கா



**அப்பா**
அப்பா அப்பா அப்பா
அறிவான அப்பா
தப்பு வழி செல்லாது
தடுத்திடும் அப்பா



**அண்ணா**
அண்ணா அண்ணா
அண்ணா பண்பான
அண்ணா தண்ணீர்
பருகத் தந்து தாகம்
தீர்ப்பான் அண்ணா

**தம்பி**
தம்பி தம்பி தம்பி
தங்க நிறத் தம்பி
தத்தித் தத்தி
நடந்து
தடுக்கி விடும்
தம்பி



**தாத்தா**
தாத்தா தாத்தா தத்தா
தாடி நரைத்த தாத்தா
தடியூன்றி மெதுவாய்
தளர்வாய் நடக்கும் தாத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்வி நிலை

கலாபூசணம்
எம்.இராஜதுரை

பின்லாந்தின் கல்வி முறையைப் பின்பற்றினால் எதிர்கால சமுதாயம் தலைசிறந்து விளங்கும் என்று உதயன் பத்திரிகையின் சூரியகாந்தியில் ரூபன் என்பவரால் எழுதிய கட்டுரையைக் கண்ணுற்றேன். அதில்புதிய முறையில் கல்வி ஊட்டல் வளர்ச்சியை அவர்கள் வளர்க்கிறார்கள் என்பது நல்ல நவீன முறை என்பதை ஆட்சேபிக்கவில்லை. ஆனால் 1945, 1950 ஆம் ஆண்டுகளில் நான் கல்வி கற்ற முறையை இங்கு விவரிப்பது பின்லாந்து கல்வி முறைக்கு ஒப்பானது என நான் இங்கு குறிப்பிடுவதில் பெருமைப்படுகிறேன். 1950 ஆம் ஆண்டுக்குப் பிறகு கல்வியில் ஏற்பட்ட மாற்றங்கள் மேலைத் தேய கல்வி முறைமையை அடி ஒற்றியவையாகும். அந்த மேலைத்தேய கல்வி முறையின் நவீன மாற்றமே பின்லாந்தின் கல்வி முறையாகும். அங்கு கீழைத் தேயத்தவர்கள் கல்வி முறையை படிக்கச் செல்வதில்லை. அப்படியென்றாலும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கீழைத்தேய நாட்டவரே செல்கிறார்கள் என்று சொல்லலாம்.

45 ஆம் 50 ஆம் ஆண்டுகளில் ஆரம்பக் கல்வியைப் பற்றி விளம்பலாம். அந்தக் காலத்திலேயே மேலைத்தேய நாடுகளில் பிள்ளைமடுவம் இருந்தது. ஏனெனில் தாயும் தகப்பனும் வேலைக்குச் செல்வதனால் பிள்ளைகளைப் பிள்ளைமடுவத்தில் சேர்த்து விட்டு வேலை முடிந்து வந்து முக்கியமாக தாய் பிள்ளையை வீட்டுக்கு எடுத்துச் செல்வார். நடக்கக்கூடிய பருவப் பிள்ளையானது ஒன்றரை இரண்டு வயதானால் அதற்கு மேலும் என்றால் தகப்பன் கூட்டிச் செல்வார். தகப்பன் வீட்டில் வேலையற்றவராக இருப்பின் பிள்ளையைத் தகப்பனே பாலூட்டிப் பராமரிப்பார்.



இந்த வாழ்க்கை முறை தற்போது நகரங்களில் எமது இலங்கையிலும் உண்டு. ஆனால் மலைநாட்டைப் பொறுத்தளவில் தென்னிந்தியத் தொழிலாளரை 1948 க்கு முன்பு அதாவது ஈழநாடு சுதந்திரமடைய முன்னர் இலங்கைக்குக் கொண்டு வந்த தென்னிந்தியத் தமிழ் கூலித் தொழிலாளர்களுக்கு ஐரோப்பிய வெள்ளைக்காரரால் ஆரம்பிக்கப்பட்ட பிள்ளைமடுவம் முன்னேற்றமடைந்து முன்பள்ளி ஆரம்பப் பாடசாலை என வளர்ச்சியடைந்தது. எமது வடகிழக்கு தமிழீழத்தைப் பொறுத்தவரையில் பெண்கள் இல்லத்தரசிகளாகவே இன்றும் இருப்பதனால் மேற்படி பிள்ளை பராமரிப்பு நிலையம் தேவையற்றதான ஒன்று. அன்றைய நிலைமாறி இன்று வடகீழ் மாகாணங்கள் இரண்டிலுமே மாநகரங்களும், சிறு நகரங்களும், நகரங்களும் கூட, முன்பள்ளியில் பிள்ளைகளைச் சேர்த்துவிட்டுத் தகப்பனும் தாயும் வேலைக்குச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. 1945, 1950 களில் இந்தநிலை இல்லை. அத்துடன் ஆரம்பப் பாடசாலையில் படிப்பு முடிந்து அதாவது விளையாட்டுடனான படிப்பு.

1. முன்பள்ளிப் பருவம்
2. மழலைப் பருவம்
3. முன்பள்ளி
4. ஆரம்பப் பாடசாலை
5. உயர்தரப் பாடசாலை
6. இடைநிலைக் கல்வி
7. சர்வ கலாசாலை
8. விசேட பல்கலைக்கழகம்
9. தொழில்சார் பல்கலைக்கழகம்
10. ஆய்வு நிலைப் பல்கலைக்கழகம்

இப்படியாக இன்னும் விரிவாக்கலாம்.

முன்பள்ளிக்குச் செல்லும் பிள்ளையின் மனோநிலை எல்லாவற்றையும் கற்ற ஒரு முதிர்ந்த மூளைசாலியாக செல்கிறது. இன்று 5 ஆம் வகுப்புப் புலமைப் பரீட்சையென்ற பெயரில் இளம் சிறார்களை உளவியல் வதைக்கு உட்படுத்துகிறார்கள். இதையே மனித மூளையை நான்கு பிரிவாக ஆன்றோர் பிரித்திருக்கிறார்கள்.

1. மண்ணாங்கட்டிப் புத்தி 2. கரிப் புத்தி, 3. வாழைத்தண்டுப் புத்தி 4. கர்ப்பூரப் புத்தி.

1. மண்ணாங்கட்டிப் புத்தி கிராமிய மக்கள் இன்றும் உன்மூளையில் என்ன களிமண்ணா இருக்கிறது என்பார்கள். இந்த மூளை உள்ளவர்களுக்கு ஞாபக சக்தி என்பது பூச்சியம், சைவர் என்பர். இவர்களைத் தான் ஒற்றைறோட்டு என்பார்கள். அப்போ இரட்டை றோட்டுக்காரர் யார்?
2. கரிப்புத்தி: கரிக்கு நெருப்பை வைத்து ஊதினால்தான் பற்றும். சும்மா பற்றாது அது போல சில பிள்ளைகளின் ஞாபகசக்தியை ஊட்டுவதற்கு பின்தள்ளுப் படிப்பு, ஊக்கப்படிப்பு, கட்டளையிட்டுப் படிப்பு, மேலும் சில உந்துதல்கள் தேவை.
3. வாழைத்தண்டுப் புத்தி: பச்சையாகப் பத்தாது. அதைக் காய விடவேண்டும். காய்ந்து விட்டால் உடனே பற்றிவிடும். அதேமாதிரி இவர்களுக்குத்தான் அம்மிக்கு அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்னும் பழமொழிபோல் பல தடவை பாடமாக்க வேண்டும். அத்துடன் பல வழிகளில் பாடம் புகட்ட வேண்டும். ஊதிப் பற்ற வைக்குமாப்போல் பின்புலப் படிப்பு, தனி உந்துதல் படிப்பு இப்படிப் பல முறைகளைக் கையாண்டு மூளைக்கு ஏற்ற வேண்டும்.
4. கர்ப்பூரப் புத்தி: நெருப்பைத் தட்டி வைத்தவுடன் கர்ப்பூரம் பற்றி விடுமாப்போல் இப்படிப்பட்ட மூளை உள்ளவர்களுக்கு ஒரு தரம் சொல்லிக் கொடுத்தவுடன் மூளையில் நிறுத்திக் கொள்வார்கள்.

இந்த நான்கு வர்க்கம் மேலும் பிரிந்து பலப் பலவாகலாம். இப்படிப்பட்ட நான்கு வர்க்கத்தைத் தான் அரச பதவிகளில் அடிமட்ட ஊழியராக என்றும் கீழ் மட்ட மத்திய வகுப்பினரென்றும் மேல் மட்ட மத்திய வகுப்பினரென்றும் கீழ்மட்ட உயர் வகுப்பினரென்றும் மேல்மட்ட உயர் வகுப்பினர் என்றும் வகுத்துள்ளார்கள்.

அன்று 1945-1950 ஆம் ஆண்டுகளில் விவசாயம், மீன்பிடி ஆகிய தொழில்களின் அபிவிருத்தியை முதன்மைப்படுத்தியே கல்வியூட்டப்பட்டது. பிற்காலத்தில் இந்த முறை மாற்றப்பட்டு கணினி முறைக்கு தற்போது இங்கும் மேலைத்தேய நாடுகளைப் பின்பற்றி கல்வியூட்டலை முன்னெடுத்துச் செல்கிறார்கள். அத்துடன் கைத்தொழில், சுயதொழில், செய்வதற்கான தொழில் நுட்பப் பயிற்சியையும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடித்தவர்களுக்குக் கொடுப்பதால் நவீன தொழில்சார் தொழில் நுட்பக் கல்வியைப் பெற்றுப் பலபேர் சுயதொழிலில் ஈடுபடுகிறார்கள். எப்படியானாலும் உணவுற்பத்திக்கான கல்வியூட்டல் ஏட்டுப்படிப்பாகவே உள்ளது. இதனால் எதிர்காலம் எமது கல்வி முறைமை வெளி நாட்டவருக்குத்தான் ஏற்றதாக அமையும். எதற்கெடுத்தாலும் பணம். பணம் இருந்தால் எப்படியும் சாப்பிடலாம் என்ற மனோ நிலையிலேயே ஈழத்தில் கல்வியூட்டப்பட்டு மாதாந்தச் சம்பளம் பெறும் நோக்கமாகச் சகலரும் கல்வி கற்கிறார்கள். இதை வியாபாரக் கல்வி என்றே கூறலாம். பின்லாந்தின் கல்வி முறைமை எமது நாட்டில் பல வருடங்களுக்கு முன்பிருந்தது. தற்போது அருகிவிட்டது. இதைப் பொருளாதார அபிவிருத்தியினுடைய கல்வியாக மாற்றுவதன் மூலம் எமது நாடும் பின்லாந்து போலவே மேம்பட்டு விளங்குமென்பது உறுதி.

## ஊடக அடக்கு முறைகளுக்கான தீர்வுகள் எப்போது....?

ஜனநாயக நாடு ஒன்றின் நான்காவது தூண் ஊடகத்துறை. நாட்டின் ஸ்திரத் தன்மைக்கும் அதன் பரிபாலனத்துக்கும் நீதி,நிதி நிர்வாகச் செயற்பாடுகளோடு ஊடகம் என்கின்ற பண்பின் கூறும் இன்றியமையாததாக இருக்கின்றது. தகவல்களை சுயாதீனத்தோடும் சுதந்திரமாகவும் அறிவதற்கும் அவற்றை நாட்டின் மக்கள் நலன் கருதி வெளியிடுவதற்கும் இடமளிக்கப்பட வேண்டும். அவற்றின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு எப்போதும் இடையூறுகள் ஏற்படுத்தப்படக்கூடாது. ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலின்றி சுதந்திரமாக இயங்க அனுமதிக்கப்பட வேண்டும்.

இலங்கை ஓர் ஜனநாயக நாடு என்று சொல்லப்படுகின்றது. சொல்லப்பட்டு வருகின்றது. ஆனால் அந்த ஜனநாயகத்தின் மிகப் பிரதானமான பண்புக் கூறாகச் சொல்லப்படுகின்ற ஊடகத்துறை ஸ்திரமற்றுள்ளது. வன்முறைகளாலும், சுதந்திரமற்ற தகவல் பரிமாற்றங்களில் கொடுக்கப்படுகின்ற அச்சுறுத்தலாலும், ஊடகப் படுகொலைகளாலும் தளம்பல் அடைந்துள்ளது. ஊடகங்களின் சுயாதீனம் என்பதும், சுதந்திரம் என்பதும் கேள்விக் குறியாக இருந்து வருகின்றது.

இலங்கையின் வடக்கேயும் கிழக்கேயும் கடந்த காலங்களில் குறிப்பாக 2009 ஆம் ஆண்டுக்கு முன்பாக ஊடக நிறுவனங்கள் மீதும், ஊடகவியலாளர்கள் மீதும் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களும் படுகொலைச் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. ஊடகவியலாளர்கள் மக்களுக்கான சுதந்திரமான செய்தி அறிக்கையிடலில் தமது உயிரைத் தியாகம் செய்திருக்கின்றனர். 2009 ஆம் ஆண்டு போர் முடிவுறுத்தப்பட்டதன் பின்னணியிலும் பல ஊடகவியலாளர்கள் திட்டமிட்ட தாக்குதல்களுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இது தொடர்பான முறைப்பாடுகள் உரிய தரப்புகளிடம் ஆதாரங்களோடு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதும் எந்தவித விசாரணைகளும் மேற் கொள்ளப்படவில்லை. அவர்களுக்கான தீர்வுகளும் சரியான அணுகுமுறையூடாக இதுவரையில் பெற்றுத் தரப்படவில்லை. அரசுகள் மாறி மாறி பதவிகளில் அமர்கின்ற போதும். இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பில் மீள் ஞாபகமூட்டல் செய்யப்படுகின்ற போதும் எந்தவித ஆக்கபூர்வமான விசாரணைகளும், குற்றம் புரிந்தவர்களுக்கான தண்டனைகளும், பாதிக்கப்பட்டவர்களுக்கான தீர்வுகளும் இதுவரையில் முன்வைக்கப்படவில்லை.

ஆக இந்த நல்லாட்சி என்கின்ற சொற்பதத்திற்கான அர்த்தப்படுத்தலை மக்கள் மத்தியில் நிகழ்வுகளுக்கூடாக நிலைநிறுத்திவிடுவதற்கான செயற்பாடுகளை அரசு முன்னிலைப்படுத்தி செயற்படுத்தி வருகின்றது. அந்த வகையிலே அரசின் ஓராண்டு பூர்த்தியின் நிறைவிலும் அதன் தொடர்ச்சியான புதிய ஆண்டின் நகர்தலிலும் மூன்று பிரதான தேசிய நிகழ்வுகள் வடக்கே, குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தி முடிக்கப்பட்டுள்ளன. தற்போது அமைச்சர்களும் தமது பரிவாரங்களுடன் வடக்கு நோக்கிய பயணங்களை முக்கியப்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர். நேற்று முன்தினம் மாலை கொழும்பில் இருந்து தெற்கு ஊடகவியலாளர்களுடன் புறப்பட்ட ஊடகத்துறை அமைச்சர் நேற்றையதினம் வடக்குக்கு வருகை தந்ததுடன் வடக்கின் பிரதான பிராந்திய ஊடக நிறுவனங்களுக்குச் சென்று அங்கு கடந்த காலங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஊடக அடக்குமுறைகள் தொடர்பில் கேட்டறிந்ததுடன் அது தொடர்பான பதிவுகளையும் பார்வையிட்டுச் சென்றுள்ளார். வருகை தந்த ஊடகவியலாளர்கள் அணிந்திருந்த கொசுவுச் சட்டைகளில் கூட மொழி நல்லிணக்கம் தென்படவில்லை. புது மொழியின் கலப்பு வெளிப்பட்டு நின்றது. இது அண்மையில் வட மாகாணத்தின் ஆளுநராக பதவியேற்ற ரெஜினோல்ட் கூரே கூறியிருந்த கலப்புத் திருமணம் தொடர்பான கருத்தின் பின்னணியில் தோற்றம் பெற்ற வடக்கிற்கான நல்லிணக்கத்திற்கான புதிய கலப்படமாகவும் இருக்கலாம். ஊடக அமைச்சரின் வடக்குக்கான வருகையும் நல்லிணக்கம் என்கின்ற தொனிப் பொருளோடு அரங்கேறியிருக்கின்றது. வடக்கின் ஊடகங்கள் மீதான அராஜகங்கள், ஊடகவியலாளர் படுகொலைகள் தொடர்பில் எந்தவித விசாரணைகளும் ஆக்கபூர்வமாக முன்னிறுத்தப்படாத சந்தர்ப்பத்தில் வெறுமனே நல்லிணக்கம் என்ற சொல்லுடனான இயைபாக்கமாக அரச பிரதிநிதிகளின் வருகைகள் முன்னிறுத்தப்படுகின்றன.



எனவே அரசு இது தொடர்பில் சிந்தித்துப் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு தீர்வைத் தர முன்வர வேண்டும். ஊடகங்கள் மக்கள் மத்தியிலே கருத்துருவாக்கம் செய்கின்ற பணியை செய்கின்றன என்பதனை புரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்கும் அரசுக்கும் இடையேயான ஓர் பாலமாக ஊடகங்கள் செயற்படுகின்றன என்பதை உள்ளார ஏற்றுக் கொள்ள வேண்டும். ஊடக நிறுவனங்களதும் ஊடகவியலாளர்களதும் சுதந்திர மான செயற்பாடுகளுக்கு இடம்தர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










@eeepkannan 20h
தனக்குக் கிடைத்ததையும் பிள்ளைக்கு கெடுப்பவள் - தாய்
தனக்கு கிடைக்காததும் தன் பிள்ளைக்கு கொடுப்பவன் - தந்தை..

அன்ரனி @MaGeShAnToNy 59m
கிடைக்கும் பொழுது தவற விட்ட.. அன்பு. தேடும் பொழுது கிடைக்காது...!!!



ராகவா லாரன்ஸ் நடிப்பில், சாய்ரமணி இயக்கும் படம், "மொட்ட சிவா கெட்ட சிவா". சூப்பர் குட் பிலிம்ஸ் ஆர்.பி.சவுத்ரி தயாரிக்க, வேந்தர் மூவீஸ் எஸ்.மதன் வெளியிடும் இந்தப் படத்தில் நிக்கி கல்ராணி ஹீரோயின். மற்றும் கோவை சரளா, தம்பி ராமையா, மனோபாலா உட்பட பலர் நடிக்கின்றனர். படத்துக்காக அம்ரேஷ் இசையில் ராகவா லாரன்ஸ், "லோக்கல் மாஸ்" என்று தொடங்கும் பாடலை சுசித்ராவுடன் இணைந்து பாடியுள்ளார். பாடலில் ராகவா லாரன்ஸ் பேசிய வசனத்தை அதே மாதிரிப் பேசியோ, அல்லது பேசி நடித்தோ மின் அஞ்சலுக்கு முகவரி, தொலைபேசி எண் ஆகியவற்றுடன் அனுப்ப வேண்டும். பத்து வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே அனுப்ப வேண்டும். சிறந்ததைத் தேர்ந்தெடுத்து அந்த சிறுவர்களுக்கு ராகவா லாரன்ஸ் பணப் பரிசு வழங்கவுள்ளார்.




# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2 | | | 6 | | |
| | 8 | 3 | | | 4 | | | 9 |
| | | | | 1 | 7 | 8 | | |
| | 4 | | | | 2 | | | |
| 7 | | | | 4 | | | | 1 |
| | | | 6 | | | | 8 | |
| | | 6 | 4 | 2 | | | | |
| 4 | | | 9 | | | 1 | 5 | |
| | | 7 | | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 2 | 1 | 9 | 8 | 7 | 4 | 5 | 3 |
| 8 | 5 | 7 | 6 | 4 | 3 | 2 | 1 | 9 |
| 9 | 4 | 3 | 1 | 5 | 2 | 8 | 6 | 7 |
| 7 | 1 | 9 | 8 | 3 | 4 | 6 | 2 | 5 |
| 3 | 6 | 4 | 5 | 2 | 1 | 9 | 7 | 8 |
| 5 | 8 | 2 | 7 | 9 | 6 | 1 | 3 | 4 |
| 1 | 3 | 6 | 4 | 7 | 8 | 5 | 9 | 2 |
| 2 | 9 | 8 | 3 | 6 | 5 | 7 | 4 | 1 |
| 4 | 7 | 5 | 2 | 1 | 9 | 3 | 8 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.
2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஸ்டிக்கர் ராஜ்ஜியம்

இரண்டு பொலிஸ்காரர்கள் சேர்ந்து ஒரு தமிழ் நாட்டுப் பையனின் பைக்கை நிறுத்துகிறார்கள். பின்னர் அவனிடம்,
பொலிஸ் : லைசன்ஸ் எடு.
பையன் : இந்தாங்க சார்.
பொலிஸ் : ஆர்.சீ புக் எடு.
பையன் : இந்தாங்க சார்.
பொலிஸ் : இன்சூரன்ஸ் டக்ஸைக் காட்டு.
பையன் : இந்தாங்க சார்.
பொலிஸ் : என்ன சார், நாங்கள் கேக்கிற எல்லாத்தையும் வைச்சிருக்கிறான்.
பொலிஸ் உயர் அதிகாரி : இப்ப மாட்டுவான் பாரு...
ஏன்டா பைக்கில அம்மா(ஜெயலலிதா) ஸ்ரிக்கர் ஒட்டலை. பைக்கை ஓரங்கட்டு...









**மேடம்:** உங்கள் செயல்களில் நேர்மை நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி திருப்திகரமாகும். இலாபம் உயரும். குடும்பத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். பெண்களால் நன்மை உண்டு.



**இடபம்:** குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் பெருகும். இஷ்ட தெய்வ வழிபாட்டைச் சிறப்பாக நடத்துவீர்கள்.



**மிதுனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வளர்ச்சிக்கான பணிகளில், கவனம் செலுத்துவீர்கள். வருமானம் படிப்படியாக உயரும். வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் கவனம் தேவை.



**கடகம்:** நேர்மையைப் பின்பற்றுவது நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். மிதமான இலாபம் கிடைக்கும். சீரான ஓய்வு உடல் நலனைப் பாதுகாக்கும்.



**சிங்கம்:** நண்பரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். தொழிலில் உற்பத்தி பெருக்கத்தால் ஆதாயம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர்.



**கன்னி:** சுயமாகச் சிந்தித்துச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நடைமுறை சராசரி அளவில் இயங்கும். புதிய இனங்களில் பணச்செலவு ஏற்படலாம். தெய்வ வழிபாடு மனம் அமைதியைத் தரும்.



**துலாம்:** எதிரியால் ஏற்பட்ட சிரமம் செயலிழந்து போகும். பணியைத் திறம்பட நிறைவேற்றுவீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். இலாபம் உயரும். விரும்பிய உணவை உண்டு மகிழ்வீர்கள்.



**விருச்சிகம்:** விடாமுயற்சியால் திட்டமிட்டபணி நிறைவேறும். தொழிலில், உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். மிதமான பணவரவு கிடைக்கும். மாமன், மைத்துனர் உதவிகரமாக நடந்து கொள்வர்.



**தனுசு:** உறவினர் செய்த உதவிக்கு நன்றி பாராட்டுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் ஆதாயம் அதிகரிக்கும். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கைக்கு வந்து சேரும். பெண்கள் மகிழ்ச்சியை அனுபவிப்பர்.



**மகரம்:** நண்பரின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியை மேற்கொள்வீர்கள். சராசரி பணவரவுடன், நிலுவைப் பணமும் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.



**கும்பம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபார வளர்ச்சிக்குக் கூடுதல் பணிபுரிவது அவசியம். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் நல்லது. வாகன பயணத்தில் கவனம் தேவை.



**மீனம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழிலில் உருவாகிற இடையூறை உடனடியாகச் சரிசெய்வது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் கவனம் செலுத்துவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சமையல் குறிப்புகள்

❋ பனிக்காலத்தில் தேங்காய் எண்ணெயின் மேல் ஒரு வெள்ளை லேயர் வரக் கூடும். அந்த வெள்ளை லேயரை எடுத்து சிக்கன் அல்லது மட்டன் செய்யும் போது வெண்ணெய்க்கு பதிலாகப் பயன்படுத்தலாம்.

❋ பாயசம் செய்யும் போது பால் திரைந்து போனால், இரண்டு சிட்டிகை சமையல் சோடாவைப் போட்டால் திரைந்த பால் சரியாகிவிடும்.

❋ தயிர் பச்சடி, சாலட் என்று எது செய்தாலும், தேங்காய் எண்ணெயில் கடுகு, கறிவேப்பிலை தாளித்து கொட்ட, வாசனை சற்று அதிகமாக இருக்கும்.



**நாளை**
**பங்குனி -16**
செவ்வாய்க்கிழமை 29.03.2016
திதி: -ஷஷ்டி பி.இ.04.01 வரை
நட்சத்திரம்: அனுசம் கா.07.01 வரை
ராகுகாலம்: 03.13-04.43 வரை
சுபநேரம்: 10.43-12.13 வரை



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 750 | 800 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 100 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 600 | 600 | 600 |
| சீலா | 250 | 400 | 400 | 450 | 400 | 500 | 350 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 450 | 500 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 500 | 350 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 400 | 500 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | 300 |
| திரளி | 250 | 250 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 250 | – | 250 | 300 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஓட்டி | 250 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 300 | 400 | 200 |
| கொய் | 100 | 250 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 400 | 350 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 350 | 250 | 300 | – |



## நெல்லிக்காய் சட்னி

**தேவையானவை**

நெல்லிக்காய் பெரியது – 3
தேங்காய் – 3 சில்
கடுகு அரைத் தேக்கரண்டி
கடலைப்பருப்பு கால் தேக்கரண்டி
மிளகாய் வற்றல் – 3
பெருங்காயம் – அரைத் தேக்கரண்டி
உளுத்தம்பருப்பு அரைத் தேக்கரண்டி
எண்ணெய் – 2 தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு



**செய்யும் முறை**

நெல்லிக்காயைக் கழுவி சுத்தம் செய்து கொட்டையை நீக்கி விடவேண்டும்.
மிளகாய் வற்றல், கடலைப்பருப்பு, உளுத்தம்பருப்பு, பெருங்காயம் ஆகியவற்றைப் பொன் நிறமாக வறுத்து அதில் நெல்லிக்காய்த் துண்டுகள், தேங்காய், உப்பு சேர்த்து அரைத்துக் கொள்ளவும்.
நெல்லிக்காய் சட்னி தயார்.



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | – | 50 | 40 | 30 | 40 | 25 | 25 |
| கத்தரி | 80 | 60 | 100 | 80 | 60 | 120 | 50 | 80 |
| கரட் | 80 | 80 | 80–200 | 100 | 70 | 200 | 70 | 80 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 50 | 80 | 80 | 60 | 120 | 100 | 50 |
| பாகல் | 120 | 100 | 140 | 120 | 100 | 160 | 110 | 110 |
| கருணைக்கிழங்கு | 100 | 70 | 80 | – | 50 | – | 50 | 20 |
| பெ.வெங்காயம் | 60 | 70 | 70 | 80 | 70 | 80 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 50 | 60 | 60 | 80 | 60 | 65 |
| பூசணி | 50 | 40 | 25 | 40 | 40 | 60 | 35 | 35 |
| தக்காளி | 30 | 40 | 30 | 60 | 20 | 80 | 25 | 25 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 50 | 40 | 60 | 40 | 40 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 40 | 40 | 20 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 40 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 100 | 120 | 120 | 100 | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 | 60 | 60 | 30 | 50 |
| கோவா | 40 | 50 | 50 | 60 | 50 | 80 | 35 | |
| வெண்டி | 70 | 60 | 60 | 80 | 80 | 60 | 60 | 60 |
| போஞ்சி | 160 | 140 | 120 | 160 | 100 | 120 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 140 | 120 | 160 | 100 | 70 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 30 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 80 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 120 | 120 | 120 | 140 | 160 | 110 | 110 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 120 | 160 | 80 | 80 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 140 | 140 | – | 110 | 110 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 800 | 400 | 400 | – | 350 | 400 |
| பனங்கிழங்கு | 05 | 05 | – | 02 | 07 | – | 03 | – |

## கண்ணாடிக் குவளை

கண்ணாடித் தண்ணீர்க் குவளை அறிமுகமாகியுள்ளது. இவை கண்ணாடியால் மட்டும் அலங்காரமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் விலை 500 ரூபாவில் இருந்து 650 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

இது புதுசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## மிதக்கும் சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம்

பிரிட்டனில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மிதக்கும் சூரியசக்தி மின்னுற்பத்தி நிலையத்தினூடாக, சுமார் 2 ஆயிரம் வீடுகளுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, செயற்படுத்தப்பட்டுள்ள இந்த மிதக்கும் சூரியசக்தி மின்னுற்பத்தி நிலையம் ஐரோப்பாவின் மிகப்பெரிய மிதக்கும் மின்னுற்பத்தி நிலையமாக கருதப்படுகின்றது. பிரிட்டன் தலைநகர் லண்டனுக்கு தென் மேற்கே உள்ள மிகப்பெரிய நீர்த்தேக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்த சூரியசக்தி மின் உற்பத்தி நிலையம், நீரில் இருந்து மிகவும் பெரிய அளவிலான மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றது. இதனால் 2 ஆயிரம் வீடுகளுக்கான மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்க முடியும். அதே வேளை, மின்சாரத் தட்டுப்பாட்டை ஈடு செய்யக் கூடியதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## 57 ஜிபி தரவுகளைப் பரிமாற்றம் செய்து சாதனை

அமெரிக்காவின் இலினாய்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த கணினி ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று ஃபைபர் ஒப்டிக் கேபிள்கள் மூலமாக 57 ஜிபி தரவுகளைப் பரிமாற்றம் செய்து புதிய சாதனையைப் படைத்துள்ளது.



இதற்கு முன்னதாக 2014ஆம் ஆண்டு 40 ஜிபி அளவிலான தரவுப் பரிமாற்றமே இதுவரையில் சாதனையாக இருந்து வந்த நிலையில் இந்த சாதனை தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

இதில், 85 டிகிரி வெப்பநிலையில் 50 ஜிபி தரவுகளைப் பரிமாற்றம் செய்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஏனெனில் இந்த வெப்பநிலையில் அனைத்து தரவுகளும் வெற்றிகரமாகப் பரிமாற்றமாகாது, குளிர் நிலையில் மட்டுமே பறிமாற்றங்கள் வெற்றிகரமாக நடக்கும் என்றும் அறை வெப்பநிலை அதிகரித்தால் பரிமாற்றங்கள் பெரும்பாலும் தோல்வியில் முடியும் அல்லது பறிமாற்ற கால நேரம் அதிகரிக்கும்.

## உதட்டு அசைவை இனம்காணும் நுட்பம்

உதடுகளின் அசைவை வைத்து பேசுவதை இனங்காணும் தொழில்நுட்பமொன்றை பிரிட்டன் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.



குற்றம் மற்றும் தீவிரவாதத்துக்கு எதிராகச் சண்டையிடுவதற்கு இது உதவும் என இதனை உருவாக்கிய பிரிட்டன் ஈஸ்ட் ஆங்கிலியா பல்கலைக்கழகத்தின் கணினி விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

சி.சி.ரிவியில் பதிவாகியுள்ளவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கும், பிரபலங்களின் கதைகளை தேடி வெளியிடும் ஊடகவியலாளர்களாலும் கூட பயன்படுத்தப்படலாம் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# சதாஹரித வருடாந்த வனவியல் விருதுகள் விழாவில் உயர் சாதனையாளர் கௌரவிப்பு

நிலையான பசுமை முதலீட்டில் முன்னோடியான சதாஹரித குழுமம், மார்ச் மாதம் 16 ஆம் திகதி அத்திடிய ஈகிள் மண்டபத்தில் லயன்ஸ்ராார் எனும் தொனிப் பொருளில் அதன் வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வைக் கொண்டாடியது.

பசுமை முதலீட்டுத் துறையில் ஈடுபட்டு வரும் நாட்டின் முன்னணி நிறுவனமாக சதாஹரித குழுமம் திகழ்கிறது.




இலங்கையின் பெருந்தோட்டத்துறையில் கடந்த ஒரு தசாப்தத்துக்கும்மேலான அனுபவத்தைக்கொண்டுள்ள இந்த நிறுவனம், அகர்வூட், சந்தனம், மகோகனி மற்றும் தேக்கு ஆகிய வனவியல் திட்டங்கள் மட்டுமன்றி, தேயிலை ஏற்றுமதி மற்றும் பரந்துபட்ட ஏனைய உற்பத்திகள் போன்ற பிரிவுகளிலும் நிபுணத்துவத்தை கொண்டுள்ளது.

கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில் உயர் விற்பனை வளர்ச்சி காரணமாக எமது வருவாய் 31% வீதத்தால் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவு செய்துள்ளது என சதாஹரித பிளாண்டேன்ஸ் குழுமத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சதிஷ் நவரத்ன தெரிவித்தார்.

பசுமை முதலீடுகளில் குழுமத்தின் வருவாயை அதிகரித்துக் கொள்ளவும், நிலையான வனவியல் மேலாண்மைக்கும் பங்களிப்பு வழங்கிய 400 இற்கும் மேற்பட்ட விற்பனை ஊழியர்களின் கடின உழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் சேவை செயற்திறன் ஆகியவற்றை சதாஹரித வருடாந்தம் கௌரவித்து வருகிறது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் மொத்தமாக 77 விருதுகள் வழங்கப் பட்டன. இந்த நிகழ்வில் புதிய வர்த்தக உருவாக்கம், வாடிக்கையாளர் தக்க வைப்பு குறிகாட்டி சாதனையாளர்கள், மீட்புச் சாதனை யாளர்கள் மற்றும் புதிய வருமான உருவாக்கச் சாதனையாளர்கள் உள்ளிட்ட பல பிரிவுகளின் கீழ் நிறுவனத்தின் உயர் செயற்பாட்டாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் குறித்து கருத்து தெரிவித்த நவரத்ன, பசுமை முதலீட்டு துறையிலும், சந்தையிலும் முன்னோடி எனும் ரீதியில் சதாஹரித, இறப்பர்துறையிலும் அதன் தொழில்நுட்ப அறிவை முதலீடு செய்யவுள்ளமையை நாம் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிலையத்துடன் இணைந்து இறப்பர் பெருந்தோட்டத்தில் ஊடுபயிராக எகியுலேரியா மரங்களை பயிடுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளோம் – என்றார்.

இலங்கையில் பசுமை முதலீட்டுத்துறையில் முன்னோடியான சதாஹரித பிளாண்டேன் லிமிட்டெட் நிறுவனம், முதலீட்டாளர்களுக்கு நன்மையளிக்கக்கூடியதும், சூழல் மற்றும் உலகின் பாதுகாப்புக்கு பங்களிப்பு வழங்கக்கூடியதுமான, வணிக ரீதியான வனவளர்ப்பு முதலீடுகளை வழங்கி வருகிறது. (தி)

# சிறுவரின் ஆரோக்கியமான காலை உணவை வலியுறுத்தி மைலோ நாடளாவிய பரப்புரை

சிறுவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதை ஊக்குவித்து, அவர்களுக்குஆதரவளிக்கும் முயற்சிகளை மிக நீண்ட காலமாக தொடர்ச்சியாக முன்னெடுத்து வந்துள்ள ஒரு வர்த்தக நாமமான மைலோ, சிறுவர்கள் ஆரோக்கியமான காலையுணவை உட்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை ஊக்குவித்து, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடிப்பதை ஊக்குவிக்கும் முகமாக மற்றுமொரு பெரிய முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது.

இலங்கையிலுள்ள சிறுவர்கள் மத்தியில் அனேகமானோர் காலையில் சீரான காலையுணவை உட்கொள்ளாதுபாடசாலைக்குச் செல்கின்றனர் என அண்மைய ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன.



1960 ஆம் ஆண்டுமுதல் மைலோ இலங்கையில் நிலைபெற்றுள்ளது. இலங்கையிலுள்ள சிறுவர்கள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக விரும்பி வந்துள்ள ஒரு வர்த்தகநாமம் என்ற வகையில், இலங்கையிலுள்ளஒவ்வொரு குடும்பமும்தமது தினத்தை ஆரம்பிப்பதற்கு முறையான ஊட்டச்சத்தை உள்ளெடுத்து, இந்தநல்நோக்கத்தை சிறப்பாக முன்னெடுப்பதை ஊக்குவிக்கும் வகையில் அவர்களை அறிவூட்ட வேண்டியது மிகவும் பெரிய தொரு பொறுப்பு என நாம் உணர்ந்துள்ளோம் என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பான வகை உற்பத்திகள் பிரிவின் உதவித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர குறிப்பிட்டார்.

வணிகம்

சிறுவர்கள் மத்தியில் வெற்றியுணர்வை ஊக்குவிக்க உதவுவது மைலோவின்தாற்பரியமாக அமைந்துள்ள நிலையில், ... அவர்கள் உணர்ந்துகொள்வதற்கு அவர்களை வழிநடத்துவது எம்மைப் பொறுத்தவரையில் மிகமுக்கியமானது. சீரான உணவுடன், மோல்ற்று, பால் மற்றும் கொக்கோ ஆகியவற்றுடன்விற்றமின்கள்மற்றும்கனியுப்புக்களின் செழுமை நிரம்பிய இயற்கை நலச்செழுமை கொண்ட மைலோவை உள்ளெடுப்பது சிறுவர்கள் தமது நாளை முற்று முழுதான சக்தியுடன் ஆரம்பிக்க உதவி, நாள் முழுவதும் துடிப்புடன் திகழுவதற்குஉதவுகின்றது.

நாட்டில் அதிக எண்ணிக்கையானவர்கள் ஒன்றுகூடி காலையுணவை உள்ளெடுக்கும் வகையில் கொழும்பு விளையாட்டு அமைச்சின் மைதானத்தில் மைலோ தனது காலையுணவுப் பரப்புரையை ஆரம்பித்து வைத்துள்ளது. இந்த நிகழ்வில் 6,000 சிறுவர்களும், அவர்களின் பெற்றோரும் ஒன்றுகூடி, தமது மைலோ கோப்பைகளை கைகளில் உயர்த்தியவாறே, ஒவ்வொரு நாளும் ஆரோக்கியமான காலையுணவை உள்ளெடுப்போம் என்ற உறுதிமொழியை அளித்தனர்.

அடுத்து வரும் சிலவாரகாலப்பகுதியில் காலையுணவின் முக்கியத்துவம் தொடர்பான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் நோக்குடன் ஒவ்வொரு 400 கிராம் மைலோ பைக்கட்டுடனும் இலவச கப்புகளை மைலோ வழங்கவுள்ளது.

தொழில்நுட்ப அறிவுமிக்க தனது நுகர்வோரை எட்டும் வகையில் மைலோ சிறிலங்காவின் முகநூல் பக்கத்தில் மைலோ காலையுணவுச் சுற்றுலாஒன்றையும் மைலோ ஏற்பாடுசெய்யவுள்ளது. இந்தமெய்நிகர் சுற்றுலாவில் விரைவாகவும், இலகுவாகவும் பின்பற்றக்கூடிய காலையுணவுயோசனைகள் தொடர்பான பல்வேறுபட்ட அம்சங்கள் உள்ளடங்கியுள்ளதுடன், இதன் மூலமாக இலங்கையில் அனைத்து குடும்பங்களும் ஊட்டச்சத்தும், சௌகரியமும் கொண்ட காலையுணவை உள்ளெடுப்பதற்கு மைலோ வழிகாட்டவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு

கொடுத்து வந்திருப்பதுடன், பெரும்பாலும் போர் வெற்றிபற்றியே கதைத்தும் வருகின்றோம். அப்படியிருந்த போதும் போர் ஏற்படக் காரணம் என்ன என்பது பற்றி இதுவரை ஆட்சிக்கு வந்த அரசுகள் சரியாக ஆராய்ந்து, அதற்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்கவில்லை என்றே நான் கருதுகின்றேன்.

ஆகையால் போர் எதனால் ஏற்பட்டது, மீண்டும் அவ்வாறான ஒரு போர் ஏற்படாதிருக்க நாம் என்ன செய்ய வேண்டும், என்பதைப் புரிந்துகொள்வதே மிக முக்கியமாக தேவைப்படுகிறது. சுதந்திரம் ஏற்பட்டது முதல் இதுவரை தீர்க்கப்படாத மிக முக்கிய மான பிரச்சினையாகவே நான் இதனை இனம்காண்கிறேன்.

இனங்களுக்கிடையே நல்லுறவும் நல்லிணக்கமும் ஏற்படாவிடின் அதுவே பிரச்சினையாக அமைகின்றது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஆயுத ரீதியில் தோற்கடிக்கப்பட்டது. அவ்வாறு எமது பாதுகாப்பு படைகளிடம் போர் ரீதியில் தோல்விகண்ட போதும், போர்க் களத்திலிருந்த அவர்களின் உயிர்கள் மடிந்த போதும், ஈழத்திற்கான கனவை காணும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை தோல்வியடையவில்லை என்பதை நான் உணர்கின்றேன்.

இந்த நிலைமையை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் தனி ஈழத்திற்கான கருத்து, துப்பாக்கிக் குண்டுகள், எறிகணைகள் மூலம் தோல்வியடையச் செய்ய முடியாத ஒன்றாகும்.

தனிநாட்டுக்கான கோரிக்கையை செயலிழக்கச்செய்ய வேண்டுமாயின், இந்த நாட்டில் இனங்களுக்கிடையே ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் இன ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக நாம் எடுத்துவரும் முயற்சிகளைத் தடுக்கவோ, நாம் இந்த நாட்டை தாரைவார்த்துக்கொடுக்கின்றோம் என்பவர்களோ, நாட்டை பலவீனப்படுத்துகின்றோம் என்று கூறுபவர்களோ, மீண்டும் இந்த நாட்டில் ஒரு போர் ஏற்படாதிருக்க தாம் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் என்ன என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் தீராது இருக்கும் முக்கிய பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும். அவ்வாறு அவர்களது பிரச்சினைகளைத் தீர்த்துவைக்காதபோது,- எதிர்காலத்தில் மீண்டும் அந்த இளைஞர்கள் ஆயுதம் ஏந்தவேசெய்வார்கள்.

ஆகையால் மிக இக்கட்டான ஒரு பிரச்சினையாக உள்ள இதனை நாம் முன்னுரிமை கொடுத்து தீர்த்துவைக்க வேண்டும் என்பதே எமது கருத்தாகும். ஆகையால் இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அரசு என்ற வகையில் முன்னுரிமையை நாம் வழங்கியிருக்கின்றோம்.

இதுவரையில தீர்க்கப்படாத, ஆயினும் தீர்க்கப்படவேண்டிய எதிர்காலத்தில் ஒரு போர் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதே மிக முக்கிய அம்சமாகும். எமது புதிய அரசமைப்பின் ஊடாகவும், இதுவரை செயலில் இருந்துவரும் நமது நாட்டின் அரசமைப்பில், மக்களின் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாத காரணத்தினால், இருந்து வரும் குறைபாடுகளை தீர்த்து வைக்க வேண்டும்.

எனவே சுதந்திரமான ஒரு நாடு என்ற வகையில், மீண்டும் நாம் காட்டுவாசிகளாக மாறாது, உலகில் முன்னேறிய நாடுகளில் உள்ள உயர்ந்த கருத்துக்களை கவனத்திற்கொண்டு, நமக்கு உகந்த புதிய ஒரு நாட்டை உருவாக்குவதற்கும், இதுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் நாம் அர்ப்பணிப்புடன் உறுதிபூணுவோம் என கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

எமது அரசின் இந்த ஒரு வருடகாலம் சற்று வித்தியாசமாகவே முன்னகர்ந்து சென்றுள்ளது. நமது நாட்டுக்குத் தேவையான மக்களின் ஜனநாயகம், சுதந்திரம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாட்டின் ஒரு அங்கமாகவே 19ஆவது திருத்தம், சுயாதீன ஆணைக்குழுக்கள் ஆகிய செயற்பாடுகள் இந்த அரசினால் முன்னெடுக்கப்பட்டன.

எமது சமூகத்தின் மாற்றத்திற்குத் தேவையான, ஆயினும் சிலரின் பரிகாசத்திற்கும், கேலிக்கும் அவதூறுகளுக்கும் காரணமாக அமைந்துள்ள நல்லாட்சியை ஏற்படுத்துவதன் ஆரம்ப கட்டமாகவே எமது இந்தச் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

சிலர் கேட்பது போல், இந்த அரசின் செயற்பாடுகள் கண்ணுக்குப் புலப்படக் கூடிய வகையில் அமையவில்லை என்பதையும் எமது வேலைகள் மந்தகதியாகவே நடைபெறுகின்றன என்பதுபற்றி பொதுமக்கள் கூறிவருவதையும் நான் ஏற்றுக்கொள்கின்றேன்.

எதனால் இந்தத் தாமதங்கள் ஏற்படுகின்றன? நானும் அமைச்சராக இருந்த எமக்கு முந்திய ஆட்சியானது, வீதிகளை அமைக்கின்ற போது, அந்த வீதியை அமைக்கப் போவதாகவும் அதைக் குறிப்பிட்ட 3 நிறுவனங்களுக்குக் கொடுக்கப்போவதாகவும் அறிவித்து அனுமதி பெற்ற மறுதினமே அந்த நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் சுபாவத்தைக் கொண்டிருந்தது.

அதேபோன்று எந்தவொரு செயற்திட்டத்திற்கும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுவதுமில்லை. ஆனால் எம்மை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காக வாக்களித்தவர்கள் நல்லாட்சியை எதிர்பார்த்தே வாக்களித்தனர். அதன் முதல் அங்கமாக நிதி முகாமைத்துவம், நிதியைக் கையாளுவது பற்றிய ஒழுங்குகள் ஆகியவற்றைப் பின்பற்றும் நல்லாட்சியை எதிர்பார்த்தனர்.

எனவே கடந்த ஓராண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட அனைத்து வேலைத் திட்டங்களும் கேள்விப்பத்திரம் கோரப்பட்டே, செயற்படுத்த வேண்டும் என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடித்து வந்துள்ளோம்.

மேற்குறிப்பிட்ட தாமதத்திற்கு இதுவே முக்கிய காரணமாகும். மறுபுறத்தில் ஒரு நாடு என்ற வகையில், முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் அதற்கான சர்வதேசத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானதாகும். ஆயினும், 2015 ஜனவரி 08ஆம் திகதிக்கு முன் நமது நாடு சர்வதேச ரீதியில் எந்த இடத்தில் இருந்தது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். நாம் ஓரம்கட்டப்பட்ட நிலையிலேயே இருந்தோம்.

இன்று உலகில் அத்தனை நாடுகளையும் நாம் எமது நேச நாடுகளாக மாற்றியுள்ளோம். நாம் கண்ணியமான முறையிலும் காத்திரமான முறையிலும் நல்லாட்சியை முன்னெடுத்துவருகின்றோம் என்ற நம்பிக்கையின் பேரிலேயே சர்வதேசத்தின் இந்த ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்துள்ளது.

அதனாலேயே, சர்வதேச அமைப்புக்கள் பெருமளவுக்கு எமக்கு உதவ முன்வந்திருக்கின்றன. அண்மையில் எமது நாட்டுக்கு வருகைதந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் நம் நாட்டின் கல்வி, சுகாதார, வீதி அபிவிருத்திக்கு பெருமளவு நிதியுதவிகளை எமக்கு வழங்க இணக்கம் தெரிவித்தார்.

நாட்டு மக்களிடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகின்றேன். நானும் அமைச்சராக விருந்த கடந்த ஆட்சியின் முன்னாள் ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக இன்னும் இரண்டு ஆண்டுகள் பதவியில் இருக்கக்கூடிய வாய்ப்பு இருந்த பின்னணியிலும், அவர் எதற்காக தேர்தலைப் பிரகடனப்படுத்தினார்.

இன்றுவரை முன்னாள் ஜனாதிபதியோ, அவரைச் சார்ந்த பொறுப்புக்கூறத்தக்க ஒருவரோ தமது ஆட்சியை முன்னெடுப்பதற்காக மேலும் இரண்டு ஆண்டுகள் மிஞ்சியிருந்த நிலையில் எதற்காகத் தேர்தலைப் பிரகடனப்படுத்தினார் என்பதற்கு இதுவரை விடைகூறவில்லை.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 08ஆம் திகதி தேர்தலைப் பிரகடனப்படுத்தாதிருந்தால் முன்னாள் ஜனாதிபதியே தற்போதும் ஜனாதிபதியாக இருந்திருப்பார். ஆயினும் முன்னைய அரசின் பொறுப்பு மிக்க ஒரு அமைச்சராக இருந்த நான் அறிந்தவகையில், முன்னாள் ஆட்சியாளருக்கும் அவரது சகாக்களுக்கும் நம் நாட்டுக்குள்ளும் சர்வதேசத்திலும் முகம் கொடுக்கநேர்ந்திருந்த சில முக்கிய சவால்களுக்கு முகம்கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

விடைகாணமுடியாத அவ்வாறான பிரச்சினைகளுக்கு விடைகாணும் வகையில் அவசர தேர்தல் ஒன்றைப் பிரகடனப் படுத்த வேண்டும் என்ற தீர்மானம் அவர்களால் எடுக்கப்பட்டது.

முக்கிய பல சம்பவங்கள் பற்றி தற்போது சில விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. எக்னலிகொட சம்பவம், லசந்த விக்ரமதுங்க கொலைச்சம்பவம், ரவிராஜின் கொலை, தாஜுதீன் கொலை ஆகிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

நான் ஜனாதிபதி பதவியை ஏற்பதற்கு முன், பல வருடங்களாக மேற்கூறிய சம்பவங்கள் எவ்வாறு ஏற்பட்டன என்பது பற்றி இந்தநாட்டு மக்களால் கேள்வி எழுப்பப்பட்டு வந்தது. நாட்டு மக்களால் எழுப்பப்பட்ட கேள்விகள் ஜெனிவா வரை சர்வதேச மயமானது. இவற்றுக்கான பதில் என்ன என சர்வதேசம் எம்மிடம் வினவியது.

அத்துடன் போர் நிகழ்ந்த காலகட்டத்தில் மனித உரிமைகள் மீறப்பட்டன என்ற குற்றச்சாட்டை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து தப்பி, வெளிநாடு சென்றிருந்த குழுவினர்கள் பல்வேறு வகையில் சர்வதேசமயப்படுத்தினர்.

அந்தக் காலகட்டத்தில் ஐ. நா. சபை உட்பட சர்வதேச சமூகத்தினால் தொடர்ந்தும் இது பற்றி அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதேபோன்று பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடத்தப்பட்ட போது அம்மாநாட்டில் கலந்துகொள்ள பல வெளிநாட்டு தலைவர்கள் தயக்கம் காட்டினர். பொதுநலவாய நாடுகளின் சில தலைவர்கள் தமது வருகையை தவிர்த்துக்கொண்டனர். இந்த நாட்டில் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன. ஜனநாயகம் இல்லாத நிலை தோன்றியுள்ளது. ஊழல் மிக்க ஆட்சி நிலவுகின்றது. சுதந்திரம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது போன்ற காரணங்களை முன்வைத்த சில அரச தலைவர்கள் நமது நாட்டுக்குப் பயணம் மேற்கொள்வதை தவிர்த்துக்கொண்டனர்.

சில முக்கிய சர்வதேச தலைவர்கள் நமது நாட்டுக்கு வருகைதந்த போதிலும், நம் நாட்டு பொதுமக்கள் பலரை சந்தித்து விடயங்களைக் கேட்டறிந்துகொண்ட அவர்கள், நமது நாட்டில் பெரியளவில் பிரச்சினைகள் இருப்பதாகவும், அவற்றை துரிதமாக தீர்த்துக்கொள்ளவேண்டும் என்றும் கோரினார்கள்.

ஆக அன்றைய அரசுக்கு நம்நாட்டு மக்களாலும் சர்வதேச சமூகத்தினாலும் முன்வைக்கப்பட்ட வினாக்களுக்கு விடைகூற முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த சூழ்நிலையிலேயே அவசர அவசரமாக நடத்தப்பட்ட தேர்தலில் 42 நாட்களில் ஆட்சியை மாற்றி, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நாம் ஆட்சிக்கு வந்தோம்.

அப்படி ஆட்சிக்கு வந்த நாம் கடந்த அரசினால் விடைகூறமுடியாதிருந்த வினாக்களுக்கு விடையளித்ததுடன், நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்காகவே நாம் ஆட்சியமைத்தோம். இதன்போது நாம் எமது அரசியல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்தவற்றை நிறைவேற்றுவதே எமது கடமையாகும்.

படைவீரர்களுக்கு பங்கம் விளைவிக்கப்படுகிறது என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால், சர்வதேச ரீதியில் எமது நாட்டுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்க வேண்டுமாயின், எமது நாட்டின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு உரிய முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மையை வெளிப்படுத்தி அந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து மீள வேண்டும்.

அந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து மீளும் வகையில், ஏதேனும் ஒரு இடத்தில் நிகழ்ந்த குற்றங்களுக்கு உரிய தண்டனையை வழங்குவது சரியா? அல்லது எமது நாட்டுக்காக பாடுபட்ட நாட்டின் நற்பெயரை காப்பாற்றிய அனுபவமும் ஆற்றலும் மிக்க எமது படையினர் மீது அவதூறுகளை சுமத்துவதற்கு இடமளிப்பது சரியா? அல்லது சர்வதேச தரத்தில் ஏற்றுக்கொள்ளப்படும் தரமான கீர்த்தி மிக்க முப்படைகளாக எமது படைகளின் பெயர்களை தக்கவைத்துக் கொள் வதா?

போர் தொடர்பாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்கள் காரணமாக எமது படையினருக்கு எத்தனை பயிற்சி வாய்ப்புகளை இழக்க நேரிட்டது. பல தசாப்தங்களாக அமெரிக்காவால் எமது படையினருக்கு வழங்கப்பட்டு வந்த பயிற்சியை இழக்க நேரிட்டது. இந்தியா உட்பட இன்னும் பல நாடு களில் இருந்து கிடைக்கப்பெற்ற பல பயிற்சி களை இழக்க நேர்ந்தது.

எமது புதிய அரசு ஆட்சிக்கு வந்ததன் பின், அவ்வாறு இழக்க நேர்ந்த வாய்ப்புகளை மீண்டும் எமது படையினருக்குப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. உலக தரத்திலான பயிற்சிகளை, அனுபவங்களை, அறிவினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு இப்போது எமது படையினருக்கு கிடைக்கப்பெற்றுவருகிறது. முதலில் நான் குறிப்பிட்ட அந்த சம்பவங்கள் தொடர்பான எந்த ஒரு விசாரணையும் பாதுகாப்புப் படையினரை குறிவைத்து ஆரம்பிக்கப் பட்டவையல்ல.

எக்னெலிகொட சம்பவத்தை எடுத்துக் கொண்டால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அது பெரிய அளவில் கவனத்தை ஈர்த்த ஒரு சம்பவமாகும். ஆகையால் அதன் உண்மை நிலையை அறிவதற்காக விசாரணையை ஆரம்பிக்க நேர்ந்தது. விசாரணை அவ்வாறு முன்னோக்கிச் செல்லும் போதே, அச்சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் என்றவகையில் சில அரச படையினர் மீது விசாரணை மேற்கொள்ள வேண்டிவந்துள்ளது.

விசாரணை முடிவில் அந்தப் படையினர் குற்றவாளிகளா? சுற்றவாளிகளா? என்பது நிரூபணமாகும். இவ்வாறான சம்பவங்கள் பற்றி நியாயமான விசாரணைகளைக் கோரும் உள்நாட்டுக்கும் வெளிநாட்டுக்கும் பதிலளிக்கவேண்டியது அரசின் கடமையாகும். அவ்வாறு பதிலளிப்பதன் மூலம் களங்கமற்ற தன்மையை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமே, ஒரு நாடு என்ற வகையில் எம்மால் முன்னோக்கிச் செல்ல முடியும்.- என்றார்.

(த-வ-5)

## ஜனாதிபதி

செய்வதற்காக, 290 பேர் மாவட்ட செயலகத்தால் அழைக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு அழைக்கப்பட்டவர்களில் 111 பேரும், இரண்டாம் நாள் 290 பேர் அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 120 பேரும், மூன்றாம் நாளான நேற்று 257 பேர் சாட்சியப் பதிவுக்காக அழைக்கப்பட்டிருந்த போது, 135 பேரும் தங்களுடைய சாட்சியங்களை ஆணைக்குழுவின் முன் பதிவு செய்திருந்தனர்.

முல்லைத்தீவில் நடைபெற்ற இந்த சாட்சியப்பதிவுகளின் போதும், விடுதலைப் புலிகளிடம் இருந்து வந்தவர்களை இராணுவத்தினரிடம் கண்டதாகவே அதிகமான சாட்சியங்கள் பதியப்பட்டிருந்தன.

(த-வ-21,ரி7)

### மரண அறிவித்தல்

**பிலிப் றொபினற்(வவா)**



குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட பிலிப்றொ பினற் (வவா) 22.03. 2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.03.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை , உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இல.2, ஜஸ்மினான்ட் றோட், குருநகர், யாழ்ப் பாணம்.
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள் (60783) (12.18.19)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா பாலச்சந்திரன் (குஞ்சன்)
(பாரஊர்தி உரிமையாளரும், சாரதியும்)



கொல்லங்கலட்டியைப் பிறப் பிடமாகவும் நகுலேஸ்வரா வீதி, ஆலடி இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலச்சந்திரன் 26.03.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான செல்லையா- சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் வனஜாவின் அன்புக் கணவரும் சுரேஸ்(அண்ணா), கபிலன், கஜீபன், கஜன்(குட்டி), ஜெனனி, கோசலா ஆகியோரின் அன்புத் தந்தையும் அருமைநாதன் , இராஜேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வரதராஜாவின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2016) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நகுலேஸ்வராவீதி,
ஆலடிச் சந்தி, இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

**077 978 5795**

## பாலமனோகரி பூங்குன்றன்



உயிலங்குளத்தைப் பிறப்பிடமாகவும் துணுக்காயை வதிவிடமாகவும் கொண்ட பால மனோகரி பூங்குன்றன் நேற்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பூங்குன்றனின் அன்பு மனைவியும், துர்க்காவின் அன்புத் தாயாரும் கணபதிப்பிள்ளை -அமரர் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் பூதத்தம்பி-சோமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் பாலமனோகரன், பாலகௌரி, பாலகௌசிகா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2016) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துணுக்காய் பண்டி வெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
துணுக்காய் — கணவர்-பூங்குன்றன்

பிறப்பு 25 . 05 . 1932



இறப்பு 23 . 03 . 2016

### திருமதி
### வள்ளியம்மை (தங்கம்மா) இரத்தினம்

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மத்தி நீர்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை (தங்கம்மா) இரத்தினம் 23.03.2016 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னம்மா தம்பதியினரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சபாபதி முத்துப்பிள்ளை தம்பதியினரின் அருமை மருமகளும் இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கோகிலாதேவி (குஞ்சு), காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் லோகநாதன் (நாதன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு (கிளி),ஜெயராணி (ராணி) ஆகியோரின் மாமியும்,சசிகரன்- சுதர்சினி, சலீந்திரன், சசிகுமார், தனேஸ்வரன், லோவினோத், நிலானி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சயன்,சரன் ஆகியோரின் பூட்டியும், காலஞ்சென்ற பர்வதம் மற்றும் பாக்கியம், பொன்னம்மா, நல்லம்மா, சிவஞானம், வைத்திலிங்கம், சிவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2016) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சியாகாட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
நாதன்-0015142595940
நிலானி-0041764883488

தகவல்:
நாதன்
0094750184842

## மரண அறிவித்தல்கள்

### நகுலேஸ்வரன் ரஜீந்திரன்



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நகுலேஸ்வரன் ரஜீந்திரன் கடந்த 25.03.2016 வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் கந்தன் நகுலேஸ்வரன் (நகுலி) - ஸ்ரீதயா (தயா) தம்பதிகளின் அருந்தவப் புதல்வனும் டிலக்ஷனா, றதீஷா, றுஷாந்தீகா (றம்மியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பகீரதன் (ராசன்) அவர்களின் அன்பு மைத்துனரும் சின்னத்தம்பி - செல்வம், கந்தன் - செல்வி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஸ்ரீவித்தியா, ஸ்ரீசுமணா, சுகிர்தா ஆகியோரின் பெறாமகனும் கணேஸ்வரன், பூமலர், கருணை மலர், ஜெகமலர் ஆகியோரின் பாசமிகு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராயிலுள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி. | தொடர்பு: 071 4543198 | தகவல்: குடும்பத்தினர். |

## திருமதி மகேஸ்வரி வைத்தியநாதர்
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை-தாவடி இந்து தமிழ்கலவன் பாடசாலை)



யாழ். கொக்குவில் தாவடியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, கனடா **Markham** ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி வைத்தியநாதர் கடந்த (25.03.2016) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியினரின் இளையமகளும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கந்தையா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வைத்தியநாதர் (ஆங்கில ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் சிவபாலன் (கனடா), ஞானலிங்கம் (ஜேர்மனி), சிவசங்கரன் (இங்கிலாந்து), சிவகுமாரன் (இங்கிலாந்து), சிவநேசன் (முன்னாள் இலங்கை மத்திய வங்கி அதிகாரி - ஐக்கிய அமெரிக்கா), சிவசக்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், சிதம்பரநாதன், ரத்தினம், நவரட்ணம் ஆகியோரின் இளைய சகோதரியும் லலிதகுமாரி, குமுதினி, தமிழ்ச்செல்வி, துளசி, யசோதா, யுவிந்தீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
செ.செல்வராசா (நாதன்)

## திருமதி கேதீஸ்வரி தர்மசோதி
(இளைப்பாறிய சங்கீத ஆசிரியை- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி)



கட்டுடையைச் சேர்ந்த இளைப்பாறிய சங்கீத ஆசிரியை திருமதி கேதீஸ்வரி தர்மசோதி அவர்கள் 27.03.2016 அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் கட்டுடையைச் சேர்ந்த மலாயன் பென்சனர் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை கணேசையா நடராசா-தெய்வநாயகி தம்பதியரின் ஏக புத்திரியும் இணுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான தம்பையா- இரத்தினம் தம்பதிகளின் மருமகளும் தம்பையா தர்மசோதி (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் ந. குகராஜா (கொழும்பு) காலஞ்சென்ற ந. சண்முகராஜா மற்றும் ந. சிவுராஜா (லண்டன்), ந.தாமோதரன் (கனடா), ந. ராஜேந்திரன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
த. தர்மசோதி (கணவர்)

## நெருக்கடி

பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் மின் தேவையைப் பூர்த்திசெய்ய 100 மெகாவோட்ஸ் மின்சார அலகைக் கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும், அதற்கு இன்னும் நான்கு வாரங்கள் எடுக்கும்.

இந்த நிலையில், மின்சார உற்பத்திக்கான நீர்நிலைகளில் கிரமமாக நீர்மட்டம் குறைந்துவருவதன் காரணமாக, மின் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று பொறியியலாளர் சங்கத் தலைவர் அதுல வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் ஒரு மணித்தியால மின்சார விநியோகத் தடையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தை எடுக்காதுபோனால், நிலைமையை சமாளிக்க 500 மெகாவோட்ஸ் அலகை கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்படும். இதனால் இலங்கையின் பொருளாதாரத்திலும் பாதிப்பு ஏற்படும் என்றும் வன்னியாராச்சி குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாட்டில் இடம்பெறும் வரட்சியான காலநிலை காரணமாக நாளொன்றுக்கு மின்சாரப் பாவனை 250 மெகாவோட்ஸால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(து-வ-சி)

## சிறிலங்கா

சுதந்திரக் கட்சியின் இருப்புக்கு மற்றும் எதிர்கால வெற்றிகள் தொடர்பாக ராஜபக்சாக்களிடமிருந்து விலகிச் செல்வதானது பாரதூரமான பிரச்சினையொன்றாகிவிடக் கூடுமென்பதே கட்சியின் சிரேஷ்ட தரப்பினரின் இந்தத் தீர்மானத்துக்குக் காரணமாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மகிந்த ராஜபக்ச மீது பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடுக்கப்பட்டுள்ளதோடு, கோத்தபாய ராஜபக்சவுக்கு ஊழல் குற்றச்சாட்டுக்கள் குறைவாகக் காணப்படுவது மற்றும் நகரங்கள் சார்ந்த மற்றும் பொதுமக்களுக்கான சேவைகள் சம்பந்தமாக பெருத்த வரவேற்பொன்றைப் பெற்றிருப்பதுடன், போரை முடிவுக்குக்கொண்டுவருவது தொடர்பாக, கடமைப் பொறுப்பொன்றை நிறைவேற்றியிருப்பது ஆகிய காரணிகளின் மீது, இந்த முடிவுக்கு வந்திருப்பதாக சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய புள்ளி ஒருவரின் இல்லத்தில் வைத்து இது குறித்து தீர்க்கமாக ஆராயப்பட்டுள்ளது. கட்சியின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

(து-வ-22)

## இலங்கை

வருகிறார். விடுமுறை நாளில் திருவண்ணாமலை முகாமுக்குச் சென்று, குடும்பத்தினரைப் பார்த்துவருவது வழக்கம்.

இந்த நிலையில, நேற்று முன்தினம் கோவையிலிருந்து சேலம் பஸ்ஸில் வந்த இவர், புது பஸ் நிலையத்தில் போத்தல் ஒன்றை உடைத்து, கழுத்தை அறுத்துக் கொண்டார் என தமிழக ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து தகவல் அறிந்த பள்ளப்பட்டி பொலிஸார், அவரை மீட்டு, சேலம் அரச மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததோடு, சம்பவம் தொடர்பாக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-சி)

## மரண அறிவித்தல்

### திருமதி
### நாகேஸ்வரி (விமலா) துரைராஜா



கனகசபை வீதி, மானிப்பாயைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி (விமலா) துரைராஜா நேற்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரை - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைராஜாவின் அன்பு மனைவியும் கமலா, யோகராணி ஆகியோரின் சகோதரியும் ஜெனார்த்(Road Development Authority), பிரணவன் (உயர் தொழில் நுட்பக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும் கஜிதா, தாரணி ஆகியோரின் சிறிய தாயாரும் கிங்ஸ்ரினாவின் பெரிய தாயாரும் சுரேனின் மாமியாரும் வைசாலி, சாகரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2016) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவிளானில்

பகுதியில் அராலி - வல்லை வீதியில் வீதியோரமுள்ள ஞான வைரவர் ஆலயத்திற்கு முன்னால் உள்ள அரசமரத்துடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டது.

இந்த விபத்தில் இருவரும் படுகாயமடைந்த நிலையில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், பின்னிருக்கையில் இருந்து சென்ற மகள் படுகாயங்களுடன் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக, யாழ். போதனா வைத்தியசாலைக்குமாற்றப்பட்டார்.

இதில் உயிரிழந்தவரின் சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(வ-36)

## திருமலை

துடன், கடற்படை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள, விடுதலைப் புலிகளின் கடற்புலிகளால் தயாரித்து பயன்படுத்தப்பட்ட தாக்குதல் படகுகள், கடற்கண்ணி வெடிகள், மற்றும் ஆயுதங்களையும் பார்வையிட்டார்.

கடற்படையின் அதிவேக ரோந்துப் படகில், திருகோணமலைத் துறைமுகத்தின் அமைப்பு மற்றும் அதன் பாதுகாப்பு அம் சங்கள் குறித்தும் வைஸ்அட்மிரல் ஜோசப் ஓகொயின் ஆய்வுகளை மேற்கொண்டார்.

அத்துடன், கடற்படையின் சிறப்புப்படகுப் படையணியின் பயிற்சியாளர்களுடனும் அவர், கடற்போர்முறை தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

(வ-(5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
10 . 06 . 1936



ஆனைமுகன் அடியில்
09 . 04 . 2015

அமரர்
### செல்லையா குஞ்சிதபாதம்
(இளைப்பாறிய ஆசிரியர் திருநெல்வேலி R.C.T.M)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே
நெஞ்சைவிட்டகலாத திருவுருவே
அன்பு மழை பொழிந்து சந்ததிகள் சிறக்க
உழைத்திட்ட உத்தமரே
கரம் கொண்ட தாயவளின் மனம் தொட்ட மன்னவரே
தோள் மீது படர்ந்த பிள்ளைகளின் வளம் சேர்த்த நல்லவரே
விடியலில் விழித்து வருவிருந்தால் புன்னகைக்கும் இனியவரே
வருடமொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் பாசமிகு முகம் மட்டும்
நிழலென தொடர்வதால் கனமும் வாடுகிறது எம் மனது...
உங்கள் பாதங்கள் பணிந்து வணங்கி வாழ்கின்றோம்

உங்கள் ஆத்ம சாந்திக்காக சந்திரசேகரப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி !! சாந்தி !!!

சந்திரசேகரப் பிள்ளையார் கோவிலடி,
நல்லூர் வடக்கு. 077 8768718

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பரான
### செல்லையா பாலச்சந்திரன்
(குஞ்சன்)

அன்னார் கடந்த (26.03.2016) சனிக்கிழமை காலமான செய்தி கேட்டு துயரமடைவதுடன் அவரின் பிரிவால் துயரடைந்துள்ள அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவன்கோயிலடி,
சுன்னாகம்.

சிவகாமி ரான்ஸ்போட்
உரிமையாளர் -
த.இந்திரகுமார் (இந்திரன்)



## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா இராசையா



மடத்தடி கிழக்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா இராசையா நேற்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - காசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் விஜயலட்சுமி (கனடா - 16477131955), செல்வநாயகம் (கனடா - 15142414802 - Vanaja Distribution), இராஜேஸ்வரி (கனடா - 16476934202), இராஜபூபதி (கனடா - 15146261901) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற செல்வராசா (National Development Bank Colombo), ஸ்ரீ ரங்கதுரை (கனடா - 16475012380), கோடீஸ்வரன் (கனடா - 15144690308), வனஜா (கனடா - Knowledge Financial - 15148083142) ஆகியோரின் மாமியாரும் செந்தீபன் (கனடா - 16478879358), ஜெயப்பிரபா (076693321), பிரதாப் (கனடா - 16477418503), சிவதர்சன் (கனடா - 15145714802), சிவப்பிரிந்தன் (கனடா - 15148234802), ஜனநிதி (கனடா - 16474052826), துசானி (கனடா - 14162787011), பிரியந்தன் (கனடா - 14163019336), கீர்த்தனா (கனடா - 15145605758), கவிந்தன் (கனடா - 15148851902), கானுஜன் (கனடா - 15145605758) ஆகியோரின் பேர்த்தியும் ஜெயப்பிரபா - கிருபாகரன் மடத்தடி கிருபா வீடியோ & போட்டோ (0773039652, 0766363310) பேரனும் செந்தீபன் - மிதுனா (கனடா - 16477079558) பேர்த்தியும் சாயா, திபியா, சவின் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி கிழக்கு மடத்தடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி கிழக்கு மடத்தடி.

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுமரன், ஞானமுருகன் முன்னேற்றம் திக்கம் இளைஞரின் கால்பந்தாட்டத்தில்

கரணவாய், மார்ச் 28

திக்கம் இளைஞர் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் என்பன அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**சிவகுமரன் - சரஸ்வதி**

திக்கம் இளைஞர் வி.கழகத்தின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. முதல் பத்து நிமிடங்கள் வரை எந்த அணியாலும் கோல்களைப் பதிவுசெய்ய முடியவில்லை. 12 ஆவது நிமிடத்தில் சிவகுமரன் அணியின் கஜனன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி அணிக்கான முதல் கோலைப் பெற்றுக் கொடுக்க அதுவே முதல்பாதியின் ஒரே கோலாகவும் பதிவானது. இரண்டாவது பாதியில் கோல்கணக்கில் எந்தவித மாற்றங்களும் ஏற்படாத நிலையில் 1:0 என்று சிவகுமரன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

**அண்ணாசிலையடி - ஞானமுருகன்**

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது. ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் சிமித் முதல் கோலைப்பதிவு செய்தார். மேலதிக மாற்றங்கள் எவையும் ஏற்படாத நிலையில் முதற்பாதி முடிவுக்கு வந்தது. இரண்டாம் பாதியில் கிடைத்த வாய்ப்புக்களை இரு அணிகளும் வீணடித்தன.



இருப்பினும் 10 ஆவது நிமிடத்தில் ஜெகதீஸின் உதவியுடனும் 17 ஆவது நிமிடத்தில் பார்த்தீபன் மற்றும் 22 ஆவது நிமிடத்தில் லகின்சன் ஆகியோரின் உதவியுடன் ஞானமுருகன் மேலும் மூன்று கோல்களைப் பதிவு செய்ய முடிவில் அந்த அணி 4:0 என்ற அடிப்படையில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(ம-108)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், மார்ச் 28

**இளைஞர் வி.கழகத் தொடர்**

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நாச்சிமார் கோயிலடி சிறிஅம்பாள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன்பிஅணியை எதிர்த்து அராலி ஜேம்ஸ் அணி மோதவுள்ளது. (ம-108-23)

# இலங்கை - தெ.ஆபிரிக்கா இன்று பலப்பரீட்சை

பெண்களுக்கான ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியை எதிர்த்து தென்னாபிரிக்கா அணி இன்று பலப்பரீட்சை செய்யவுள்ளது. இந்த இரு அணிகளும் இடம்பெற்றிருக்கும் குழு 'ஏ' இல் இருந்து நியூசிலாந்து, ஆஸ்திரேலியா அணிகள் அரையிறுதிக்கு ஏற்கனவே தகுதிபெற்றுவிட்ட நிலையில் இந்த ஆட்டம் ஓர் சம்பிரதாயமான ஆட்டமாகவே அமைந்துள்ளது. இதன்படி தென்னாபிரிக்கா இரண்டு புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் இலங்கை இரண்டு புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும் உள்ளன. (ம)

# மருதநிலா இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 28

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன் யூட் கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான தொடரில் மருதநிலா அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வரும் இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து வடதாரகை அணி மோதிக் கொண்டது. இதில் மருதநிலா அணி 6:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (ம-23)

# கரவெட்டிப் பிரதேச கழகங்களின் மெய்வன்மை முடிவுகள்

கரணவாய், மார்ச் 28

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றி முதல் 3 இடங்களைப் பெற்றவர்களின் விவரங்கள் வருமாறு:-

ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் எஸ்.மாதுஜன் (கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம்) முதலாம் இடத்தையும், கே.ஜெசிந்தன் (மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம்) இரண்டாம் இடத்தையும், என்.நிதர்சன் (அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகம்) மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் எஸ்.தர்மிலன் (சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம்) முதலாம் இடத்தையும், ரி.றொக்சன் (நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம்) இரண்டாம் இடத்தையும் தமதாக்கினர்.

ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் எஸ்.டினோஜன் (அண்ணா சிலையடி வி.கழகம்) முதலாம் இடத்தையும், வி.ரவிவர்மன் (றேஞ்சர்ஸ் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், பி.பிறேம்நாத் (கரவைச் சுடர் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

ஆண்களுக்கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் பி.மதுசன் (அண்ணா சிலையடி வி.கழகம்) முதலாம் இடத்தையும், எஸ்.சிந்துஜன் (அண்ணா சிலையடி வி.கழகம்) இரண்டாம் இடத்தையும் பி.சித்தார்த்தன் (இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம்) மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் பி.மதுசன் (அண்ணா சிலையடி வி.கழகம்) முதலாம் இடத்தையும், பி.சிந்துஜன் (அண்ணாசிலையடி வி.கழகம்) இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர்.

ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டலில் இ.கவிமேனன் (இமையாணன் வி.கழகம்) முதலாம் இடத்தையும் வி.திருபரன் (மைக்கல் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், ரி.அருள்தரன் (மைக்கல் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

ஆண்களுக்கான உயரம் பாய்தலில் எஸ்.ஐங்கரன் (அல்வாய் மனோகரா வி.கழகம்) முதலாம் இடத்தையும், ரி.அருள்குமரன் (கலட்டி ஐக்கிய வி.கழகம்) இரண்டாம் இடத்தையும் ஏ.அபிதன் (அண்ணா சிலையடி வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

ஆண்களுக்கான நீளம் பாய்தலில் எஸ்.மாதுஜன் (றேஞ்சர்ஸ் வி.கழகம்) முதலாம் இடத்தையும், ரி.கோபிராஜ் (மைக்கல் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும் கே.ஜெசிந்தன் (மைக்கல் வி.கழகம்) மூன்றாம் இடத்தையம் கைப்பற்றினர்.

ஆண்களுக்கான முப்பாய்தலில் ரி.கோபிராஜ் (மைக்கல் வி.கழகம்) முதலாம் இடத்தையும், ஜி.ஜெசி (சிறிஅம்பாள் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், அபிசங்கர் (உடுப்பிட்டி சிவகுமரன் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

ஆண்களுக்கான தட்டெறிதலில் ஆர்.நிர்மலேந்திரா (உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.கழகம்) முதலாம் இடத்தையும், எம்.துதிராஜன் (நவஜீவன்ஸ் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், ரி.செந்தாளன் (இமையாணன் மத்திய வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

ஆண்களுக்கான ஈட்டி எறிதலில் ரி.துஸியந்தன் (வதிரி டயமன்ஸ் வி.கழகம்) முதலாம் இட[illegible] ரி.[illegible] (மைக்கல் வி.[illegible]) [illegible] இடத்தையும், ரி.கோபிராஜ் (மைக்கல் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் அண்ணா சிலையடி வி.கழகம் முதலாம் இடத்தையும், மனோகரா வி.கழகம் இரண்டாம் இடத்தையும், சிவகுமரன் வி.கழகம் மூன்றாம் இடத்தையும் தமதாக்கின.

பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டத்தில் எஸ்.சஜிபனா (சிவகுமரன் வி.கழகம்) முதலாம் இடத்தையும், எம்.தர்மினி (மைக்கல் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், கே.கஜிதா (மைக்கல் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டத்தில் என்.ரக்சனா (சிவகுமரன் வி.கழகம்) முதலாம் இடத்தையும், வி.திவானி (டயமன்ஸ் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், எம்.தர்மினி (மைக்கல் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் என்.கோபனா (சிவகுமரன் வி.கழகம்) முதலாம் இடத்தையும், கே.கஜிதா (மைக்கல் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும் தமதாக்கினர்.

பெண்களுக்கான 100 மீற்றர் தடை தாண்டலில் என்.ரக்சனா (சிவகுமரன் வி.கழகம்) முதலாம் இடத்தையும், ஏ.வைஸ்ணவி (மைக்கல் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், எஸ்.நிலக்சனா (சிவகுமரன் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

பெண்களுக்கான உயரம் பாய்தலில் என்.ரக்சனா (சிவகுமரன் வி.கழகம்) முதலாம் இடத்தையும், ரி.சர்மிளா (றேஞ்சர்ஸ் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், கே.பிரதீபா (மைக்கல் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

பெண்களுக்கான நீளம் பாய்தலில் எஸ்.சஜிபா (சிவகுமரன் வி.கழகம்) முதலாம் இடத்தையும், ஏ.வைஸ்ணவி (மைக்கல் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், ஏ.மேரிகோல்டா (டயமன்ஸ் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான முப்பாய்ச்சலில் ஏ.வைஸ்ணவி (மைக்கல் வி.கழகம்) முதலாம் இடத்தையும், வி.திவானி (டயமன்ஸ் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், ரி.மிதுனா (இமையாணன் மத்திய வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

பெண்களுக்கான குண்டெறிதலில் கே.சாமந்தி (மைக்கல் வி.கழகம்) முதலாம் இடத்தையும், எஸ்.கௌசி (சிவகுமரன் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், கே.பிரதீபா (மைக்கல் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

தட்டெறிதலில் கே.சமந்தி (மைக்கல் வி.கழகம்) முதலாம் இடத்தையும், கே.பிரதீபா (மைக்கல் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், எஸ்.கௌசி (சிவகுமரன் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

பெண்களுக்கான ஈட்டி எறிதலில் எம்.சுஜீபா (சிவகுமரன் வி.கழகம்) முதலாம் இடத்தையும், ரி.தர்சிகா (டயமன்ஸ் வி.கழகம்) இரண்டாம் இடத்தையும், எஸ்.கௌசி (சிவகுமரன் வி.கழகம்) மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் சிவகுமரன் வி.கழகம் முதலாம் இடத்தையும், மைக்கல் வி.கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் சிவகுமரன் வி.கழகம் முதலாம் இடத்தையும், டயமன்ஸ் வி.கழகம் இரண்டாம் இடத்தையும் தமதாக்கின.

(ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிங்கவுக்கு ஈடாக எவருமில்லை; இனியும் கடினம் என்கிறார் பெரேரா

மலிங்கவுக்கு ஈடாக யாரும் வரமுடியாது என்று இலங்கை அணியின் சகலதுறை வீரர் திசர பெரேரா தெரிவித்துள்ளார்.

முழங்கால் காயத்தால் தொடர்ந்து அவதிப்பட்டு வந்த முன்னாள் தலைவர் மலிங்க, தற்போது நடந்து வரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இருந்து விலகியிருந்தார். மேலும், அனுபவ வீரர்கள் இல்லாமல் இலங்கை அணி திணறி வருகிறது. இந்த நிலையிலேயே பெரேரா இவ்வாறு வெளிப் படுத்தியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் 'சங்கக்கார, ஜெயவர்த்தனே இடத்தை நிரப்ப எப்படியும் 5 அல்லது 6 ஆண்டுகள் பிடிக்கும். சங்கக்காரா, அணிக்கு வந்த போது கூட சிறப்பாகச் செயற்பட அவருக்கு சில காலம் தேவைப்பட்டது. அதேபோல் ஒரு வீரர் அவர் இடத்தில் நிலைபெற கண்டிப்பாக சிறிது காலம் எடுக்கத்தான் செய்யும். மலிங்க போன்று ஒரு வீரரைப் பெறுவது என்பது இனி சாத்தியமற்றது. அதே போல்தான் கேரத் போன்ற ஒரு சுழல்வீரர் இனிக் கிடைக்கமாட்டார்- என்றார். (ம)

## இந்தியா - பங்களாதேஷ் ஆட்டத்தில் சூதாட்டம்

### என்கிறார் பாகிஸ்தான் வீரர் துசிப்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதிய ஆட்டத்தில் சூதாட்டம் நடந்திருக்க வாய்ப்புக்கள் உள்ளதாக பாகிஸ்தானின் முன்னாள் வீரர் துசிப் அகமது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளார்.

குறித்த ஆட்டத்தில் இந்தியா ஓர் ஓட்டத்தால் வெற்றி பெற்றது. இறுதி மூன்று பந்துகளில் ஓர் ஓட்டத்தைப் பெற முடியாமல் 3 இலக்குகளை இழந்திருந்தது பங்களாதேஷ். இதனையடுத்தே துசிப் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில் - பங்களாதேஷ் ஒன்றும் அனுபவம் இல்லாத அணி கிடையாது. இரண்டு அனுபவமிக்க வீரர்கள் களத்தில் இருந்த போதும், ஓர் ஓட்டம் அடித்து ஆட்டத்தைச் சமன் செய்துவிட முடியாமல் போனது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. ஆட்டம் முடிந்த விதத்தைப் பார்க்கும் போது எனக்கு சரியாகப்படவில்லை. ஐ.சி.சி. அதிகாரிகள் அடங்கிய விசாரணைக் குழு இதை விசாரிக்கவேண்டும் - என்றார். (ம)



## தீவுகளுக்கு அதிர்ச்சி வைத்தியம்; நேற்று வழங்கியது ஆப்கானிஸ்தான்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள், ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 ஓட்டங்களால் வெற்றி பெற்று தீவுகளுக்கு அதிர்ச்சியளித்தது ஆப்கானிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. செசாட்டின் இன்னிங்ஸில் நேற்றுப் பெரிதான அதிரடிகள் இருக்கவில்லை. ஆனால் அவர் ஒரு முனையில் நிலைத்துநின்றார். மறுமுனையில் கானி, ஸ்ரானிக்ஸை, நபி, சென்வாரி நால்வரும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றனர். செசாட் 24 ஓட்டங்களுடன் பத்ரியின் சுழலில் ஆட்டமிழக்க 56 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்தது ஆப்கானிஸ்தான். ஆட்டத்தின் போக்கை அப்படியே மாற்றினார் சடான். பதற்றமில்லாமல் இன்னிங்ஸை கட்டமைத்தார். அவர் 40 பந்துகளில் 48 ஓட்டங்களைக் குவிக்க முடிவில் ஆப்கானிஸ்தான் 123-7. பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பத்ரி 3 இலக்குகளையும், ரசல் 2 இலக்குகளையும், பென், சமி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது தீவுகள். இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறாக அமைந்தாலும் அது அரையிறுதிக்குத் தகுதிபெறும் அணிகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது என்ற காரணத்தினால் கெயிலுக்கு ஓய்வை வழங்கியிருந்தது மேற்கிந்தியத் தீவுகள். ஆரம்ப வீரர்களாக சாள்ஸ், லூயிஸ். ஓட்டம் எதனையும் பெறாது ஆட்டமிழந்தார் லூயிஸ். சாள்ஸை போல்ட் செய்தார் கமிட் கசன். இலக்குச் சரிவுடன் இணைந்து பந்துகளும் வீணடிக்கப்பட ஆப்கானுக்கான வாய்ப்பு அதிகமாகிக்கொண்டே சென்றது. ரசிட் கானிடம் போல்ட் ஆனார் சாமுவேல்ஸ். பிராவோ, ரம்டின் இருவரும் இணைந்து தீவுகளின் தாக்கத்தையும் நிலைபெறச் செய்தனர். இருப்பினும் நீடிக்க இயலவில்லை. 28 ஓட்டங்களுடன் பிராவோவும், 18 ஓட்டங்களுடன் ரம்டினும் ஆட்டமிழக்க இறுதி இரு பந்துப்பரிமாற்றங்களில் 24 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்ற நிலைமை. தீவுகளால் முடிந்தது 17 ஓட்டங்கள் மட்டுமே. பந்துவீச்சில் ஆப்கானிஸ்தான் சார்பாக ரசிட்கான், நபி இருவரும் தலா இரு இலக் குகளையும், கம்சா, சகன், நயிப் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். சடான் ஆட்டநாயகனானார். (ம)



## அனுபவ வீரர்கள்மீது அதிருப்தி தெரிவித்தார் தலைவர் மத்தியூஸ்

ரி-20 உலகக்கிண்ண லீக் ஆட்டத்தில் இலங்கை அணி இங்கிலாந்துடன் அடைந்த தோல்விக்கு அனுபவ வீரர்களின் மோசமான செயற்பாடே காரணம் என்று குற்றம் சுமத்தியுள்ளார் மத்தியூஸ்.

172 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இலங்கை அணி 15 ஓட்டங்களுக்கே 4 இலக்குகளை இழந்து தவித்தது. பின்னர் மத்தியூஸ் 73 ஓட்டங்களை எடுத்து அணியின் வெற்றிக்காக பாடுபட்ட போதிலும், கடைசியில் பயனற்றுப் போனது. குறித்த ஆட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மத்தியூஸ் இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - 'நாங்கள் முதல் 6 பந்துப்பரிமாற்றங்களில் சிறப்பாகப் பந்துவீசினோம். ஆனால் அதன் பிறகு அதிக ஓட்டங்களை வாரி வழங்கி விட்டோம். நாங்கள் ஒவ்வொரு ஆட்டத்திலும் முன்னேற்றம் கண்டு வந்தோம். அணியில் அதிகமாக அனுபவமற்ற இளம் வீரர்கள் உள்ளனர். அவர்கள் தற்போது கற்றுக் கொள்ளும் நிலையிலே உள்ளனர். மேலும், அணியில் உள்ள அனுபவ வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அதை செய்யவில்லை- என்றார். (ம)

## "தலைவராக இருக்கத் தகுதியற்றவன்" விரக்தியினை வெளிப்படுத்தும் அப்ரிடி

பாகிஸ்தான் அணியின் தலைவராக இருக்கத் தான் தகுதி இல்லாதவன் என்று விரக்தியுடன் தெரிவித்துள்ளார் அப்ரிடி.

இந்தியாவில் நடைபெற்று வரும் ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் அப்ரிடி தலைமையிலான பாகிஸ்தான் அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. இந்தத் தொடரில் பங்களாதேஷுக்கு எதிரான ஆட்டத்தில் மட்டுமே பாகிஸ்தான் வென்றது. மற்ற 3 ஆட்டங்களிலுமே தோல்வியடைந்து தொடரை விட்டுவெளியேறியது. இந்தநிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தின் பின்பு ஏற்பட்ட தோல்விக்குப் பிறகு கருத்துத் தெரிவிக்கையிலேயே அப்ரிடி இவ்வாறு வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒரு வீரர் என்ற முறையில் நான் தகுதியானவன். ஆனால் தலைவர் பதவிக்கு நான் தகுதியானவன் கிடையாது. நாடு திரும்பிய பிறகு எனது ஓய்வு முடிவை அறிவிப்பேன். ஊடகங்களால் நான் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளானேன். ஆட்டத்தின் போது எங்களுக்கு உற்சாகம் அளித்த கொல்கத்தா மற்றும் காஷ்மீர் மக்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குச் சிறப்பான உபசரிப்பு அளித்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்- என்றார். (ம)



## தாச்சித் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

சண்டிலிப்பாய் வசந்தசிறி அணிக்கும் நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா 6 புள்ளிகளைப் பெற்றதினால், ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. மேலதிகமாக வழங்கப்பட்ட 5 நிமிடங்களில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 2:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் சங்கானை இளங்கதிர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக்கழக அணி 9:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழக அணிக்கும் நவாலி தென்றல் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழக அணி 11:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

இணுவில் அண்ணா விளையாட்டுக்கழக அணிக்கும் மானிப்பாய் பெஸ்ட் ஹோம் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் மானிப்பாய் பெஸ்ட் ஹோம் விளையாட்டுக்கழக அணி 5:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணிக்கும் தமிழ் ஒளி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக அணி 11:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணிக்கும் மாவைகலட்டி உதயதாரகை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில், புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி 9:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

உடுவில் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் மயிலிட்டி கலைமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது.

(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஸியை ஆட்டிப்படைத்து அரையிறுதியில் இந்தியா

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இந்தியா, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றி பெற்ற இந்திய அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக கவாயா மற்றும் பின்ஞ். நெக்ராவின் பந்தில் பவுண்டரியுடன் ஆஸ்திரேலியாவின் இன்னிங்ஸை ஆரம்பித்தார் கவாயா. அந்த நான்கு ஓட்டங்களே முதல் பந்துப்பரிமாற்றத்தில் பெறப்பட்ட ஒட்டுமொத்த ஓட்டங்களுமாகும். பும்ரா வீசிய இரண்டாவது பந்துப்பரிமாற்றத்தில் நான்கு பவுண்டரிகளை விளாசினார் கவாயா. அஸ்வினின் முதல் பந்துப்பரிமாற்றத்தில் அடுத்தடுத்து இரு சிக்சர்களை விளாசினார் பின்ஞ். நான்கு பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஆஸ்திரேலியா 53-0 ஆஸ்திரேலியா 228 ஓட்டங்களை எட்டும் என்று கணிக்கப்பட்ட நிலையில், கவாயாவை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் நெக்ரா. வோர்ணரை வெளியேற்றினார் அஸ்வின். யுவராஜ் சிங்கிடம் வீழ்ந்தார் ஸ்ரீவ் சிமித். பந்துப்பரிமாற்றத்துக்கு ஆறு ஓட்டங்கள் என்றவாறாக நகர்ந்தது ஆஸ்திரேலியாவின் இன்னிங்ஸ். ஆரம்ப வீரர்களிடம் இருந்த அதிரடி மத்திய வரிசையில் அறவே இல்லை. மக்ஸ்வெல், வற்சன் இருவரையும் கட்டிப் போட்டனர் இந்தியப் பந்துவீச்சாளர்கள். முடிவில் ஆஸ்திரேலியா 160-6. அதிக பட்சமாக பின்ஞ் 43 ஓட்டங்களையும், மக்ஸ்வெல் 31 ஓட்டங்களையும், கவாயா 26 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பாக பாண்டியா 2 இலக்குகளையும், நெக்ரா, பும்ரா, அஸ்வின், யுவராஜ் நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்கு களமிறங்கியது இந்தியா. ரோகித், தவான் இருவரும் சிறிது தடுமாற்றம் காட்டினர். தவானை வெளியேற்றி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் கட்டர் நைல். ரோகித்தை வெளியேற்றினார் வற்சன். அதிகம் துள்ளிக் குதிக்கவும் செய்தார். களத்தில் இந்தியாவின் தற்போதைய ரண் மெசின் கோக்லி. பந்துகளை பழக்கப்படுத்திப் படிப்படியாக ஆட்டத்தை ஆரம்பித்தார். ரெய்னா பத்து ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், கோக்லிக்கு பக்கபலமாய் இருந்தார் யுவராஜ். தசைப்பிடிப்பு யுவராஜை ஆட்கொள்ள இரு ஓட்டங்கள் பெறப்படும் இடத்தில் ஓர் ஓட்டம் மட்டுமே பெறப்பட்டது. 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் யுவராஜ். களத்தில் டோனி. இறுதி 3 பந்துப்பரிமாற்றத்தில் 43 ஓட்டங்களைப் பெறவேண்டும் என்ற நிலைமை. பல்க்நெர், கட்டர் நைலின் பந்துப்பரிமாற்றங்களை முறையாகக் கவனித்து இந்தியாவின் வெற்றியை உறுதி செய்தார் கோக்லி. பவுண்டரியுடன் ஆட்டத்தை முடித்தார் டோனி. கோக்லி 82 ஓட்டங்களுடனும், டோனி 18 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். கோக்லி ஆட்டநாயகனானார்.
எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதியில் நியூசிலாந்தும் இங்கிலாந்தும், 31ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது அரையிறுதியில் இந்தியாவும் மேற்கிந்தியத் தீவுகளும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.
(ம)

## றோய், வில்லி இருவருக்கும் அபராதம் விதித்தது ஐ.சி.சி.

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விதிமுறைகளை மீறிமைக்காக, இங்கிலாந்துத் துடுப்பாட்ட வீரர் ஜேஸன் றோய், அவ்வணியின் வேகப்பந்து வீச்சாளர் டேவிட் வில்லி இருவருக்கும் சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் (ஐ.சி.சி.) அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.
ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜேஸன் றோய், இலங்கையின் சுழற்பந்து வீச்சாளரான ஜெப்றி வன்டர்சேயின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்ததாக நடுவரால் தீர்ப்பு வழங்கப்பட்டது. தனது ஆட்டமிழப்பை மறுத்த றோய், நடுவரின் தீர்ப்புக்கு எதிராக சைகைகளை வெளிப்படுத்தியதுடன் மைதானத்தை விட்டு வெளியேறும் போது, தனது துடுப்பையும் தலைக்கவசத்தையும் நிலத்தில் எறிந்திருந்தார். நடுவரின் தீர்ப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தமைக்காக, குறித்த ஆட்டத்துக்கான அவரது ஊதியத்தின் 30 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.
இதேவேளை, வேகப் பந்துவீச்சாளர் டேவிட் வில்லி, இலங்கையின் மிலிந்த சிறிவர் தனவை ஆட்டமிழப்புச் செய்த பின்னர், மைதானத்தை விட்டு வெளியேறும்படி சமிக்ஞை செய்தமைக்காக குறித்த ஆட்டத்துக்கான அவரது ஊதியத்தின் 15 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.
(ம)






## இலங்கைக்கு கடும் நெருக்கடி; ஆப்கானுடன் போட்டியிடும் நிலை

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதி லீக் ஆட்டத்தில் இலங்கை -தென்னாபிரிக்கா அணிகள் இன்று பலப்பரீட்சை செய்கின்றன. இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறாக அமைந்தாலும் அது அரையிறுதிக்குச் செல்லும் அணிகளில் மாற்றத்தைக் கொண்டு வராது. ஆயினும் தென்னாபிரிக்காவை வீழ்த்த வேண்டும் என்ற ஒருவித கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது.
இலங்கை இடம்பிடித்திருக்கும் குழுவில் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் இரண்டும் தலா மூன்று வெற்றிகளைப் பெற்று ஆறு புள்ளிகளுடன் அரையிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளன. தென்னாபிரிக்கா, இலங்கை, ஆப்கானிஸ்தான் மூன்றும் ஒரு வெற்றிக்குரிய இரண்டு புள்ளிகளுடன் முறையே மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களில் உள்ளன. இன்றைய ஆட்டத்தில் இலங்கை வெற்றி பெற்றால், இலங்கை மூன்றாவதுக்கு முன்னேறும் அதேநேரம், தென்னாபிரிக்கா நான்காவதுக்குத் தள்ளப்படும். ஆப்கானிஸ்தானை விட தென்னாபிரிக்காவுக்கு ரண்ரேட் மிக அதிகம் என்பதால் தென்னாபிரிக்கா இறுதி இடத்துக்குச் செல்ல வாய்ப்பில்லை. தென்னாபிரிக்கா ஓரளவு ஓட்ட வித்தியாசத்திலோ அல்லது சில பந்துப்பரிமாற்றங்கள் மீத மிருக்க வெற்றிபெற்றாலோ அந்த அணி மூன்றாவது இடத்தில் தொடர்கின்ற அதே நேரம், இலங்கை கடைசி இடத்துக்குப் பின்தள்ளப்பட்டு ஆப்கானிஸ்தான் நான்காவது இடத்தைப் பெறவும் வாய்ப்புண்டு. நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய இலங்கை, தனது கௌரவத்தை ஓரளவு தக்கவைக்க வேண்டுமாயின் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறுவது அவசியம்.
(ம)

## தோல்வியுடன் விடைபெற்ற வற்சன்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்துடன் சர்வதேச ஆட்டங்களுக்கு விடைகொடுத்தார் வற்சன்.
ரி-20 உலகக்கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறுவதை ஏற்கனவே உறுதி செய்திருந்தார் வற்சன். நேற்றை இறுதி லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலியா தோல்வியடைந்து அரையிறுதி வாய்ப்பைத் தவற விட்டது. இதனால் வற்சனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவுக்கு வந்ததாகக் கருதப்படுகிறது.
(ம)

இந்தியன் ரெறாசோ சிப்ஸ்
விற்பனை மொத்த விலை
ரூபா 1100/=, 1200/=
"மாபிள்ஸ்"
சுழிபுரம் பத்திரகாளி கோயில் சந்தி, கண்டாமை,
தொல்புரம்.
077 9541877, 077 355 3372

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org